320

# ATHONDAI CHOLAN

BY

**T. C. PARTHASARATHY AYYANGAR,**

*Tamil Lecturer, Christian College, Madras.*

MADRAS

**M. HAMSWORTH & Co.,**

K-SELLERS & PUBLISHERS, TRIPLICANE

1927

Price As. 12.

# ஆதொண்டைச் சோழன்.

JUL 1927
MADRAS

கிறித்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்,

T. C. பார்த்தஸாரதி அய்யங்கார்

எழுதியது.

M. ஹாம்ஸ் ஒர்த் கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

பதிப்புரிமை] [விலை அணா 12.

# நூன்முகம்

---

இச் சரிதம், நமது மாக்ஷிமை பொருந்திய கவர்ன்மென்டாரின் லைப்ராரியிலிருந்து எடுத்து எழுதப்பட்டது. இஃது ஒரு பழைய சோழவரச சிகாமணியின் திறமையைப் புலப்படுத்துவது, பண்டைக்காலத்துத் தமிழ்ச் சரிதங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இது பள்ளிச் சிறுவர்களுக்கென்றே எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டுள்ளது. இது படிக்கும் மாணவர்களுக்குப் பண்டைய வரசரின் தீரச் செய்கைகளைச் செவ்வையாய் உணர்த்தி, நல்லறிவு புகட்டக்கூடியது. இக் கதையானது தொண்டைநாட்டைப் பற்றியே மிகுதியும் காணப்படுகிறது. இதனைக் கல்விக் கழகங்களில் பாட புத்தகமாக வைத்து ஆதரிக்க அறிஞர்களை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

T. C. P. SARATHY.
Lecturer in Tamil, Christian College, Madras.

V2lICL
N27
77918

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JUL 1927
MADRAS

உ

முருகன் துணை.

# சோழநாடு

தமிழ் நாடானது, வெகுகாலம் வரையில் சோழமண்டலம் பாண்டிமண்டலம் சேரமண்டலம் என மூன்று பிரிவினை உடையதாக விருந்தது. அவைகள் முடியுடை மன்னர்களான சேர சோழ பாண்டியர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தன. சோழமண்டலம் முழுவதும் மருத நிலத்தாற் சூழப்பட்ட பல கிராமங்களை யுடையது. காவிரி நதியானது பல வாய்க்கால்களாக ஓடிப் பாய்வதினால், நெல், கரும்பு, வாழை, தென்னை, கமுகு முதலியன எங்கும் செழித்துத் தழைத்து வளரும். இக்காவிரி நதியானது குடகு மலையின்மீது உற்பத்தியாகி, அம் மலையின்மேலுள்ள பல வளங்களையும் வாரிக்கொண்டு வருவதால், அந்நாடு மலைவளங்கள் மிக்கதாகும். மற்றும், இந்நாடு கீழ்க்கடலின் அருகாமையில் இருந்ததால், பல கடல்வளங்களும் பரவிப் பொலிந்து பூமகளுக்குத் திலகம் போலிருந்தது.

இந்நாட்டில் புகழ்ச்சியும் போகமும் பொருந்தி நிலைபெற்று விளங்கிவந்தது புகார் என்னும் ஒரு பட்டினம். இது சோழவரசர்களுக்குப் பழைய இராஜதானியாக விருந்தது. அது காவிரி கடலுடன் கலக்கும் சங்கமுகம் என்னும்

துறையை உடையது. இதற்குக் காவிரிப்பூம் பட்டினம் என்றும் ஒரு மறுபெயர் வழங்கும். புறநகரில் எங்கும் பலவிதமான மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் நிறைந்து நானாதேயத்தவர்கள் திரண்டு, திறமைவாய்ந்த கைத்தொழிலாளர்களாற் செய்யப்பட்ட விசித்திரமான பதுமைகள் நிரைந்தும், கால்வைத்துச் செல்வதற்கும் முடியாமல் கண்களைப் பரித்து இழுக்கும்படியாக விருந்தன. அங்குகூடி வியாபாரஞ் செய்யவந்திருக்கின்ற வியாபாரிகளின் கூச்சல் கடலொலியையும் அடக்கி எழுந்தது. அப்பட்டினத்தின் உட்புறத்தில் குமரக் கோட்டம், வாசவன் கோட்டம், சிவன் கோட்டம், திருமாற் கோட்டம், பலதேவர் கோட்டம், காளி கோட்டம் முதலிய தேவாலயங்கள் நிரைந்து இருந்தன; அவைகள் ஒவ்வொன்றிலும் நித்திய நைமித்தியங்கள் குறைவின்றி நடந்து வந்தன.

இத்தன்மைவாய்ந்த இராஜதானியில் இருந்து அரசாண்ட சோழமன்னர்கள் பலர். அவர்கள் எல்லாரும் சூரிய குலத்தவர் என்று கொள்ளப்படுவர். இவர்கள் பரம்பரையாக அணிவது ஆத்திமாலை. இவர்கள் கொடி புலிக்கொடி பொறித்தது. இவ்வரசர்கள் அறத்தினும் மறத்தினும் ஆற்றலினும் மிக்கவர்கள். இவ்வரசர்களில் அநேகர் சைவசமயத்தையே நற்சமயமென்று பின்பற்றி யொழுகிவந்தவர்; ஒரு சிலர் மாத்திரம் திருமாலடியவராக விருந்து வந்தவர்களாகப் பழைய சரிதங்களாற் றெரிகின்றன.

இந்தச் சோழகுல மன்னர்களில் அக்காலத்துச் சிறப்புற்றிருந்தவர்கள் கரிகாலன், பெருநற்கிள்ளி, கோச்செங்கணன் என்போர்.

இடையில் கி. பி. 4-ம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில், பல்லவராஜாக்கள், காஞ்சிபுரம், மல்லா



புரம் முதலிய இடங்களை ராஜதானியாகக்கொண்டு, மேம்பட்டிருந்தனர். அக்காலத்தில் சோழர்கள் பல்லவர்களுக்குக் கீழே சிற்றரசர்களாய்க் காலங் கழித்து வந்தனர். பின்னர், சில வருடங்கள் பொறுத்து விஜயாலயன் என்னும் சோழன் தஞ்சாவூரைப் பிடித்து, அதைத் தனக்கு ராஜதானியாக்கிக் கொண்டான். அவன் பிள்ளைக்கு ஆதித்தன் என்று பெயர். அவ்வாதித்தன் மகனாகிய முதற்பராந்தகன் கி-பி. 906-7. (பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசுபெற்று), நாற்பது வருஷகாலம் ராஜ்யத்தைக் கண்ணினுஞ் சிறந்ததெனக் கவனித்துச் சிறிதும் வளங்குறையா வண்ணம் பல்லாற்றானும் பெருக்கிச் சீர்செய்து, அகிலம் புகழ வரசாண்டிருந்து. 947-ல் பரலோகப் பிராப்தியடைந்தான். இவனுடைய காலத்தில் சோழராஜ்யம் எல்லாரும் போற்றுமாறு பிரபலம் அடையத் தலைப்பட்டது.

இப் பராந்தகன் பரம்பரையில் நற்கீர்த்தியை அடைந்தவர்கள் ராஜராஜனும் அவனுடைய செல்வக் குமாரன் பரகேசரிவர்மன் என்னும் முதலாம் ராஜேந்திரனுமேயாம். இவர்களுள், முன்னர் கூறிய ராஜராஜன் சுமார் ஆயிரம் கல்விமான்களைத் தன்னிடம் வைத்துக்கொண்டு, அவர்கள் வேண்டுவன வளித்துக் கல்வி யமுதுண்டு, ஆதரித்து வந்தான். இவ்வரசனையே திருமுறைகண்ட சோழன் என்பர். இவனே முன்னர் பிரஹதீசுரம் என்னும் பெயர்வாய்ந்த பெரிய சிவாலயத்தைக் கட்டிவைத்தவன். இவ்விராஜராஜன் தன் முதுமையை நோக்கித் தன் மகனாகிய முதலாம் இராஜேந்திரனை ஆயிரத்துப் பன்னிரண்டாம் வருஷத்தில் சிங்காதனத்தில் ஏற்றி, அகம் மகிழ்ந்தான். இந்த இராஜேந்திரனையே கங்கைகொண்ட சோழன் என்று சொல்லுவர்; இவனுக்கு நான்கு பிள்

ளைகளுண்டு. அதில் மூன்று ஆண்மகவும் ஒன்று பெண் மகவுமாம். அப்பிள்ளைகளில், முதற் குமாரனுக்கு இராஜாதிராஜன் என்றும், இரண்டாங் குமாரனுக்கு இராஜேந்திரதேவனென்றும் மூன்றும் குமாரனுக்கு வீரராஜேந்திரதேவனென்றும் முறையே பெயர் கூறுவர். இம் மூவரும் முறையே, ஆயிரத்து பதினெட்டிலிருந்து, ஆயிரத்து ஐம்பத்து இரண்டாம் ஆண்டுவரையிலும், ஒன்றாகவிருந்து அரசு புரிந்தும், அப்பால் அதிலிருந்து ஆயிரத்து அறுபத்திரண்டாம் ஆண்டுவரையிலும் ஒவ்வொருவராக ஆட்சிபுரிந்து வந்ததாகத் தெரிகிறது இவர்களுடன் நாலாவதாக வந்து பிறந்தவள் அங்கமாதேவி. அவளைச் சளுக்க தேயாதிபதியான முதலாம் ராஜ ராஜன் கடிமணம் புரிந்துகொண்டான். இப் பெண்மணி பொறுமையிற் பூமாதையும் பொலிவிற் பூவின் மாதையும் தோற்கடித்து விளங்கினள். இம்மாது சிரோமணியின் மணிவயிறே முதலாங் குலோத்துங்கன் பிறப்பதற்கு இடமாக விருந்தது. இந்தக் குலோத்துங்க சோழனே முதலாம் இராஜேந்திரனுடைய இரண்டாவது குமாரனின் மகளாகிய மதுராந்தகி எனும் மாதுசிரோரத்தினத்தை மாநிலத்தார் மனம் மகிழும்படி மாங்கலியதாரணஞ் செய்து மகிழ்ந்திருந்தான். இவன் மிகவும் வீரன்; உயுத்தமெனில் இருநூறுமையில் சென்று இளைப்பில்லாமல் மீளுந்தன்மை யுடையவன். இவனே இளமையில் வேங்கை நாட்டிற்கு இளவரசனாக விருந்தவன்.

மேலே கூறிய வீரராஜேந்திரனுக்கு அதிராஜேந்திரன் என்று பெயருள்ள ஒரு ஆண் மகவும், அருமைவல்லி என்னும் ஒரு பெண்மகவும் இருந்தன. அவ்வருமைவல்லியோ அழகில் இலக்குமியையும், அன்பிற் றயாதேவியையும், கற்பிற்



கண்ணகியையும் நிகர்த்து விளங்கினள். இப்பேரழகியைப் பெற்ற சோழபூபதி இவளுக்குத் தக்க கணவன் வேண்டுமே எனத் தவித்துக் கொண்டிருக்கும்போது, தன்னாட்டாரின் வாக்கால் குந்தளராஜனை விக்கிரமாதித்தன் வீரப்பிரதாபங்களை எல்லாம் கேள்விப்பட்டுத் தன் மகளை அவனுக்குக் கலியாணஞ் செய்துவிப்பித்தான். பின்னர் வீரராஜேந்திரன் குலோத்துங்கன் மீது பொறாமைகொண்டு வேங்கை நாட்டின்மீது படையெடுத்து, அவ்விளைய வீர சிங்கத்தை வெற்றி பெற்று, அவனுடைய சிறிய தகப்பனாகிய விஜயாதித்தனை அந்த நாட்டை ஆளும்படி நியமித்தான். அதனால் இளவரசனாகிய குலோத்துங்கன் மனம் நொந்து மாசடைந்து நாடிழந்து நலம் துலைந்து துன்புற்றிருந்தான்.

அப்போது வீரராஜேந்திரன் மிகவும் உன்மத்தனாகிப் பிறரை மதியாமல் சோழ ராஜ்யத்தை அரசு புரிந்து வந்தான். பின்பு, அவன் வயதின் முதிர்ச்சியாற் றளர்வடைந்து தன் மகனாகிய அதிராஜேந்திரனைப் பலரும்போற்றச் சிங்காதனம் ஏற்றித் தான் பரலோக பதவி யடைந்தான். இச் செய்தியைக் கேள்விப்பட்ட குலோத்துங்கன் தான் அடைந்திருக்கும் ஏழைமைத் தன்மை இன்றோடு தொலைந்ததென்று பெருமகிழ்ச்சியுடன், சோழ நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அதிராஜனை அந்தகன் உலகிற்கு அனுப்பிவிட்டுச் சோழ ராஜ்யத்திற்கு அதிபதியானான். தன் மைத்துனன் குலோத்துங்கனால் வாழ்நாள் அழிந்தான் என்பதைத் தெரிந்து, குந்தள ராஜனை விக்கிரமாதித்தன் மிகவும் வும் கோபத்துடன் இவனைத் தண்டிக்கவேண்டுமென்று தன் படையோடு வந்து முற்றுகை செய்து, பின்னர் சண்டையில் குலோத்துங்க மன்னனால் தோல்வியடைந்து திரும்பிவிட்

டான். குலோத்துங்கன் தந்தை, பரம்பரையால் சளுக்க வம்சத்தினற்கும் தாயின் வழியால் சோழவம்சத்தினற்கும் சம்பந்தப்பட்டவன்; இதுபற்றி இவனை உபய குலோத்துங்கன் என்றுங் கூறுவது வழக்கம். அன்றியும், இக்குலோத்துங்கனுக்குச் சில காரணங்களால், அநபாயன், அபயன், கரிகாலன், ஜயதரன் முதலிய பெயர்கள் வழங்குவதுண்டு. இராஜேந்திர தேவன் மகளாகிய தன் மாமன் மகள் மதுராந்தகியையே கலியாணஞ் செய்துகொண்டு அவளை பட்டமஹிஷியாக்கினான். அவனுக்கு வேறொரு பெயரும் உண்டு; அதாவது தீனசிந்தாமணி என்பர். தவிர, குலோத்துங்கனுக்குத் தியாகவல்லி, ஏழிசைவல்லபி என இரண்டு மனைவியரும் இருந்தார்கள். மதுராந்தகி தேகம் வாட்டமடைந்து, பிணியால் துன்புற்றுப் புத்திரப்பேறில்லாமல் இறந்தாள். அதன்பிறகு தியாகவல்லி பட்டமஹிஷியானாள். இம்மாது சிரோமணிக்கே ஏழு மக்கள் பிறந்தது. பின்னர், குலோத்துங்கன் இவளுடன் சகல சம்பிரமாக ஆயிரத்து எழுபதாவது ஆண்டு முதல் ஆயிரத்து நூற்றுப் பத்தொன்பதாவது ஆண்டு வரையில் உலகில் யாவருங் கொண்டாடும்படித் தனியரசு நடாத்தி வந்தான். இக் குலோத்துங்கனை முதற் குலோத்துங்கனென்றுங் கூறுவர் சிலர்.

அக்குலோத்துங்கன் வடநாட்டு ஆரிய வரசர்களின்மேற் படையெடுத்துச் சென்று, அவர்களை எல்லாம் தனக்குக் கப்பம் கட்டும்படிச் செய்துகொண்டு, பின்பு பாண்டிய சேர தேசத்து மன்னர்களோடு மாறுகொண்டு, அவர்களைப் போரிற் புறங்காட்டியோடும்படி அடித்து, சிலகாலம் தன்னை எதிர்ப்பாரில்லாமல் இருந்தான். அப்பால், சிலநாட்கள் சென்றவளவில், கலிங்கத்தரசன் மிகவும் இறுமாப்புக்கொண்டு கப்பம் கட்டாமையைத் தன் சேவகரால் அறிந்து, உறங்கிக் கிடக்கும்



சிங்கமானது பசியால் இரைதேடப் புறப்படுவதுபோலச் சீறி எழுந்து கலிங்கத்தை நோக்கிப் புறபட்டான். அப்பொழுது, கருணாகரத்தொண்டைமான் என்னும் பெயர்வாய்ந்த அவனுடைய தண்டத்தலைவனும், அவன் மகன் விக்கிரமச் சோழனும், 'அரசே! இந்த அற்பக் காரியத்திற்காகத் தாங்கள் போகவேண்டுமா? எங்களுக்குக் கட்டளை கொடுத்தால், இதோ சென்று அக்கலிங்கத்தை ஜெயித்துவிட்டு வருகின்றோம்' என்று வருந்திக் கேட்டுக்கொண்டார்கள்.

அதற்குக் குலோத்துங்கன், தன் மகனை நோக்கி, 'நீயோ இளமை மாறாதவன்; உன்னால் எங்ஙனம் அக் கலிங்கத்தரசனை வெல்லமுடியும்; அன்றியும் உன்னுடன் வருவதாகக் கூறிய அக்கருணாகரத் தொண்டைமான்தான் என்ன செய்வான்; எதற்கும் நானே சென்று வருகிறேன்' என்றான். அப்போது விக்கிரமச் சோழன் தன் தந்தையைச் சாஷ்டாங்கமாக வணங்கி, 'ஐய! புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? சோழ குலத்தில் பிறந்த பிள்ளைகள் பகைவரைக் கண்டு நடுங்குவதுண்டோ! என்னையும் விராடபூபதியின் குமாரன் உத்திரன் என்று நினைத்தீரோ! அப்படி எண்ணிவிடல் வேண்டாம். அருச்சுனனுக்குப் பிறந்த அபிமன்யுவென்றே எண்ணி என்மீது கிருபை புரிந்து போருக்கனுப்பல் வேண்டுமென்று போற்றினான். குலோத்துங்கன் தன் அருமை மைந்தன் கூறிய வீரமொழிக்கும், தீர மனத்திற்கும் மெச்சி, கருணாகரத் தொண்டைமானை அவனுக்குச் சகாயமாகச் சேர்த்து நாற்படை சூழக் கலிங்கத்திற்கு அனுப்பினான். விக்கிரமன் விண்மீன் நடுவண் தண்மதியன்னத் தேரேறிக் காடும் மலையுங் கடந்து சென்று கலிங்க ராஜ்யத்தின் எல்லையைக் குறுகினான். அது தெரிந்த கலிங்கமன்னன், உடனே தன்னுடைய பரிவாரங்கள் சூழ

விக்கிரமனை வந்து எதிர்த்தான். இருதிறத்துச் சேனையும் வடகடலுந் தென்கடலும் சேர்ந்து கோஷிப்பது போலவும், பிரளயகாலத்துச் சப்திக்கும் மேகம்போலவும், கர்ச்சனை புரிந்தன. படை வீரர்களும் வீரவாதஞ் செய்துகொண்டு உயுத்தத்திற்கு ஆரம்பித்தனர். இரண்டு பக்கத்துப் படைகளும் கோர யுத்தஞ்செய்து, பின்வாங்காமல் நீண்டகாலங் கடப்பதைக்கண்ட விக்கிரமச் சோழனுக்கு ஆக்கிரம் பொங்கி யெழுந்தது; அவன் உடனே தன் பகைஞர் படையிற் புகுந்து, அங்குள்ளவர்களை யெல்லாம் தன் கைவாளிற்கு விருந்திட்டான்.

அந்தக் கொடுஞ்செயலைக் கண்ட கலிங்கமன்னன், என்ன இவ்விளவீரன் செய்யும் உயுத்தம் ஆற்ற முடியாதுபோ யிருக்கின்றதே; இவனுடன் நாம் போர்செய்யத் துணிந்தால் கடைசியாக எப்படி முடியுமோ? நல்லது, ஆறிலும் சாவு, நூறிலும் சாவு, என்னும் பழமொழிபோல் எதுவரினும் வரட்டும், நாம் சும்மாவிருப்பதைக் காட்டிலும் வீரத்தைக்காட்டி வாளை யொழிப்பதே தகுதி என ஓடோடியும் வந்து விக்கிரமச் சோழனை எதிர்த்துப் போர்செய்து தோல்வியடைந்தான். பின்னர், விக்கிரமன் அக்கலிங்க நாட்டைத் தன் கீழ்ப்படுத்திக்கொண்டு, சோழ நாட்டிற்குத் திரும்பிவந்தான்.

குலோத்துங்கன் தன் மகன் அடைந்த வெற்றியைக் கேட்டு, அளவில்லாத ஆனந்தமடைந்திருந்தான்; அவன் தான் அடைந்த ஆனந்தத்தையும், தன் புதல்வன் போர் திறத்தையும் தன்னவைக்களத்தில் எடுத்துச் சொல்லவேண்டும் என்கிற எண்ணத்துடன், மறுநாட்காலையில் இராஜசபைக்கு எல்லோரையும் வந்து சேரும்படியாகக் கட்டளையிட்டான்.

அவ்வாறே நாட்டாரும் நகரத்தாரும் திரண்டு வந்து



சேர்ந்தார்கள். அங்கு, அவரவர்களுக்கென அமைக்கப்பட்டிருக்கும் ஆசனங்களில் அவரவர்கள் அமர்ந்தார்கள். அன்று அச்சபை அயிந்திராணியின் தலைவன் சபைபோலப் பொலிந்து விளங்கிற்று. அப்போது அரசன் தனது தோழர்களான சேக்கிழார், ஜயங்கொண்டார், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய பல புலவர் திரளுடன் அம்மண்டபத்திற்கு வந்தான். அங்கு திரண்டிருந்த நாட்டாரும் நகரத்தாரும் எழுந்திருந்து அரசனுக்குச் செய்யத்தக்க மரியாதைகளைச் செய்து அமர்ந்தனர்.

இவற்றையெல்லாம் பெற்றபின்பு, குலோத்துங்கன் அச்சபையோர்கள் மனம் மகிழும்படி தனதுகுமாரன் போர்த்திறத்தைப் புகழ்ந்து சொல்லினன். அப்பொழுது, அங்குள்ளவர்கள் எல்லாம் ஆச்சரிய மடையும்படியும், விக்கிரமச்சோழன் புகழ்ச்சி உலகுள்ளளவும் நிலைபெற்று நிற்கும்படியும் அவன் மீது, ஆசுகவியாக,

பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ்தரப்
பாமாலை மலிந்த பருமணித் திரள்புயத்
திருநிலை மடந்தையொடு ஜயமகளிருப்பக்
கனவரை மார்பம் தனதெனப் பெற்றுத்
திருமகள் ஒருதனி இருப்பக், கலைமகள்
சொற்றிறம் புணர்ந்த கற்பினளாகி
விருப்பொடு நாவகத் திருப்பத், திசைதொறும்
திகிரியொடு செங்கோல் நடப்பக், குளத்திடைத்
தெலுங்க வீமன் விலங்கல்மிசை ஏறவும்
கலிங்கபூமியைக் கனையெரி பருகவும்
ஜம்படைப் பருவத்து வெம்படைத் தாங்கியும்
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை அடிப்படுத் தருளித் தென்னிசைத்
தருமமும் தவமும் தானமும் தழைப்ப"

என்று உலாப்பாடினர் ஒட்டக்கூத்தர். மற்றும் இவ்வொட்டக் கூத்தப் புலவரே குலோத்துங்கனுக்கு ஆசிரியராக விருந்தவரென்பர்; அவன் முடிதரித்தபோது ஒட்டக்கூத்தர் அவனைப் புகழ்ந்து,

"ஆடுங் கடைமணி நாவசையாமல் அகிலமெங்கும்
நீடுங் குடையைத் தரித்த பிரான் இந்த நீணிலத்தில்"

என்று இரண்டடியைச் சொன்னவளவில், அரசன்,

"பாடும் புலவர் புகழ் ஒட்டக்கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென்றே யெனைச் சொல்லுவரே"

என்று பாட்டை முடித்ததாகப் புலவர் கன்னபரம்பரை வழங்கி வருகின்றது. கம்பநாடரும் குமாரகுலோத்துங்கன் என வழங்கும் இவ்வரசன் காலத்தவர் என்றே ஏற்படுகின்றது.

அன்றியும், இக்கம்பரின் காலத்தைப்பற்றிப் பலவர் பல வாறு தனது புத்திக்கு எட்டியவாறு ஆராய்ச்சி செய்து வெளிப்படுத்தியுள்ளார்களேனும், கொங்குமண்டல சதக நூலாசிரியர்,

"கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள் கண்ணின் முனே
பொன்னி கரைகடந் தாளெனு நிந்தை புவியிலுளோர்
பன்னி யிகழா தமரெனக் கம்பரோர் பாச்சொலச் செய்
மன்னிய கங்கைக் குலத்தாரும் வாழ் கொங்கு மண்டலமே"

என்னும் ஒரு பாடலைப் பாடியிருப்பதாயும், இச்செய்தி நடந்தது குலோத்துங்கன் காலத்தில், காவேரி நதி பெருகி வெள்ளங் கடந்தது. இதனால் அந் நதியின் இரு கரையிலுமுள்ள



பல கிராமங்களும் நகரங்களும் பாழ்படத் தொடங்கின. அது கண்ட வரசன் மனம் வேறுபட்டுத் தன்னுடைய பரிசனங்களை அனுப்பிக் கரைக்கு அணைபோடும்படி ஏவினன், அதிகாரிகள் குடிகளை உடன் அழைத்துக்கொண்டு நதிக்கரைக்குப்போந்து, கரையைக் கட்டத் தொடங்கினார்கள். அது நிற்கவில்லை. குடிகளாகிய வேளாளர்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்தது, அதிகாரியை நோக்கி, 'ஐயா! தெய்வப் புலமைவாய்ந்த நம் கம்பர் ஒரு பாடல் பாடினால் கரை நிற்கும் என்றார்கள். பின்பு, அரசன் வேண்டுகோளுக்கிணங்கிய கம்பர் அவ்வாறே மேற்கூறிய பாடலைப்பாடினர் என்றும், அதற்காக மன்னன் மகிழ்ச்சியடைந்து, கம்பருக்கு ஒரு பரிசுசெய்ய விரும்பினான். அப்போது, கம்பர் அரசனது குறிப்பை அறிந்து, புன்னகை புரிந்து, அரசே! எப்பொழுதும் அரசனும் குடிகளும் நினைக்கத் தக்கதாக இருக்கவேண்டும். ஆதலின், குடிகள் கலியாண வரி ஒன்று அரசாங்கத்திற்கு வெகு நாட்களாகச் செலுத்தி வருகின்றார்கள். அதை, இதற்கு உதவுவதேபோதும்' என்றனர். உடனே குலோத்துங்க சோழன் அவரது தரும சிந்தனைக்கும் குடிகளிடம் அவர் கொண்டிருக்கும் பக்ஷத்திற்கும் மெச்சி ஒரு சாசனம் எழுதிக் கையெழுத்து இட்டுக் கொடுத்தனன். கம்பர் உடனே அரசனைப் பல முறை வாழ்த்தித்தான் அவனிடம் பெற்ற சிலாசாசனத்தைக் குடிகளிடம் கொடுத்துத் தமிழை வளர்த்து வாருங்கள் என்று கட்டளையிட்டு அப்பாற் சென்றனர்; என்னுங் கதை ஒன்று வழங்கி வருவதாலும், இக்கொங்கு நாட்டில் சோழர்கள் அரசாட்சி இருந்ததற்குக் கரூர் சோழர்களது முடிசூட்டு தலங்கள் ஐந்திலுள் ஒன்றாக விருந்தது மாத்திரமல்லாமல், ஜயங்கொண்ட சோழேச்சுரம், கரிகால சோழேச்சுரம், பராக்கிரம சோழேச்சுரம், விக்கிரம சோழேச்சுரம்,

குலோத்துங்க சோழேச்சுரம், குலோத்துங்க விண்ணகர முதலிய பெயர் வாய்ந்த சிவ விஷ்ணுவாலயங்களு மிருக்கின்றன. பல சிலா சாஸனங்களும் பிரபந்தங்களு மிருக்கின்றன. இது நிகழ்ந்தகாலம் இரண்டாவது குலோத்துங்க சோழன் காலத்திலென்றே சரித்திர வாராய்ச்சியாளர் கூறுவதால், கம்பர் காலமும் இச்சோழன் காலத்தென்றே சொல்லுவதில் சந்தேகமில்லை.

இந்தக் குலோத்துங்க மன்னனே நிலவரியை ஒழுங்கு செய்யும்படி தன் நாட்டிலுள்ள பயிர்நிலங்களை யெல்லாம் கிரமமாக அளப்பித்தான். அரணியங்களை அழித்து அழகிய பட்டணங்களைக் கட்டினான். பல நீர் நிலைகளையும், வாய்க்கால்களையும், ஏரிகளையும் பாய்ச்சல்வாரிக்காகக் கட்டிவைத்தான். பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான். இவன் சைவசமயமே எச்சமயத்தினும் மேலான சமயமென்று உறுதிகொண்டிருந்தவன் இவனுக்குத் திருநீற்றுச் சோழனென்றும் பெயர் உண்டு. சேக்கிழார் பெரிய புராணம் பாடியதும் இவன் காலத்தில்தான் என்பர்.

இவ்வரசர் பெருமகனுக்கு மக்கள் எழுவர். அவருள் பட்டம் பெற்றவன் விக்கிரமன்; இவன் ஆயிரத்து நூற்றுப் பத்தாவது ஆண்டில் இளவரிசைப்பட்டம் பெற்றான். இவனுடைய ஆட்சி பதினெட்டு வருஷந்தான் நடந்தது; இவன் இளமையிலேயே பரலோகமடைந்தனன் என்றும், வைஷ்ணவ மதத்தில் தன் தகப்பனைப்போலத் துவேஷம் பாராட்டாமல் மிக்க அன்புடன் வளர்த்து வந்தவன் என்றும் சொல்லுவதற்கு உலாவும், குலோத்துங்கவிண்ணகரம், என்னும் திருமால் கோவிலும் உபமானமாகச் சொல்லலாம்.



முன்னம் கூறியபடி ஒட்டக்கூத்தரது மாணாக்கனை குலோத்துங்கன், குமார குலோத்துங்கன் என்றும், இரண்டாவது குலோத்துங்கன் என்றும் வழங்கப்பெறுவான். இவன் தந்தை, விக்கிரமச்சோழன். விக்கிரமச்சோழன் தந்தை முதல் குலோத்துங்கன் என்பது சிலாசாஸன ஆராய்ச்சியில் கண்டறிந்தது. ஒட்டக்கூத்தர் இயற்றிய உலாக்கள் மூன்று:— விக்கிரமச் சோழனுலா, குலோத்துங்கச் சோழனுலா, இராசராச சோழனுலா, இவை மூவர் உலா எனவும் பெறும். கூத்தர் அச்சோழர் மூவர் காலத்தும் உயிர்த்திருந்தவர் என்றும் தெரிகிறது.

கம்பர் சோழனிடம் விரோதங்கொண்டு, தெலுங்க வரசனாகிய பிரதாபருத்திரனிடம் சென்று சிலகாலம் வசித்திருந்து, பின்னர் சடையப்ப முதலியாரின் ஆதரவில் வளர்ந்து கவிவன்மை யடைந்திருந்தார். அப்பொழுது அவருக்கு வயது பதினைந்திற்குமேலில்லை; இவர் ஒட்டக்கூத்தருக்கு இளையவர்; இவரது கல்வியின் சிறப்பைப் பிறரால் கேள்விப்பட்ட குமார குலோத்துங்கன் தன் ஆஸ்தான பண்டிதர்களில் அவரை ஒருவராகச் சேர்த்துக்கொண்டான். கம்பரோ அச்சபை புலவர்கள் யாவரினும் மிகவும் பெருமையோடு விளங்கினர்.

இக்கம்பருக்கு அம்பிகாபதி என்னும் ஒரு புதல்வன் இருந்தான்; அவனும் கல்வியில் வல்லவனாக விருந்தபடியால், அரசன் அவனைத் தன்னுடைய சபைக்கு அழைத்து வரும்படி அவருக்குக் கட்டளையிட்டான். அன்று முதல் கம்பர் தன் அருமைக் குமாரனையும் சபைக்கு அழைத்துவருவது வழக்கமாக விருந்தது.

அம்பிகாபதி வாலபருவம் நீங்காதவனாகையால், அக்குலோத்துங்கன் மகள்மீது பேராவல் கொண்டு மனந்திரிந்து

மதிமயக்கத்தால், சில இன்பச்சுவை பொருந்திய பாடல்களை அவ்வரசன் மகளை முன்னிலையாக்கிப் பாடினான்; இதை அறிந்த குலோத்துங்கன் அவ்வாலிபப் புலவன்மேல்கடுஞ்சினங்கொண்டு, அவனை எவ்வாறாயினும் எமனுலகிற்கு அநுப்பிவிட வேண்டுமென்று எண்ணி அதைப்பிறரெவர்க்குந் தெரிவிக்காமல், பலவிதமான சூழ்ச்சிகளைச்செய்து, கடைசியில் அவனை மதங்கொண்ட களிற்றின் காலடியால் நமனுலகிற்கு நல்விருந்தளித்தான்.

இவ்வநீதியான கொடுஞ்செயலைக் கேட்ட கம்பர், மனந்துடித்துச் சினம்பொங்கி மருளுற்று வாளாவிருந்தார். பின்பு, தன் குமாரன் இறந்ததைப்பற்றி,

“வெட்டுப்பட்டாய் மகனே தலைகாளின் விதிப்படியோ”

என, ஒரு கவி சொல்லிக் கலங்கினர்; அரசன் சிறிதும் ஆராயாமற் செய்த அநியாயத்தை நினைந்து அகங்கரைந்து, அவன் குலத்தின்மேல் அழுக்காறு பெரிதும் உடையராகிக் காலத்தை எதிர்நோக்கி யிருந்தார்.

ஒரு நாள் அரசன் மகன் வேட்டைக்குச் சென்று, வேட்டையாடும்போது ஒரு யானையால் துரத்திவரப்பட்டான்; அப்போது அவ்வரச குமாரன் அச்சத்தால் ஓடோடியும் வந்து கம்பரின் வீட்டிற் புகுந்தான். இவர் தன் மகன் அம்பிகாபதியை அரசன் கொன்ற காரணம்பற்றிப் பழிவாங்கத் தருணம் பார்த்திருந்தவராதலால், அவ்வரச குமாரனைப் பார்த்து, ‘காட்டானை விட்டாலும் கவியானை விடாது என்று ஈட்டியால் குத்திக் கொன்று விட்டனர். அது கேட்டுக் குலோத்துங்கன் பொங்கி யெழுந்தான்; மறித்து விழுந்தான். கண்சிவப்பக் கையால் மோதிக்கொண்டழுதான். பின்பு தன் மைந்தனை “அந்தோ நீ எங்குற்றாய்” என்றுவருந்திப் பொருமி மயங்கினவன்.



“உயிர்த்தில னுணர்வு மில்லனுயிரிலன் சொல்லோ வென்னைப்
பெயர்த்தில னாக்கை யொன்றும் பேசலன் விம்மியாதும்
வியர்த்தில னெடிதுபோது விம்மலன் மெல்ல மெல்ல
அயர்த்தின னரிதிற் றேறி வாய்திறந் தாற்றலுற்றான்.”

“கலையினாற் றிங்களென்ன வளர்கின்ற காலத்தே யுன்
சிலையினா லரியை வெல்லக் காண்பதோர் தவமுஞ் செய்தேன்
தலையிலா வாக்கை காண வெத்தவஞ் செய்தேனந்தோ
நிலையிலா வாழ்வையின்னு நினைவெனோ நினைவிலாதேன்”

என்று தெளிந்து இரங்கினான். பின்பு, உறை யிருந்தவரை நோக்கி, “அமைச்சரே! நீரெல்லாரும் கேண்மின்” என்று சொல்லி, கூத்தரைப் பார்த்து, “இவ்வுலகில் உண்டான பொருள்களில் நீர் அறியாத பொருள் இல்லை. நீர் அறிய என் குமாரன் ஏதாயினும் குற்றம் இழைத்திருப்பானோ?” என்றான். அப்போது கூத்தர் அரசே “நின் குமரனோ குற்றமிழைத்தவனல்லன். அவனைக் குற்றமிழைத்தவனென்ற புலவனை இப்பூமி பொறுக்குமோ” என்றான்.

உடனே குலோத்துங்கன், நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்துவிட்டு, அவ்விடத்தினின்றும் புறப்பட்டு அந்தப்புரத்துள்ளே சென்று, அங்குள்ள தன் மனைவியரை நோக்கி, ‘நீதி தவறிய எனது ஊரிலிருந்து வாழும் பத்தினிகளே! ‘தன்வினை தன்னைச் சுடும்’ என்னும் பழமொழி என்வரையில் உண்மையாய் முடிந்தது. ஒருவரும் உறாத்துயரம் உற்றேன். உலகிற் பிறந்தார் ஒருவரும் படாததுயரம் யான் பட்டேன். இங்ஙனம் யான் உறக்கடவேனோ? இஃதோர் அநியாயம். நம் குழந்தைக் குற்றமிழைத்தவனல்லன். நான் முன்செய்த வினையை மனதில் வைத்துக்கொண்டு, அதனைப் பிறருக் கறிவிக்காமலே காலம்

நோக்கிக் குழந்தையைக் கொன்றுவிட்டாயே. இது என்ன ஆச்சரியம்! என் அருமைக்குழந்தையை முன்புபோல் காண்பேனே? காண்பேனாயின் அது ஒரு புதுமையே. அங்ஙனம் கண்டால், அவன் வாக்கால் சொல்லும் குதலை மொழியைக் கேட்பேனே? கேட்பேனாகில் எனக்கு அஃதோர் இன்பத்தைப் பயக்கும். அங்ஙனம் குதலைமொழியை அவன் வாக்கால் கேளேனாயின், 'என்னுயிர் மாய்ப்பேன். இது உங்கட்கு உறுதி'' என்று சொல்லி அல்லலுற்று ஆற்றாது அழுதான்.

அக்குலோத்துங்கனை அங்கிருந்தவர் எல்லாரும் கண்டு, ஆற்றும்வழி காணாராய்த் தாமும் இரங்கி அழுது மயங்கி, "இனி இறக்குமளவும் நீங்காத துன்பத்தை இவனுக்கு உண்டாக்கியவதனால், ஒருகாலும் கோடாத செங்கோல் இனி சரியாக நடைபெறுமோ? இதனால் இனி யாது விளையுமோ? சோழர் அரசியல் அழியுமோ!'' என்று சொல்லி இவன் நிலைமைக்கு வருந்தினர். பல சான்றோர்கள் மன்னவன் தான் ஆராயாமற் செய்த காரியத்தைச் சிறிதும் நினைக்காமல் கலங்குகின்றனனே என்று அவனைப் பழிதூற்றினர்.

இங்ஙனம் பல துன்பங்களை அடைந்த குலோத்துங்கன் தியாகவல்லியோடு அன்பற்று வாழ்ந்து வருகையில், புகார்ப் பட்டினத்தில் அக்கால வழக்கின்படி, ஒவ்வோராண்டினும் நடைபெற வேண்டியதாகிய இந்திரன் திருவிழாக் குறுகியது. நகரினர் பலர் அரசன் அரண்மனைக்கு அவனது நிலைமையை உணர வந்தனர். அப்போது அரசன் துன்பக் கடலிலாழ்ந்து அரசாட்சியில் வெறுப்புற்றிருந்தனன். அதுகண்ட நகரத்தார் எல்லோரும் அரசன் அடைந்திருக்கும் புத்திர சோகத்தை நீக்கவேண்டும் என்று ஆலோசித்துக் கடைசியில், அவ்வூரில் இருக்கும் ஒரு நாடகக் கணிகையைக்



கொண்டு அவன் மனத்தைத் திருப்ப முயன்றனர். அவள் பெயர் நாகிரத்னம் என்பர். அவள் பன்னிரு பிராயத்திலேயே இசையில் வல்லவளாக விருந்தாள். ஒரு நாள் அவளை ஊரார் அரசன் மகிழ, ஆடல் ஆசிரியனும், இசையாசிரியனும், கவிஞரும் சூழ அவைக்களத்திற்கு வரும்படிச் செய்து, தான் கற்ற பரதநாட்டியத்தைச் செய்யச் சொல்லினர். அவள் அவ்வாறே அரசவைக்கு வந்து, அனைவரும் மகிழும்படியாக நடிக்க ஆயத்தமாயினள். அப்போது அரசன் தன் மனத்தைத் தானே சமாதானப்படுத்திக்கொண்டு சபைக்கு வந்தான். நாகி ஆடரங்கத்தைச் சென்றடைந்தனள். பக்க வாத்தியங்கள் மிக்க ஒலித்தன. குழலும் யாழும் ஒருவழி நிற்பப் பொன்னாலியன்றதொரு பூங்கொடிப் பாவை நடிப்பதுபோல நாகி முறை வழுவாவண்ணம் அபிநயித்துப் பாடி யாடினள். தனது ஆடலுக்கும் பாடலுக்கும் அழகிற்குந் தக்கபடி அரசனிடம் பரிசு பெற்றனள்.

அன்று தொடங்கி நாடோறும் அரசன் அந்நாடகக் கணிகையின்மீதே மோகத்தையுடையனாக விருந்தான். ஆனால், அவன் தானடைந்த விகாரத்தைப் பிறருக்குச் சொல்லவில்லை; சொல்லுவதும் தன் நிலைமைக்குத் தவறென்றே எண்ணி மனம் வேறுபட்டுப் பொலிவழிந்து மெலிவுற்றிருந்தான்.

அப்போது அழுக்காறும் ஔவியமும் இல்லாத உயாபதி என்னும் அரண்மனை விசாரணைக்காரி அங்கே வந்தாள். அவள் மிக்க அளியுடையாள்; மேலும் முதுமகள். அவள் வரவுகண்ட குலோத்துங்கன் மிக்க சந்தோஷமடைந்து, 'இன்றைக்கு இவளிடம் நமதெண்ணத்தை வெளிப்படுத்தினால் யாதொரு தீங்கும் வராது' என்றெண்ணி உயாபதியைப் பார்த்து உரைப்பான்:—'என் துயரைக் கேட்டால்

உன்னைப் போல்பவர், அரைக்கணமுந் தாளாது, அதைத் தன் துயராகவெண்ணி நீக்கவே முயல்வர்' என்றனன்.

அதன்மேல், உயாபதி, குலோத்துங்கனுடைய அடிகளைத் தொழுது, ஆசனத்தில் இருக்கும்படிச் செய்து, 'சுவாமி, யான் நும் துயர்தீர்ப்ப தெவ்வண்ணம்? உமது துயரத்தின் காரணத்தை அறிந்துளேன். நும்மகன் மாட்டு மிக்க அன்புடையேன். இப்போது உம்மிடம் ஒரு வார்த்தை சொல்லுதலுடையேன். பாவி யான் ஒன்றும் அறியேன். ஆயினும் "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா, பிற்பகல்தாமே விளையும்" என்பதும் 'அல்லவை செய்தார்க் கறங் கூற்றம்' என்பதும் பழுதாகுமா? நான் பேர்போந்த புலவர்கள் பிறந்தபதியில் பிறந்தவள். உண்மையில் யானும் ஒரு தெய்வக் கவியேயாகில், ஒழிந்த மகனோடு உம் குலத்தையும் வசைக்கவிபாடி அழிப்பேன். நீர் எல்லாம் தெரிந்தவராக விருந்தும் "வில்லேர் உழவர் பகைகொளினுங் கொள்ளற்க, சொல்லேருழவர் பகை" என்னும் அறநெறியை அறியாத தென்னே, என்றாள்.

அப்பாற் குலோத்துங்கன், உயாபதி! யான் என் காதலனைக் கொலைசெய்த கம்பர்மீது கோபமுற்றேன் என்றெண்ணாதே, அதைப்பற்றி இப்போது நான் உன்னுடன் சொல்ல வந்தேனில்லை. நேற்றை நம்மவையில் என் மனதை ஒரு பெண் தெய்வம் மருட்டிச் சென்றது; அதை அடையும் வழி ஒன்றும் தெளிகின்றிலேன். ஆதலால் எங்காயினும் போய் ஆராய்ந்து அக்கணிகை மாதை இங்குக் கொண்டுவரல்வேண்டும். அது எளிதேயாயினும் சரி, கடினமேயாயினும் சரி, எனது மிக்க துயர் தணிப்பதற்கு அதுவே மருந்தாகும் என்றான்.

அங்ஙனம் அறநெறி தவறிக் கூறக்கேட்ட உயாபதி, அவ்வரசனை நோக்கி, 'ஓய், அரசே! நான் உமக்கு அடிமை; நீர் சொல்லிய



வார்த்தை என் மனதைக் கோடரியில்லாமலே பிளக்கின்றது; ஒருவன் முன்செய்த தீவினைப் பயனைக்கடந்து நற்கதி அடைவதற்குச் சாதனங்களாகிய பல தருமங்கள் இருக்கவும், அதைக் கவனியாமல் துக்கத்தையே யுண்டுபண்ணுகிற சிற்றின்பத்தில் மூழ்க இச்சிப்பது அமுதமிருக்கக் கடு தின்பது போலன்றோ? அன்றியும், தாம் ஒருகால் எல்லாவிதமான பாக்கியங்களையும் குறைவற வனுபவித்து, அதையே பின்னும் விரும்பி வருந்துவது உமிழ்ந்த எச்சிலை உண்ணுவதுபோலல்லவோ; அதில், என்ன இன்பமிருக்கிறது; உற்றுநோக்குஞ் சான்றோர்களுக்குத் துன்பமேயாகும்; நானும் பழவினையால் புத்திரனை இழந்தேன்; படாத துயரத்தால் பரிதபித்து வாடியே உம்மிடத்தில் வந்து அடைக்கலமாயினேன். உலகில் இன்பதுன்பங்கள் மானிடருக்கல்லால் மற்றவைக்குண்டோ? "புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமோ? என்ன ஆச்சரியமாக விருக்கிறது. நும் அருமரபு உம்மால் பழியுறுமே. நானோ பேதை. தேவரீர், நானிலத்து மக்களும் பழிக்கும் நாடகக் கணிகையின் மீது நாட்டம் வைத்து வாட்டமடைந்தீரே! 'அந்தோ, முன்னம் இச்சோழ குலத்துதித்த ஒரு இளைஞனன்றோ முதுமைவேடம் பூண்டு வழக்கைக் கேட்டு உண்மை வெளிப்படுத்தியவன்; அக்குலத் துதித்த உமக்கு மாத்திரம் ஏன் இத்தகைய காரியத்தில் மனஞ் செல்லல் வேண்டும்; தமது குலத்தோர் ஆண்டிற் சிறியராயினும் அறிவிற் பெரியரல்லரோ! நீர் என்னுடன் நாணுப்பட லஞ்சாது கூறிய கொடுஞ்சொல் மனதைத் துளைக்கின்றது' ஆயினும், ஒன்று தெரிவிப்பேன்; செவி சாய்த்தருளுக :—

அருளுமே லரசர்க்கு மன்காயமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தனு மாதெய்வம்

மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்க லழித்த லங்காபவோ ''

என்று சொல்லி, வாயைத் திறவாமல் மரம்போல எதிரே நின்றாள்.

அப்போது சோழன், உயாபதியை நோக்கி, நன்று சொல்லினை ? வேதமும் நீதியும்படிக்கின்றாயே ? நீயா எனக்கு அடிமைத்தொழில் செய்பவள் ; இதுதான் நீ எஜமானன்மீது கொண்டிருக்கும் விசுவாசமோ ? உன்னைப்போலொத்த விசாரணைக்காரிகள் இருந்தால் அன்றே அரண்மனை அபிவிருத்தியடையும், என்று கோபத்துடன் சொல்லினான்.

அதுகேட்ட உயாபதி " அரச, அக் காமுகர்களை யல்லது உன்னை இகழ்ந்து கூறினே னல்லன். நீ வஞ்சினங் கூறுதற்கு உன்னுடன் எதிர்க்கும் மன்னரும் உளரோ ? ஆதலால் உன் சினம் தணிக" என்று சொல்லித் தான் நாகிரத்தினத்தின் இருப்பிடத்தை நாடி அடைந்தாள்.

மாலைப்பொழுதில் அவள் வீட்டை அடைந் தவளவில், இருவரும் சற்றுநேரம் பேசிக்கொண் டிருந்தனர். அங்கே அவளுடன் குலோத்துங்கன், அரண்மனையிடத்து தன்னுடன் கூறிய சின்மொழிகளை இனிமையுற மொழிந்தாள். மறுநாள் இருவரும் வைகறையாமத்தில் அவ் விடத்தைவிட்டு நீங்கி, அரசன் இருக்குமிடத்திற்குத் தங்கள் வரவைப் பிறர் அறியாமல் போந்தனர்.

அந்தப்புரத்தில் இருந்த அம்மன்னனைக் கண்டு, உயாபதி, " அரசே, உம்முடைய கோபம் தணிக. நான் உமது அடிமை என்பதை மெய்ப்பித்து விட்டேன். இனித் தருமந் தவறாமல் நடக்கக் கடவீர்; தக்கவர்கள் போற்றுந் தார்முடிச் சோழ



பூபா," என்று சொல்லித் தன்னை ஒருவரும் அறியாவண்ணம் தந்தரவழியாக விரைந்து சென்றனள்.

அன்று தொடங்கி நாகிரத்தினத்தின் மோகத்தாலே மயக்கமடைந்து, மனைவியரையும் அரசாட்சியின் காரியத்தையும் மறந்து, நாகிரத்தினத்தை விட்டுப் பிரியாத விருப்பினை உடையவனாயினான்

சிலகாலங்கழித்து நாகிரத்தினம் ஓர் ஆண் பிள்ளையைக் கருவுயிர்த்தாள்: அக் குழந்தை முற்பிறப்பில் புண்ணிய தானம் பண்ணிய புண்ணியனாகையால், அரசனைப்போலவே அங்கவிலக்கணங்க ளெல்லாம் இயற்கையோடு பொலிந்து விளங்கிற்று.

அச்செய்தியை அறிந்த சோழன், இதென்ன அநீதமாக முடிந்ததே ? நம் உறவின் முறையார் அறிந்தால் அனர்த்தமாய் முடியுமே; அவர்கள் இதை அறியுமுன்னம் நாம் இதற்குத் தக்க சூழ்ச்சி செய்து இதைப் பிறர் அறியாவண்ணஞ் செய்துவிடல்வேண்டும். ஆனால், அப்பாலகனை நமக்குத் துணையாக்கிக் கொள்ளுதல் நலம் என்று நினைத்து, நாகிரத்தினத்தின் அறையுள் ஒருவரும் தன் வரவு தெரிந்து கொள்ளாமல் நெருங்கி, நீ இக் குழந்தையை ஒருவர் கண்ணிற்கும் புலப்படாமல் எடுத்துச்சென்று காவிரிக்கரையில் போட்டுவிட்டு வந்துவிடு; இல்லையேல் உனது பிழைப்பிற்கே கெடுதி விளையும் என்றான்.

அதுகேட்ட தன்னை நாகிரத்னம், அவ்வாறே ஒருவரும் அறிந்துகொள்ளாமல், அக் குழந்தையைக் கொண்டுவிட மாலைக் காலத்தை எதிர்நோக்கி யிருந்தாள். அப்போது நாகிரத்தினத்தின் தாதி அவளிடம் சென்று, "குலோத்துங்கன் நமது கடைத்தலம் வந்துள்ளார்" என்றுரைத்தாள். அவ்வளவிலே அரசன்மறுபடி உட்புகுந்து நாகியுடன் தனியறையை அடைந்து, நாகி

யின் வாடிய மேனியின் வருத்தமும் கண்டு, நான், உன்னுடன் மருவிய காரணத்தால் எனது குலத்தில் நெடுங்காலமாய் நீடித்து வந்த நீதியெல்லாம் தொலைந்து பெருமை குலைந்தேன். இப்பெருமை யழிந்தது எனக்கு மிக்க நாணைத் தருகின்றது" என்று கூறினான். உடனே நாகியின் மனம் வேறுபட்டு, நீர் இங்ஙனம் கூறினதற்குக் காரணமென்னோ, என்று புன்முறுவல் செய்த முகத்துடன் "என்னிடம் இன்னும் இரண்டுமணி நேரந்தான் இக்குழந்தை யிருக்கும்; பின்னர் உமதிஷ்டப்பிரகாரம் செய்துவிடுகிறேன், என்றாள். உடனே அரசன் அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து தன் அரண்மனையைக் குறுகினான்.

இரவில் இடையாமம் கழிந்து, சந்திரன் மறைந்து, இருள் செறிந்தது. நாகி குழந்தையை எடுத்துக்கொண்டு எழுந்து, இடைகழியைக் கடந்து, தன்னைக் காவலரறியாமல் புறப்பட்டுச் சென்றனள்; செல்கையில் பரமன் கோயிலை வலஞ்செய்து கழிந்து, கண்களில் தண்ணீர் அருவிபோற் பெருகியோடக் கால் தடுமாற, ஊர் புறத்தை அடைந்தனள். அப்பால் காவிரிக்கரையில் திருமுகத்துறைச் சமீபத்தில் போய்த் தங்கி, சற்றுநேரம் இளைப்பாறிய பின்பு, அக்குழந்தையை ஒரு பொன் வசியிலே கிடத்தி அருகிற் கிடந்த ஒரு ஆதொண்டைப் பூவையும் மாலையாகப் போட்டுவைத்துப் போயினாள்.

பொழுதுபுலர்ந்ததும், அவ்வூரார் சிலர் தீர்த்தத் துறைபடிய அங்குச் சென்றனர். செல்கின்ற வழியில் சோலையிடத்து உயிரோடு பொன்வசியிலே அழுதுகிடக்கின்ற குழந்தையைக் கண்டனர். அது இருசுடரின் ஒளியைத் தோற்கடித்தது; அதன் ரூபலாவண்யமோ அங்கு வந்தவர்களின் மனதைக் கவர்ந்து, அவ்வூர் மன்னனைக் கியாபகத்திற்கு வரும்படிச் செய்தது.

பின்பு, ஒவ்வொருவரும், இதென்ன வாச்சரியம்! இது



உலகில் இல்லாத பெரியதொரு செயலாகத் தோன்றுகின்றதே! இந்த அரும்பாலகன் கழுத்தில் ஆதொண்டைமாலை சுற்றியிருப்பதன் காரணம் புலப்படவில்லையே! இக்குழந்தையின் முகதேஜஸைக் காணின் நமது குலோத்துங்கன் உருவமே பிரதிபலிக்கின்றதே! மரித்தகுழந்தை மறுபடி உயிர்பெற்று வருதலுமுண்டோ? முன்னம் பாலனைப் பறித்துச் சென்ற காலன் மறித்து அதன் உருவை மாற்றி நமதரசன் செய்தவத்திற்குப் பயந்து சூழ்ச்சியாக இவ்வாறு செய்துவிட்டானோ! என்னோ ஒன்றும் நமது புத்திக்குப் புலனாக வில்லையே; ஆயின், இதைப்பற்றி நாம் யோசித்துக்கொண் டிருப்பதால் அடையும் பிரயோசனம் என்? ஒன்றுமில்லை. இதை உடனே அரசனுக்குத் தெரிவிக்கவேண்டுமென, அரண்மனையை நாடி வந்து தாம்கண்ட பாலகன் நிலைமையினைக் கண்டபடியே அரசனுக்கு எடுத்துரைத்தார்கள்.

அதன்மேல் அச்சோழன் தன் பரிவாரத்தினை அனுப்பி அப்பாலகனை அவ்வண்ணமே அரண்மனைக்கு எடுத்து வாருங்கள் என்று கட்டளையிட் டனுப்பினன். அவர்கள் சென்று, சோலையின் நடுவண் பொன் பூத்துவிளங்கும் பாலனை வசியை விட்டு நீக்காமல் அரசன் முன்னே கொண்டு வந்து வைத்தனர்.

அப்போது அரசனைக் காணுமாறு அங்கு வந்திருந்த பல புலவர்களும், அந்தக் குழந்தையின் முகவொளியைக் கண்டு, சந்தோஷமடைந்து, இவன் கூடிய சீக்கிரத்தில் பெரியதொரு நாட்டிற்குத் தலைவனாகித் தக்கோரால் புகழப்படுவான் என்று அரசனுக்கு விளங்கக் கூறினர். சோழன் அதுகேட்டு, இனி என் பாலன் கொலையுண்டதற்காக மனம் வருந்த வேண்டியதில்லை; கண்ணிழந்தவன் கண் பெற்றது போலாயிற்று. எல்லாம்வல்ல ஈசன் அருள் இருக்கும்போது என்ன குறையிருக்

கிறது, இதுவே நான் செய்துள்ள தருமத்திற்கு எடுத்துக் காட்டாயிற்று என்று சொல்லித் தனது மனைவியை நோக்கி, காதலி, அறமே உருவாகத் திரண்டு வந்த இக்குழந்தையின் உருவைக் கண்டு களித்தி, இனி இதைக் கண்டு வியக்கத் தக்கவர் யாவர்? என்று அரசன் கூற, தியாகவல்லி "நம் துன்பங் காணாது மரித்த மகனை ஈசன் அருளியிருத்தல் வேண்டும்; நமது நாட்டை வந்தடைந்த இக்குழந்தையைக் கொண்டாடுதல் கடமையன்றோ வென்றாள்.

அப்போது சோழன், இதற்கு இனி செய்யத்தக்கது யாது என்னும் குறிப்புடன் அமைச்சரையும் புலவரையும் நோக்கினான். அக்குறிப்புணர்ந்த அவர்கள், "இப்பாலகன் ஆதொண்டைக் கொடியால் அலங்கரித்திருப்பதால், இதற்கு ஆதொண்டைச் சோழனென்றே நாமகரணஞ் செய்யலாம்; இல்லாவிடின் காவிரி கண்டசோழன் என்றும் பெயரிடலா மென்றனர். அது கேட்ட அரசன் ஐயன்மீர், "காவிரியாற்றுக் கண்டெடுத்த சோழன், எனப் பெயரிடுதல் எமது மரபினர் ஒப்புக்கொள்ளத் தக்க செய்கையன்று. பின்பு, இக்குழந்தை எந்நாட்டதோ? யார் மகனோ? அறிகின்றிலேம், என்று பலரும் பழிமொழி கூறுவார்கள்; அதற்கு என் மனம் இடங்கொடுக்க வில்லை; ஆகையால், நீங்கள் ஒருவழியாகச் சொல்லிச் செல்வதே தகுதியென்றான். அதன் பிறகு, புலவர்களெல்லாம் ஒரே மனதாக, 'அப்பாலகனை இன்று முதல் ஆதொண்டைச் சோழன் என்றே சொல்லுதல் பொருந்தும் என்று, அரசனை நோக்கி, 'அரச! நின் கொற்றம் நீடுவாழ்க' வென்று ஆசிர்வதித்துச் சென்றனர்.

அங்ஙனம் குழந்தையாகிய ஆதொண்டைச் சோழன் வாலபருவம்கடந்து யௌவன பருவம் வருவதற்குள் தன் மரபிற்குகந்த வேத வேதாந்தங்களையும், யானை யேற்றம், குதிரையேற்றம்,



படைக்கலப் பயிற்சி முதலியவற்றையுங் கற்று, அதற்கேற்றவாறு நல்வழியில் நிற்பவனாயினான். தந்தை தாயாரின் அகம் மகிழ நடந்து வந்தான். அவன் தினந்தினம் தன்னோடொத்த பாலர்களை அழைத்துக் கொண்டு காவிரி கரைக்குச் சென்று விளையாடி வருவான். ஒரு நாள் ஆதொண்டைச் சோழன் வேடிக்கையாகப்போர் உடைதரித்துப் புறநகர்வீதியில் வந்தான். அப்போது வருவிருந்தோம்பி மனையறம் வளர்க்கும் அவ்வூர்இல்லக் கிழத்தியர் மனம்மிக மகிழ்ந்து, 'நமதரசன் இழந்த புதல்வனைப் பெற்றது, அவர் குலத்தோர் இழைத்த பாக்கியமே" என்று சொல்லி மகிழ்ந்தனர். கணிகையர் வீதியில் நாடகமாடியிருந்தவர், தண்ணுமை குழல்யாழ் முதலியவற்றோடு ஆடும் அரங்கினை இழந்து, 'இவ்வூர் அரசன் எளிதாகப் பெற்ற குமாரன், இத்தகை அழகை யுடையனோ என்று வியந்தனர். நகர முற்றம் அந்தியில் திரண்டு உருண்டு ஆதொண்டன் செல்லும் வீதிக்கு வந்தனர். ஆதொண்டைச் சோழனும் சிரத்தின் மேற்றாக்கிய கரத்தைத் தாழ்த்தாமலே கூலமறுகும் கொடித்தேர் வீதியும் நால்வகை வருணத்தார் வீதியும் வேடிக்கையாக நண்பருடன் உலவிவந்தான்.

இங்ஙனம் நடந்துவரும் நாட்களில், சோழன் ஒருநாள் தனது அரியாதனத் தமர்ந்தான். புரோகிதனும் கணித விவர்த்தகனும் அமைச்சரும் தண்டத்தலைவரும் கூடி, அரசன் என்ன கட்டளை நிகழ்த்தப் போகிறானோ வென்று எதிர்பார்த்திருந்தனர். அப்போது அரசன் அமைச்சனை நோக்கி, நம் ஆதொண்டைச்சோழன் தக்க பருவம் அடைந்து விட்டான். அவனுக்கே இந்நாட்டை இளவரசப் பட்டம் கட்டவேண்டும்! அது செய்யாது மீள்வேனாயின், யான் போர்க்கோலங் கொண்ட பகையரசரை அச்சுறுத்த கில்லானாய்க் குடிகளை நடுநடுங்கச் செய்

யும் கொடுங்கோலரசன் ஒருவனுக்கு ஒப்பாகக் கடவேன்" என்றுரைத்தான். அதுகேட்ட புரோகிதன் 'அரச' "அவ்வாதொண்டைச் சோழனுக்கு இளவரிசைப் பட்டம் தானே நடைபெறுகின்றது; அதைப்பற்றி என்ன தடையுளது; உமது இஷ்டம்போல நடைபெறும்; இப்போது நடக்கின்ற முகூர்த்தம் அரசர்பலரும் அவனை அடிபணியத் தக்கது; நினைத்த வண்ணம் செய்யற்பாலை, ஓ! வெந்திறல் வேந்தே" என்று கூறினான். உடனே உழையிருந்த வமைச்சன், அரசனைப்பார்த்து, அரசே, மந்தரை சூழ்ச்சியால் தாசரதியினுடைய பட்டம் ஒழிந்தது, என்று குறிப்புரையாடினான். அரசன், 'இங்குள்ளார் ஒருவரும் அறியாத நகைத்திறம் கூறினாய். நீ கூறிய வார்த்தையின் பொருள் யாது?" என்று கேட்டான். அமைச்சன், "காவிரி ஆட்டத்தில் ஊருள்ளார் கண்டெடுத்து, ஊழ்வினை உருத்து எழுதலாலே, உடனே உம்மிடம் கொண்டடைந்தார்கள்; இவ்விடயம் அறியாதார் யாவருளர், இங்கு நிகழ்ந்த செய்தியெல்லாம் கேட்டுத் தங்கள் உறவினர் கொடுந்துயர் அடைந்து வருந்துகின்றனராம், தாங்கள் எடுத்த கருமம் முடிக்கவேண்டுவதே; ஆயினும் ஆத்திரப்படக் கூடாது; நீர் வற்புறுத்தி ஒரு காரியத்தை முடிக்கவேண்டுமென்றால், உம்முடன் எதிர்க்கும் திறமைசாலிகளும் உளரோ? ஆதலால் உமது ஆத்திரம் தணிக" என்றான். இவ்வார்த்தை சொல்லிக்கொண் டிருக்கையில் அன்றைப்பொழுது சாய்ந்தது. மாலைக் கடன் முடிக்கப் புறம்போந்த அரசன், அந்திப்பொழுது செவ்வானத்தில் வெண்பிறைதோன்ற, அதனை உற்று நோக்கினான். உடனே ஆதொண்டைச் சோழன் முகம் ஞாபகத்திற்கு வந்தது. அன்றிரவு அரசன் மனம் ஆலோசனையிலேயே ஆழ்ந்து விட்டது.

மறுநாட் பொழுது புலர்ந்தது. பறவைகள் அங்கு மிங்-



கும் சிறகை விரித்துப் பறந்து திரிந்தன. மதில் வாயிலில் யவனர் வாள் கையேந்திக் காவல் காத்து நின்றனர். நால்வகை வருணத்தாரும் நால்வேறு வீதிகளில் உலாவித் திரிந்தனர். பசுக்கள் கலீரென்னுஞ் சப்தத்துடன் வெளிப்போந்தன. அரண்மனையிடத்தும் சிவாலயத்தும் முரசொலி ஒலித்தன அந்தணர்கள் வேதம் ஓதுவிக்கின்ற ஒலியும், மாதவர்கள் மந்திரம் ஓதும் ஒலியும் ஒருபால் ஒலியா நின்றன. வாள் வீரர்களுடைய வீரமுரசு ஒருபால் ஒலி செய்தன. இத்தன்மையான வைபவங்களெல்லாம் நிரைந்திருக்க, அரசன் தன் அவைக்களம் புக்கான். அப்போது அமைச்சன், அரசனைப் பார்த்து, "சுவாமி, நான் நேற்றைக் குறிப்பாகச் சொல்லிய விடயத்தைத் தாம் அறிந்து கொள்ளவில்லைபோலும், ஆயின், உம்முடைய சுற்றத்தாரின் சம்மதிபெற்றே ஆதொண்டைச் சோழனுக்கு இளவரிசைப் பட்டம் கட்டமுடியுமே அல்லாமல், அவர்களுக்கு விரோதமாகச் செய்யின், நாடு மிக்க குழப்பத்துக் குள்ளாகும்; ஆகையால், எதற்கும் அவர்கள் அநுமதி பெற்று நடப்பதே நல" மென்றான்.

அங்ஙனம் மந்திரி கூறிய வார்த்தையைக் கேட்டு, அரசன் ஒன்றுங் கூறாமல் அங்கிருந்தா ரனைவரும் திடுக்கிடும்படி திடீரென அந்தப்புரத்தினுட் புகுந்தான்.

உடனே மந்திரி, அவ்விடத்தினின்றும் புறப்பட்டு அந்நகருள்ளே சென்று, அங்குள்ள உறவினரை நோக்கி, "நீதியில்லாத அரசனது ஊரிலிருந்து வாழும் உறவோரே! உமது முன்னோர் தொன்றுதொட்டு செய்து வந்த தருமங்களை எல்லாம் எடுத்துக் காட்டும் இதழ்கள் என் கையில் உள்ளது; உலகிற் பிறந்தார் ஒருவரும் ஒப்புக்கொள்ளாத காரியத்தில் நம் சோழவரசன் இப்போது தலையிட்டிருக்கிறான். இங்ஙனம் அவன்

எண்ணியதற்குக் காரணம் பழவினைப் பயனேயன்றி வேறொன்றில்லை. இஃதோர். அநியாயம் அவ் வாதொண்டைச் சோழனோ அந்நிய குலத்தில் கண்ணிய மில்லாத உதரத்தில் உதித்தவன். உங்கள் மூதாதைகள் அறனும் ஆற்றலும் உடையவராய் அற நீதியும் குல ஒழுக்கமும் மாறுபடாதவர்கள்; முன்னம் உங்கள் குலத்துதித்த ஒரு சோழனல்லவா ஆவின் கன்றிற்காகத் தன்னருமைப் புதல்வனுயிரைத் தேர்ச் சக்கரத்திற் கொடுத்தவன், ஓர் பார்ப்பினியின் கற்பிக்குப் பாதகம் வந்ததென்று அவள் கணவன் சொல்லியசொற் றாங்காமலல்லவா உங்கள் குலத்துதித்த ஒருவன் தன் கரத்தைக் குறைத்துக் கொண்டது. அவற்றை நினையாமல் குல வொழுக்கத்திற்கு மாறான காரியத்தில் பிரவேசித்திருக்கும் அரசனை நீவிர் ஆதரிக்கப் போகின்றீர்களா? அல்லது ஆதொண்டைச் சோழனுக்கு இளவரிசைப் பட்டம் நடைபெறவொட்டாமல் தடுக்கப்போகிறீர்களா? இவ்விரண்டில் ஒன்றை எனக்குத் தெரிவித்துவிடுங்கள்" என்றான்.

அவ்வளவில் உறவினர், அப்படியாயின், "சோழனுக்குப் போதிக்கும்படியான செவ்விய நெறியை எங்கட்கு நீர் விளக்குக" என்று வேண்டினர்.

மந்திரி:—"நீங்கள் உமது குலவொழுக்கத்தை உத்தேசித்து எல்லாரும் ஒரே அபிப்பிராயமாக அச்சின்னத்தனமான பிள்ளைக்கு முடிசூட்டவொண்ணாதென்றும், அவனுக்கு நாங்கள் பெண் கொடுக்க மாட்டோம் என்றும், அவனை அரசனாக்கினும் யாங்கள் தலைசாய்க்க மாட்டோமென்றும், உறுதியாகப் பிடியுங்கள்; அப்போது அரசன் ஒன்றுஞ் செய்ய முடியாமல் மனம் தத்தளிப்பான். பிறகு தான் அடைந்த எண்ணத்தை மறப்பான். அப்பால், நமதிஷ்டம்போல் எல்லாம் ஒரு குறைவின்றி நடக்கும். யான் உங்களோடு சொல்லியதை



மட்டும் நீவிர் உமது மனைவியருக்கும் மற்றையோர்க்கும் உரையாதொழிக" என்று இரந்து, தன்னிடம் போய்விட்டான்.

மறுநாட்காலை அமைச்சன், சோழனை அடிதொழுது, "இந்நாட்டில் வனசரங்களாலும், ஜலசரங்களாலும், மனிதர்களாலும், உறுகண் இலது. ஆயின், உமது பந்துக்களாலேயே சில தீங்குகள் நேரும்போல விருக்கின்றது, அதைத் தாங்கள்தான் நீக்கிக்கொள்ள முயலவேண்டும் அவர்கள் ஆதொண்டைச்சோழனை ஒரு வகையிலும் ஒப்புக்கொள்ள மாட்டோம் என்று நிராகரித்து விட்டார்கள்" என்றான்.

அதுகேட்ட சோழன் அருமணி யிழந்த நாகம்போலும், உயிரிழந்த உடல் போலும், துயர்க் கடலில் அழுந்தினன்; அறிவு மயங்கினன்; அவர்கள் சொல்லிய வார்த்தையை எண்ணித் தியங்கினன்; பிறகு ஒன்றுந்தோன்றாமல் இஃது 'என் தீவினைப் பயனே' எனத் தெளிந்து தளர்ச்சி நீங்கினான். பின் மந்திரியைப் பார்த்து, "இவ்வோலையை என் பந்துக்களுக்கு மனப் பொலிவுடைத்தாம்படியாகப் படித்துக்காட்டுதி, நான் எனது நெருங்கிய உறவினரின் மலரடியைத் தொழுதேன் எனக்கூறுதி; நீ விரைந்து சென்று அவர்கள் மனத்திலிருக்கும் பாசை நீக்குதி வீணே காலந்தாழ்க்காதே" என்று சொல்லி அவனை மறுபடியும் போக விட்டான்.

இப்பால், மந்திரி உறவின் முறையார் இடத்தை அடைந்து, அவர்களுடன் அளவளாவி, "ஆதொண்டனுக்கு இளவரிசைப் பட்டம் கட்டுவதில் என்ன ஆக்ஷேபனை!" என்று கேட்டான். அதற்கவர்கள் "இனி அக்காரியம் நடைபெறுவதன்று, என்றனர். அன்று இரவிடையிலே அங்கு நின்றும் புறப்பட்டுச் சென்று, தன்னை ஒருவரும் அறியாவண்ணம் அரண்மனையினுட்புகுந்து, அவர்கள் சொல்லியதை மறுபடியும் அரசனுக்குக் கூறினான்.

அப்பால் மந்திரியை நோக்கி, மந்திரி, “ஆதொண்டன் மிக்கத் திறமையுள்ளவனாதலின், இனிச் சும்மாவிரான். அவனுக்கு ஏதாயினும் ஒரு பட்டணத்தைக் கண்டுபிடித்து, அதில், அவனை இளவரசாக்கிக் காணுந்தனையும், இருத்தலும் இரேன், நிற்றலும் நில்லேன், அதற்காக நீதான் தக்க ஆலோசனை சொல்லவேண்டு” மென்றான்.

அதன்மேல் மந்திரி, அரசனை நோக்கி, “நம் நாட்டிற்கு வடவெல்லைக்குச் சமீபத்தில் புகைந்து அடர்ந்ததொரு கானகம் மிக்க விசாலமாக விருக்கிறது; அதற்குத் தண்டகாரண்யம் என்று பெயர் கூறுகின்றனர். அதில், வனசரர்களான குறும்பர் என்னும் ஒரு சாதியார் மிக்க வீரத்துடன் இருபத்து நான்கு கோட்டைகள் கட்டிக்கொண்டு வசிக்கிறார்கள். அவர்கள் ஆறலைக் கள்வர்கள்; அறநெறி தெரியாதவர்கள்; உயிர்ப் பலிகொடுக்கும் உறுதியாளர்கள்; கள்ளுண்டு களிக்கும்காட்சியையுடையவர்கள். போரில் நமனையும் பின்வாங்கிச் செல்லும்படி உயுத்தம் செய்யும் ஆற்றலையுடையவர்கள். இப்பொழுது அவர்கள் ஒருவரோடொருவர் மாறுபட்ட எண்ணத்தோடு வேறுபட்டிருக்கிறார்கள் என்று, நான் பிறரால் கேள்விப்பட்டேன். இனி உமது எண்ணப் பிரகாரஞ் செய்யும்” என்றான்.

உடனே சோழன், “நமது வாளும் குடையும் வடக்கு நோக்கி எழுக” என்று ஏவினான். அவ்வளவிலே வீரர் ஆர்த்தனர். முரசங்கள் முழங்கின. சேனையும் ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் அரசருடைய கரும வினைஞரும் தருமத் தலைவரும் தந்திரக்காரரும் அரசன் நீடூழி வாழ்கவென்று ஆசி கூறி, யானையின் மீது கொடை, வாள் முதலியவற்றை ஏற்றிப் புறநகர் செல்லும் வரையில் உடன் சென்று மீண்டு அரசவையை அடைந்தனர். அப்பால், அரசன் தண்டத் தலைவரும் தலைத்தார் சேனையும் சூழ்ந்துவரத் தன்னகரினின்றும் புறப்பட்



டுப் பெண்ணை ஆற்றின் தென்கரையில் வந்து தங்கினான். அங்கே சேனையின் பேரொலியைக் கேட்ட குறும்ப தூதர்கள் தங்கள் அரசருக்கறிவித்தார்கள். உடனே அக் குறும்பர்கள், எல்லாம் ஒன்றாகத் திரண்டுவந்து, தமிழர் ஆற்றலைக் காண்போம் என்று, பெரிய சேனையுடன் எதிரூன்றினார்கள். குலோத்துங்கனும், ஆனைக் கூட்டத்தைக் கண்டு பாய்ந்த அரிமான்போல, அச்சேனையின் நடுவண் பாய்ந்து உயுத்தம் புரிந்தான் இரண்டு நாட்கள் விடாது போர் செய்தும் குறும்பவரசர்கள் இவனுக்குச் சிறிதும் பின்னிடையவில்லை. குலோத்துங்கன் மூன்றாம் நாள் மனத்தளர்ச்சி யுண்டாகி, வேடர் வலைப்பட்ட மான்போலக் குறும்பருடைய சினவலையிற்பட்டுத் தோல்வியடைந்து, புறங்காட்டித் தன்னூர் நோக்கி ஓடி விட்டான்.

---

## ஆதொண்டைச்சோழன் கன்னிப்போர்.

குலோத்துங்கன் தோல்வியடைந்த செய்தியைச் சாரணர் சொல்லக்கேட்டு, ஆதொண்டைச் சோழன், புருவம் துடிக்க, வாய் மடித்து எயிறு படபடவெனக் கடித்து, மொழிமயங்கி, திருமுகம் வியர்ப்ப, செங்கண் சிவப்ப, கால் பெயர்த்து எழுந்தான். அங்ஙனம் எழுந்த ஆதொண்டைச் சோழன் தன்னுடன் எஞ்சியபடையினையும் உடன் அழைத்துக்கொண்டு, தொண்டைமண்டலத்துள் புகுந்து வஞ்சினங் கூறிக் குறும்பருடன் போர் தொடுத்தான். பின்பு, இருதிறத்துச் சேனைகளும் ஒன்றோடொன்று அகோரயுத்தம் செய்தன. முதன் நாளில் ஆதொண்டைச் சோழன் கொண்டு சென்ற படைவீரர்களில் சிலர் உயிர் துறந்தனர். அதுகண்ட ஆதொண்டன் கண் சிவந்து சீற்றம் அதிகரித்து, பிரளய காலத்தெழும் அங்கிபோலச் சீறி யெழுந்து, எதிரிகளின் படைகளை நூறியடித்து வஞ்சி சூடி நின்றான்.

அதுகண்ட குறும்பர், "அரசரேறே! உமது சீற்றம் அமைக. உம் வாழ்நாள் பெருகுக. வாழி! எங்கள் சொல்லை இகழாது கேட்டல் வேண்டும். நீர் இந்நாட்டைக் காவல் பூண்டு எங்களில் எஞ்சியவரை ஆதரிப்பீர்" என வணங்கிக் கேட்டுக் கொண்டனர்.

உடனே ஆதொண்டன், தன் சேனாதிபதிகளுடன் அளவளாவிப், பாசறையில் பதின்மர் சூழ வீற்றிருந்தான்.

அப்போது குலோத்துங்கன், மந்திரி முதலியோர் தன்னைச் சூழத் தன் குமாரனுக்குத் துணைபுரியுமாறு, ஓடோடியும், தொண்டை நாட்டின் வடவெல்லையை மறுபடியும் கூறினான். அச் செய்தியை அறிந்த ஆதொண்டைச் சோழன், தன் தந்தைக்கு எதிர்சென்று தான் அடைந்த வெற்றியைக் கூறினான். குலோத்துங்கன், சோழகுல தீபமே! 'நம்குலத்தவர் கொற்றமும் செங்கோலும் கோணுதலுண்டோ' என்று மிக்க சந்தோஷமடைந்து, பின்பு இருவரும் அத்தொண்டை மண்டலம் முழுவதும் சுற்றித் திரிந்தார்கள்.

---

## குலோத்துங்கன் சீர்திருத்தம்

அப்பால், குலோத்துங்கன் அத் தண்டகாரண்யத்தை நாடாக்க நினைந்து, அங்குள்ள காடுகளை எல்லாம் அழித்து நாடாக்கினான். பின்னர், முத்திநகரில் ஒன்றாகிய காஞ்சிபுரத்தைக் காவலர் மகிழும்படியாகப் பட்டணமாக்கி அதைப் பிறகு தமக்கு இராஜதானியாக்கி, அதில் ஆதொண்டைச் சோழனுக்கு இளவரிசைப்பட்டம் கட்டி மகிழ்ந்தான்.

அப்புறம், சில நாட்கள் செல்ல, குடிவளம் நீர் வளம் மிகவும் குறைந்திருந்தது. அதுகண்ட சோழன், தன் மந்திரிகளிடம் அளவற்ற திரவியத்தைக் கொடுத்துப் பிறதே



யத்திற்குச் சென்று, பலவரை விலைக்குவாங்கி, ஒரு ஆணுக்கு ஒரு பெண்வீதம் கலியாணஞ் செய்து விப்பித்தான் பின்னர், பாலாற்றைவெட்டிப் பல கால்களாகப் பிரித்து வைத்தான். சில வாண்டுகளில் அந்நாடு செழிப்படைந்து, உலகில் உள்ளவர்கள் எல்லாம் தங்குவதற்குமிக்க ரமணீயமாகவும், பல கோட்டங்களுக்கு நிலையமாகவு மிருந்தது. அவ்வூரின் வலது பக்கத்தில், மலைநெல்லும் கரும்பும் தினையும்வரகும் மஞ்சளும் மலைவாழையும் கமுகும் தெங்கும் மாவும் பலாவும் என்னுமிவைமலிந்த சிறுமலை விளங்கித் தோன்றியது. அம்மலையை வலதுபக்கத்துக்கொண்டு இடதுபக்கத்து நெறியிற் சென்றால், அத்திகிரியை அடையமுடியும். இடப்பக்கத்து நெறியே சென்றால் பல அருஞ்சுரங்கள் தென்படும். அதனைக்கடந்து சென்றால் ஒன்றின்பக்கல் ஒன்றாகச் சர்வதீர்த்தம், பொத்தாமரை, அனந்தசிரசு என மூன்று பொய்கைகள் தோன்றும். இவைகளை எல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்துச் சென்ற குலோத்துங்கன், அந்நாட்டிற்கு என்ன பெயரிடலாம் என்று மந்திரியைக் கேட்டான்.

அதற்கு மந்திரி, 'சோழதீபமே! இந்நாடானது ஆதொண்டைச்சோழனால் வெற்றிபெற்றதாகையினால், இதற்குத் தொண்டை மண்டலம் எனப்பெயரிடுதலே தகுதி, என்றனன். அன்று தொடங்கி இதற்குத் தொண்டைமண்டலம் என்னும்பெயர் வழங்குவதாயிற்று. அதன்பிறகு, குலோத்துங்கன் ஆதொண்டைச்சோழனை அரசுபுரியுமாறு அங்கே விடுத்துப் தான் மந்திரியோடுபுகார் நோக்கிச் சென்றான்.

---

# தொண்டைச் சோழனும் வன்னிய வரசர்களும்.

இத்தொண்டை மண்டலத்தின் கீழ்ப்பாகத்தில் திருவிடைச்சுரம் என்னும் ஓரூர் இருந்தது. அது செங்கற்பட்டைச் சேர்ந்தது. அதையே இப்போது திருக்கச்சூர் என்ற வேறு பெயராக வழங்கி வருகின்றனர் என்பர். அதில், மிக்க புராதனமான கோட்டை யொன்றுண்டு; அக்கோட்டையே குறும்பர்களுக்கு வாசஸ்தானமாக விருந்தது. ஆதொண்டைச் சோழனால், அவர்கள் வம்சம் பாழான பின்பு, அரசன் கட்டளையால் அதைக் கொண்டைகட்டி வேளாளர்கள் ஆண்டு வந்தார்கள். அப்போது வன்னியர்களின் வலிமை அதிகரித்திருந்த படியால், அவர்கள் கொண்டைகட்டி வேளாளரை அநீதமாக அடித்தோட்டிவிட்டு, அக்கோட்டையைத் தங்கள் சுவாதீனஞ் செய்துகொண்டு விட்டார்கள்.

ஆதொண்டைச் சோழன் அவ் வன்னியரின் வலிமையைக் கண்டு, அவர்களுடன் போர் புரியாமல் சும்மா விருந்து விட்டான். இவ் வன்னிய வரசர்களும், ஆந்திர கன்னிக்குக் கப்பங் கட்டிக் காலத்தைக் கழித்து வந்தார்கள். ஆந்திரகன்னி என்பவன் வட நாட்டை யாண்டு வந்த அரசர்களில் ஒருவன்; இவன் மிக்கவீராதி வீரர்களிற் சிறந்தவன் இவன் காலத்தே வன்னிய வரசர்களும் வலிமையோடு அரசுபுரிந்து வந்தார்களென சரிதத்தால் தெரிவதால் இவ்விரண்டு அரசர்களும் குலோத்துங்க சோழன் காலத்தவர் என்று சொல்லலாம்.

முன்னர் கூறிய திருவிடைச் சுரத்துக் கோட்டைய சில நாள் சென்றபின், அவ்வன்னிய மரபில் தோன்றிய காந்தவராயன் சேதுராயன் என்னும் சகோதரர் இருவர் வசப்பட்டது. அவ்விருவரும் மகாதிறமையுடன் அக்கோட்டையைக் கட்டிக்



காத்து, அதைச் சுற்றி அகழியும் மதிலும் எடுத்துப் பாதுகாத்து வந்தனர். அக்கோட்டையானது இப்பொழுதும் பல சிதிலத்துடன் செங்கற்பட்டின் சமீபத்தில் தோன்றா நிற்கிறது.

அக்கோட்டையின் சுற்றளவு, இப்பொழுதிருக்கும் பிரகாரம் தெற்கு வடக்கு அகல நீளம் ஆயிரத்து நூற்று நாற்பத்தொன்பது அடி. கிழக்கு மேற்கு அகல நீளம் ஆயிரத்து நூறு அடி. இதின், அலங்கச்சுவர் முன்னிருந்தவண்ணம் விசாலம் இருபதடி. இதைச்சுற்றி முப்பதடி அகலமுள்ள அகழி இருக்கிறது. இக் கோட்டையின் உட்புறத்தின் மத்தியில் ஒரு அழகிய உட்கோட்டையும் அரண்மனையும் இடைகிடக்கும் மலையின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. உட் கோட்டையின் சுற்றளவு, கிழக்கு மேற்கு நீளம் இருநூற்று எண்பதடியும், தெற்கு வடக்கு நூற்றுத் தொண்ணூற்றைந்து அடியுமாகும்.

இதனுள் இருந்துகொண்டு பகைவருக்குச் சிறிதும் அஞ்சாமல் அச் சகோதரர்கள் இருவரும் ஆட்சிபுரிந்து வந்தார்கள். இவர்கள் ஆட்சி மேன்மேலும் வளர்ந்தோங்கிற்று. அப்பால், தங்கள் மரபினர் ஆந்திர கன்னிக்குக் கட்டிவந்த கப்பத்தையும் கட்டாமல் நிறுத்தி விட்டனர். இவர்கள் கியாதி தொண்டை மண்டல மெல்லாம் கதிரவன் ஒளிபோல் பரந்தது. இவ்விரு சகோதரில், மூத்தவன் காளை, இளையவன் கோழை. இவர்கள் கோட்டையின் வட்க்கில் ஒரு நாழிகை வழிக்கப்பால் கோமாளத்து மலை என்று ஒரு மலையுண்டு. அதில்தான் காலை மாலை, இரண்டு வேளைகளிலும் நவபத்து, என்னும் வாத்தியம் முழக்குவது வழக்கம். அக்கோமாளம் மலைக்குத் தென் கிழக்கின் மூலையில் ஒறகடத்து மலை. என்கிற மலை யொன்றுண்டு. அந்த ஒரகடத்து மலைக்கு நான்கு நாழிகை வழிக்கப்பால் மாதளங்குப்பமலை என்று ஒரு மலையுண்டு. அதன் மீது ஞான

புரீச்சுவரன் கோயிலிருக்கிறது. அம்மலையின் அடிவாரத்திலும் நவபத்து வைகறையாமத்துக் கொட்டுவது வழக்கம். இவ்வண்ணம் நாற்றிசையிலும் நவபத்து முழங்க, மிக்க போகத்துடன் சகோதரர்கள் இருவரும் ஆட்சி புரிந்து வந்தார்கள்.

ஆந்திர கன்னி சில வாண்டுகள் வரையில் வன்னிய வரசர்களின் கப்பத்தை வருமென எதிர்பார்த்திருந்தான். இரண்டு வருடங்களாகியும் கப்பம் வாராமைகண்டு, அதிககோபங்கொண்டு படையுடன் வந்து இவர்களை எதிர்த்தான் அச்சகோதரர்கள் இருவரும் அவன் கண்ணுக்குப் புலப்படாமல் முன்னர் சொல்லிய மலையில் ஒளித்து, ஆந்திர கன்னியைத் திகைக்கும்படி செய்தார்கள். அவ்வீரர்கள் ஒவ்வொருசமயத்தில் ஒவ்வொரு மலையில் நவபத்து கொட்டும்படிச் செய்வார்கள்.

ஆந்திர மன்னன் வெகு தூரத்தில் இருந்து வந்தபடியால் இவர்களின் உபாயம் தெரியாமலும், நிலைமை உணராமலும் தன்படையுந் தானும் உணவில்லாமல் மனம் நோக்காடுபட்டு ஓய்ந்திருந்தான். அவ்வமயத்தில், சகோதரர்கள் இருவரும் வஞ்சகமாக எதிரிகளின் படையுட் புகுந்து, தமது வாளால் படைத் தலைவர்களை வெட்டி வீழ்த்தினார்கள்.

அதைக்கண்ட கிருஷ்ணராயருக்குக் கோபம் பொங்கியெழுந்தது. உடனே அவர் தமது தளகர்த்தர்களைக் கூவி, 'நீவிர் சென்று, அந்த அநீதக்காரர்களாகிய இரு சகோதரர்களையும் எதிர்த்து எமனுலகிற்கு அனுப்பி வரவேண்டு"மென்று கட்டளையிட்டார். உடனே அவர்கள் வியந்து, கொஞ்சமேனும் காலந் தாழ்க்காமல் போர்க்கு ஆயத்தமாய்ச் சேனையோடு புறப்பட்டனர். இருதிறத்து சேனைகளும் ஒரு பெரு வெளியிற் சந்தித்தன.



அப்பால், தேர் வீரரைத் தேர்வீரர் எதிர்த்தார்கள். யானை வீரரை யானைவீரர் தாக்கினார்கள். குதிரை வீரரைக் குதிரை வீரர் குத்தினார்கள். காலாட்களைக் காலாட்கள் கடுகியும் முடுகியும் வெட்டினார்கள். விழுந்தார் பலர்; எழுந்தார் சிலர்; ஓடினார் அநேகர்; பதுங்கினார் பலர்; கண்கள் பிதுங்கின; தோள்கள் துடித்தன; தலைகள் உருண்டன; கவந்தங்கள் கூத்தாடின. உதிரவாறு உருவங்கள் மிதக்கப் பெருகியோடின. பேய்கள் ஆடின. பறவைகள் அங்குமிங்கும் பறந்தோடின. வலவைகள் வட்டமிட்டன; ராயர் சேனைகள் ஒதுங்கின. கடைசியாக ராயரது சேனாதிபதிகள் முதுக்காட்டி ஓடத் தலைப்பட்டனர். அதுகண்ட சகோதரர்கள் இருவரும் வெற்றியினால் குதூகலமடைந்து, அவர்களைத் துரத்திச் சென்று மகாபலிபுரத்தின் எல்லைக்கு அப்பால் விட்டு விட்டார்கள். பின்னர் ஆந்தரகன்னியும் தன் சேனையோடு திரும்பிச் சென்றான்.

அன்று முதல், சகோதரர்கள் இருவரும் மதோன்மத்தராய்த் தங்களுடன் எதிர்த்தவரை எல்லாம் கொன்று வெற்றி முரசறைவித்து, உற்றார் உறவினர்கள் சூழ பெரும் பாக்கிய வந்தர்களாக வீற்றிருந்தார்கள்.

தோல்வியடைந்த, ராயர் 'நாம் ஏன் சும்மா இருக்கவேண்டும், நம்மாலான முயற்சி செய்து இவ்விரு சகோதரர்களையும் அங்குத் தங்கவொட்டாமல் ஓட்டிவிடவேண்டும். அதற்காகக் கூலிப்படை கொண்டேனும் சண்டையை மும்முரமாக்கி, அப்பாதகர்களை துரத்த முயல்வதே கடமை என்று, சண்டையை நிறுத்திக் கொண்டான்.

இதற்குள், காந்தவராயன் முன்னர் ஆதொண்டை சோழனாலே, நிலை நிறுத்தப்பட்ட வேளாண் பிரபுக்களைச் சிதறடிக்கப் புகுந்தான். அக்காந்தவராயன் கொடுமை பொறுக்க மாட்டா

மல், அக்குழூஉவினர் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, அவனை எதிர்க்கத் தொடங்கினார்கள்.

அப்போது கடலூரில் இருந்த வேளாளர் கிருஷ்ணராயரிடம் போய்த் தாங்கள் காந்தவராயரால் அடைந்த துன்பத்தை முறையிட்டார்கள். அவர், மகா வீரனாகிய உய்யாழ்வார் என்னும் பெயரையுடைய பாளையங்கார் தலைவனிடம் சென்று, அவ்விரு சகோதரர்கள் செய்யும் துன்பத்தையும் தான் அவர்களிடம் தோற்றுப் போனதையுஞ் சொல்லினர்.

அதுகேட்ட உய்யாழ்வார், மனம் வருந்தி வியந்து, 'ஹே ராயரே! உமது எண்ணத்திற்குச் சால மகிழ்கின்றேன்.

"இளைதாக முண் மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து"

என்றபடி, வளர்வதற் கிடங்கொடுத்து விடின், பின்னர், நம்மையே தாழ்த்தப் பார்ப்பான். இனி நான் சற்றேனுந் தாழ்க்கேன், உமக்கு வந்த அவமானத்தை எனதாகக் கருதுகிறேன் என்று கூறி அவரைத் தேற்றி, அவரது மனக் கவலையை மாற்றி, அப்போதே அச் சகோதரர்களை எதிர்க்க வேண்டிய சடங்குகளைச் செய்து தன் படைகளைச் சேர்த்தார்.

அது தெரிந்த காந்தவராயன், தன் தம்பியைப் பார்த்து, 'நம்பி! என்ன விநோதம் பார்த்தாயா? ஒருமுறை ஆந்திர கன்னிக்குச் சகாயமாக வந்து நம்முடன் போர்செய்து பின்கொடுத்தோடிய கிருஷ்ணராயர், உய்யாழ்வாரிடம் சென்று, மறுபடி நம்மேல் படையெடுத்து வரப்போவதாகக் கேள்விப் பட்டேன்; அவரை நாம் உயிருடன் விட்டதே பிசகு. அவர் மிகவும் பொறாமைக்காரர். அவர் 'தானும் ஆளமாட்டார் ஆள்வாரையும்' கண்டு சகியார்' "வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினையறுப்பான்; திறமையுள்ளவன் கனம்



பெறுவான், பொறாமையுள்ளவன் பொங்கியழிவான்" என்பது போல நம்மீது மிக்க வெறுப்புக்கொண்டு, நம்மை அழிக்க முயற்சிக்கின்றார். நமக்குள் அந்தரங்க ஒற்றுமை இருக்க வேண்டும், நாமிருவரும் மாத்திரம் ஒற்றுமையாய் இருப்பின், இந்தத் தொண்டைமண்டலத்தை ஆளும் அரசன் வந்தாலும் பயமில்லை; இல்லையானால் துன்பமாய் முடியு"மென்று சொன்னான்.

இங்ஙனம் வார்த்தை சொல்லிக்கொண் டிருக்கையில் அன்றைப் பொழுது கழிந்தது. மாலையில், சகோதரர்கள் இருவரும் வேடிக்கையாகப் பக்கத்தில் உள்ள மருத நிலங்களின் வளங்களையும், பறவைகளின் ஓசையைக் கேட்டும், வழி நடை வருத்தம் தோன்றாமல், இடையிட்ட இயற்கை வளங்களையெல்லாம் ஆனந்தமாகப் பார்த்துக்கொண்டே, அங்கங்கே சற்றுத் தங்கியிருந்து இளைப்பாறுபவர்கள் போலச் சிறிது சிறிதாக வழியைக் கடந்து நடந்து கொண்டிருந்தனர்.

அப்போது, அவர்கள் செல்லும் வழிக்குச் சுமார் அரை மைல் தூரத்தில் ஒரு பேரிரைச்சல் கேட்டது. உடனே இருவரும் அங்குள்ள விருக்ஷத்தின் மீது ஏறிப்பார்த்தனர்.

அப்போது உய்யாழ்வாரின் சேனை ஒரு கடல்போலத் திரண்டு வருவதைக்கண்டு, மிகவும் கோபத்தையுடையவராய்த் தங்கள் கோட்டைக்கு வந்து, சேனைகளை நாற்புறத்தும் ஒருவரும் அறியாமல் ஒளித்துவைத்துக்கொண்டு பகைவரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இதற்குள், உய்யாழ்வார் தனது படையுடன் வந்துகோட்டையை முற்றுகை செய்தார். பின்பு இருதிறத்துச் சேனைகளுக்கும் சண்டை மூண்டது. காந்தவராயன் தன் சேனைகளுக்குப் பல தந்திரங்களைச் சொல்லிக் கொடுத்தான். அதற்கு

எதிராக உய்யாழ்வாரும் தன் சேனைகளுக்கு உற்சாகம் வரும்படிச் சில உபாயத்தைச் சுட்டிக்காட்டினார். சண்டை மும்முரமாக நடக்கத் தொடங்கின. சிலர் மல்லயுத்தஞ் செய்தார்கள். சிலர் வில்யுத்தஞ் செய்தார்கள். சிலர் வாள்வீசி நடந்தார்கள். சிலர் வீரமாகப் பேசி தோள்தட்டிக் குதித்தார்கள். கடைசியாகக் காந்தவராயனே வெற்றிமுர சறைந்தான். உய்யாழ்வார் சேனை நிலைகுலைந்து முதுகாட்டி ஓடிற்று. பலர் தலையற்றும் காலற்றுங் கையற்றும் முண்டங்களாகக் கிடந்தனர். இவைகளைக் கண்ட உய்யாழ்வார் மனங்கொதித்து, ஒன்றுந் தோன்றாமல் எஞ்சிய வீரரை அழைத்துக்கொண்டு நெல்லிப்பாளையம் வந்து சேர்ந்தார். அன்று முதல் அவர் மனம் ஒரு நிலைப்படவில்லை; காந்தவராயன் மீதிருக்கும் வைரத்திற்கும் தக்க பரிகாரம் ஏற்படவில்லை. இனி இப்படிப்பட்ட கொலைக்குக் காரணமான கொடுந்தொழில் அவனுடன் புரிவது மிகவும் அசாத்தியமான காரியம். "போர்த்தொழில் புரியேல்" என்பது பெரியார் வார்த்தையல்லவா? அதைச் சிறிதுங் கவனியாது சென்ற நமக்கு, அச்சகோதரர்கள் செய்த தீங்கு நன்மையதே. இனி, அவர்களுடன் போர் செய்வதில் பயனில்லை; தந்திரத்தால்தான் அவர்களை வெல்லல் வேண்டுமெனத் தனக்குள் நிச்சயஞ் செய்துகொண்டார்.

## சதியாலோசனை

அதன்பிறகு, தன்னுடைய சாரணர்களில் மிக்க தந்திரசாலியான ஒற்றன் ஒருவனை மாறுவேடத்தோடு, காந்தவராயன் இராஜதானியான திருவிடைச்சுரத்திற்கு அனுப்பி, அங்கே நடக்கும் ஒவ்வொரு விடயங்களையும் ஒவ்வொரு நாளுந் தனக்குத் தெரிவிக்குமாறு நியமித்தார். அவன் அவ்வாறே தெரிவித்து வந்தான். ஒருநாள் அவன் அவ்வூரிலுள்ள



ஆலயத்தின் மாடவீதியைச் சுற்றி வரும்போது. கோவிலின் நாற்புறத்திலும் தேவதாஸிகள் வீடு நிரைந்திருக்கக் கண்டான். பின்பு, அவ்வொற்றன் அங்கிருக்கும் வீடுகளின் நிலைமையைப் பிறரால் கேள்விப்பட்டான். அதில், குப்பச்சி என்னும் பெயர் வாய்ந்த ஒருவள் செல்வத்தாலும் ரூபத்தாலும் சிறப்புற்று விளங்கி வந்தனள்; அவளுக்குப் பெருநாட்டாள் என்று ஒரு பட்டப் பெயருண்டு. அந்தப் பெயர் வந்ததின் காரணத்தை, அவன் பிறரைக் கேட்டான்; அதற்கவர்கள், ஐயா! இம்மாது சிரோமணி எங்கள் தலைவரான காந்தவராயருக்கு அடியாள். ஆகையால்தான் அந்தப் பட்டப்பெயரோடு விளங்குகின்றாள். என்றனர். அதுகேட்ட ஒற்றன், மிகவும் சந்தோஷத்துடன் திருப்பாச்சுரம் விட்டு நெல்லிப்பாளையம் வந்து, தன் தலைவரை அடிபணிந்து, அவ்வூரின் நிலையையும், காந்தவராயன் காதலித்துள்ள தேவதாஸியின் பெருமையுஞ் சொல்லினன்,

அதுகேட்ட உய்யாழ்வார், இனி அவ்வீரனை அரைக்கணத்தில் வென்றேன். ஒரு சிறிதுஞ் சந்தேகமே கிடையாதென்று, கடலூர் வேளாளரிடஞ் சென்றார். பிறகு இருவரும் ஒன்றாகச் சேர்ந்து காந்தவராயரைக் கொல்லும் தந்திரத்தைப் பற்றி ஆலோசனை செய்து, கடைசியாகத் தம்மை ஒருவருந் தெரிந்து கொள்ளா வண்ணம் ஒரு நள்ளிரவில் புறப்பட்டுத் திருப்பாசுரம் வந்து சேர்ந்தார்கள்.

அங்கு, சமயம் பார்த்து உய்யாழ்வாரும் வேளாளரும் குப்பச்சி வீட்டினுட் பிரவேசித்தார்கள். இவர்களது வரவைக் கண்ட அக்கணிகை மகள் மிகவும் மரியாதையாய் அவர்களுக்கு, ஆஸனங் கொடுத்து, அவர்கள் வந்ததின் காரணத்தை வினவினள். அவர்கள், தாம் கொண்டுவந்த நானூறு வராகனையும் அவளெதிரில் நதிராக வைத்தார்கள்; அதைக்கண்ட அவள்

மனம் சந்தோஷமடைந்தது. உடனே, அவள், ஐயன்மீர்! என்னால் தமக்கு ஆகவேண்டிய காரியமென்னவோ! நீவிர் உலகமெல்லாம் போற்றும் உத்தமர்கள்; நீங்கள் நியமிக்கும் கட்டளைக்கு நான் மறுத்துச் சொல்லுவனோ? எது விருப்பினும் ஒளிக்காமல் சொல்லி விடுங்கள். அதன்படியே நடக்கத் தடையில்லை என்றாள். அதைக்கேட்டு மகிழ்ச்சியடைந்து, உய்யாழ்வார், "அம்மணி, தாங்கள் இங்ஙனம் அருள் செய்தலால், இனி உலகைப் பற்றிய துயரம் எங்களுக்குச் சிறிதும் இல்லையன்றோ;" என்று கூறினார்.

அக்கணிகை மாது மறுபடியும்; 'நீங்கள் அழகும், சிறந்த குலமும், ஒழுக்கமும் உடையராய் இருக்கின்றீர்கள். சத்திய விருதம் தப்பாதவராக காண்கின்றீர்கள். நீங்கள் உங்களிடத்தை விட்டுவந்த காரணம் யாதோ? அதைத் தாமதம் செய்யாமல் வெளியிடுங்கள்' என்றாள்.

அதற்கு உய்யாழ்வார், "அம்மணி; நாங்கள் செல்லுதற்குரிய வழியோ மிக்க பாவத்தோடு கூடியதே; அது செய்யாவிடிலோ உலகமே பாழாய்விடும்போற் றோன்றுகின்றது. நால்வர் பிழைக்க ஒரு தீமை செய்தால், அதைப் பிறர் சம்மதமாக ஒப்புக்கொள்ளுவார்களே யல்லாமல் அலர்தூற்ற மாட்டார்கள். நாங்கள் பரந்து கிடக்கும் பருக்கைக் கற்களின் மீதும், புனைந்து படர்ந்து இருக்கும் முட்புதர்களின் இடையிலும் சிறிதும் அஞ்சாமல் வருவானேன். எல்லாம் நன்மையாய் முடியுமென்ற நம்பிக்கையுடனேதான். ஆயினும், ஊழின் செய்கையை யார் அறியவல்லார்? இனி நாங்கள் ஒளிக்க வேண்டுவ தொன்றுமில்லை. இப்பொழுது நாங்கள் செல்லுகின்ற வழிக்கு உனது தொழிலால் நன்மையடைய முடியுமே யல்லது வேறுவழி இல்லை. வலிமையுள்ள காந்தராயன் ஆருயிர்



உம் கைவசத்திலன்றோ விருக்கிறது. அவரை எமன்தான் என்னசெய்ய முடியும்? எதிரிகள் தான் என்னசெய்யமுடியும்? உமது மனம் முறிந்தால், அவன் தலை முறிந்தது. அத்தலை வந்தால் உமது இல்லம் பொன்னாயது. இதனினும் யாங்கள் வேண்டுவ தொன்றுமில்லை என்றான்.

அவர் வாய்மொழிகேட்ட குப்பச்சி, தலைமேல் கைகளைக் கூப்பிக்கொண்டு, "இந்த அற்ப விஷயத்திற்காகவா: இவ்வளவு நேரம் சொல்லுவதற்கு மயங்கினீர்கள். இனி அக்காரியம் என்னைச் சேர்ந்ததே. அவன் தலை நாளை உம்முடையதே; அதைப்பற்றி அஞ்சன்மின்! யானே அவன் சிரத்தைக் கொய்து, இவ்வூருக் கருகாமையில் இருக்கும் ஏரிகரையில் இருண்ட சோலையிற் றருகிறேன்" என்று ஓரிடங் குறிப்பிட்டு, அனுப்பிவிட்டாள்.

---

## காந்தவராயனின் கொலை.

மறுநாள் மாலைப்பொழுதில் காந்தவராயன், ஒரு குதிரையின்மீது ஏறி உல்லாசமாக அக் குப்பச்சி இல்லத்திற்கு வந்துசேர்ந்தான். அங்கு, அவள் ஒரு மரத்தட்டில் பல வகையான பதார்த்தங்களையும் சிற்றுண்டிகளையும் வழக்கம்போலக் கொண்டுவைத்தாள்; அவைகளில், நல்ல உருசியான பதார்த்தங்களில் மாத்திரம் விஷத்தைக் கலந்து வைத்திருந்தாள். காந்தவராயன், வழக்கம்போல் அவைகளைச் சிறிதுங் கலக்கமில்லாமல் ஒவ்வொன்றாகச் சாப்பிடத் தொடங்கினான். அவன் கள்ளமில்லாத நெஞ்சினனாகையால், அவற்றில், அவனுக்குச் சிறிதுஞ் சந்தேகம் ஏற்படவில்லை. அப்புறம் ஒரு கணத்திற்குள் விடந் தலைக்கேறி மயக்கத்தால் மதிமயங்கித் தன்னை மறந்து தலையணையின்மேற் சாய்ந்

தான். அப்போதவள், மஞ்சத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் நாடாவினாலே அவனது காலையுங் கையையும் இறுக்கிக் கட்டிப், பிறரறியா வண்ணம், கூரிய வாள்கொண்டு தலையைத் துணித்தாள். என்னே மனவுறுதி. என்னே வஞ்சநெஞ்சம்! என்னே நேசம். இங்ஙனம் கொய்த சிரத்தை ஒரு பித்தளை தாம்பாளத்தில் வைத்துக் கொண்டு, அவர்களுக்கு வாக்குத் தத்தம் கொடுத்திருந்த விடத்திற்கு வந்து சேர்ந்தாள். முன்னமே அங்கு வந்திருந்த உய்யாழ்வாரும் கடலூர் வேளாளரும், அவன் தலையைக் கண்டு, இனி நமக்கிருந்த அச்சம் ஒழிந்தது. இவன் தம்பி இருந்தும் ஒன்றே இல்லாதது மொன்றே என்று பேசிக்கொண்டனர். ஆயினும், உய்யாழ்வார், மெய்ம்மயிர் சிலிர்த்து, நாக்குழறி, கண்கள் சிவந்து, என்னே துரோகம். என்ன அநியாயம். உலகோர் கண்டு நடுங்கும்படியான அம் மகாவீரன் தலையும், ஒரு எளிய கணிகை மாதின் கையிற்சிக்கி யொழிந்ததே. என்ன நம்பகத் துரோகம். என்ன அரசத் துரோகம். அவ்வீரனிடமிருந்து இப்பாதகிபெற்ற நன்மைக்கு அளவே யில்லையன்றோ? அவற்றையெல்லாம் ஒரு சிறிதுங் கவனியாமல் செய்த படுகொலையை என்னென்று சொல்லுவது.

“ எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்றமகற்கு ” என்பதுபோல் இவளுக்கு எவ்விதமான உய்வுண்டாகும். இத்தகையோரை வளரவிடல் தீமையே யாகும். அரசனுக்குத் தீங்கை எண்ணிய இவள் அற்பர்களை என்னசெய்யாள். செல்வமே பெரிதாகவெண்ணிப் பாதகத்தைக் கவனியாத வித்தியள் இனிமேல் இவ்வுலகத்தில் வாழ்வதினும் நமது உடைவாளிற் கிரையாக்குவதே மேல், அன்றியும், இவளை உயிருடன் விட்டால் பிறகு நமக்குப் பழியும் பாவமுஞ் சேருவதோடு பகைமையும் படரும்; ஆகை



யால், இவளை இப்பொழுதே எமனுலகிற் கனுப்பிவிடுகிறே னென்று தன் கைவாளால், அவள் தலை பூமியில் விழும்படி வீசினார். அதன்மேல், அவர்கள் வந்த வழியே திரும்பிப் போயினர்.

---

## சகோரவாஞ்சை.

மறுநாட் காலையில், இச் செய்தியைக் கேட்ட சேதுராயன், பதை பதைத்து நடுநடுங்கி, “ ஐயோ, தந்தை தாய் இழந்தார்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டலாம். சகோதரனை இழந்தவர்க்குச் செய்யலாவது இல்லையே. என் செய்கேன். இனி எனக்குத் துணையானோ வன்றோ! தோள் நீங்கியவனும் மனிதனாவானோ என்று ஏங்கினான். பொங்கி யெழுந்தான். கண்சிவப்பக் கையால் மோதிக்கொண் டழுதான். பின்பு தன் சோதரனை “அந்தோ நீ எங்குற்றாய்” என்னாவருந்திப் பொருமி மயங்கினான். இது என்ன ஆச்சரியம்! என் அண்ணனை முன்போல் காண்பேனோ? காண்பேனாயின் அது ஒரு புதுமையே. பகைவரெல்லாம் பதைத் தோடும்படி அடித்த என் அண்ணனுக்கும் ஒரு பகை யிருந்தவாறு அறியேனே! என்று சொல்லி அல்லலுற்று ஆற்றாது அழுதான்.

அவனை அவ்வூரார் எல்லாரும் கண்டு, ஆற்றும் வழி காணாராய்த் தாமும் இரங்கி அழுது மயங்கி, “ இனி அவன் இறந்ததின் காரணத்தை அறிதல் வேண்டும்.” எனப் பலவகையான ஆராய்ச்சி செய்து, கடைசியாக இக்கொலை குப்பச்சியால் நடந்தது என்றே தெரிந்து, அதைச் சேதுராயனுக்கு அறிவித்தார்கள்.

அதுகேட்ட சேதுராயன் அடங்காக் கோபங்கொண்டு, அவ்வூரில் இருக்கும் தாவலிகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து

மாட்டு மங்கையைப்போலப் பிணைத்து ஏரி கரையிலே, அவர்களின் தலையை யெல்லாம் வெட்டி வீழ்த்தினான். அக்காரணம் பற்றியே அந்த ஏரிக்கு நாளைவரையில் பிணை ஏரி என்ற பெயர் வழங்கி வருகின்றது. பின்பு, அத்தேவதாஸிகள் வசித்து வந்த இல்லங்களை எல்லாம் அக்னி பகவானுக்கு இரையாக்கி, இடித்து மண்மேடாக்கினான். அம் மண்மேட்டையே இப்போதும் அவ்வூரார் குப்பிச்சிக் குன்றென வழைக்கின்றார்கள். அவ்வெளியானது இப்போதும் வளப்பங் குன்றி விரகும் பயிராகாமல் அவாந்தர பூமியாகவே கிடக்கின்றது.

அப்பால், சிலநாள் சென்றதும் உய்யாழ்வார் தற்படை சூழ திருவிடைச் சுரத்திற்கு வந்து கோட்டையை முற்றுகை போட்டார். அதை அறிந்த சேதுராயனும் தன் படையோடு அவர்களை எதிர்த்து நின்றான். பின்னர், இருதிறத்துப் படையும் கைகலந்து கொடியயுத்தம் புரிந்தன. சண்டையோ இருபத்து நான்கு நாட்கள் இடைவிடாமல் நடந்தது. அதில் இருதிறத்தவரும் மடிந்தார்கள். இருபத்தைந்தாம்நாள் சேதுராயன் உய்யாழ்வாருடன் மல்லயுத்தந் தொடங்கினான். யாளியும்சிங்கமும் போல ஒரு நாள் முழுவதும் ஒருவருக் கொருவர் சிறிதும் பின் வாங்காமலே யுத்தம் புரிந்தனர். கடைசியாக உய்யாழ்வார் தனது கையில் இருந்த வாளால் சமயம் பார்த்து அவன் தலையை வெட்டி விட்டார். உடனே அவன் கீழ்ப்பட்ட குடிகளெல்லாம் உய்யாழ்வாரையே தமது தலைவராக எண்ணி, அவர் கட்டளை வழி நின்றனர். அவர்கள் ஆண்டு வந்த கோட்டையையும் தன் சுவாதீனப் படுத்திக்கொண்டு, கிருஷ்ண ராயரிடஞ் சென்றனர். அவர் உய்யாழ்வாரின் திறமையை மெச்சி, அவருக்குப் பலவிதமான மரியாதையும் செய்து, அவருடன் அளவளாவி யிருந்து, அவர்கள் ஆண்டுவந்த கோட்டைப் பூமிக்குச் சமானமாகச்



செய்து, அக்கோட்டை யிருந்த விடத்தை புழுதி நிலமாக்கி விடவேண்டுமென்று சொல்லினர். அதுகேட்ட உய்யாழ்வார் அவ்வாறே செய்வதாக ஒப்புக் கொண்டு அவ்வூராருக்குக் கட்டளை அனுப்பினார். அவர்கள் எல்லாரும் ஒன்றாய்க் கூடி அப்படியே செய்து முடித்தார்கள்.

அதன்மேல், அவ்வுய்யாழ்வார் அத்திருப்பாசுரத்தை முன்னர் ஆண்ட வேளாளருக்கே வசமாக்கினார். அன்று முதல் அந்தவூர் ஆனைக் கொந்திசமஸ்தானத்தின் கீழ் அடக்கமாயிருந்தது.

இங்ஙனம் நிகழ்ந்ததைக் கேட்ட ஆதொண்டைச் சோழன் மிகவும் சந்தோஷமாய் அரசுபுரிந்து வந்தான்.

## ஆதொண்டைச் சோழனும் விசுவாவசுவும்.

இவ்வாதொண்டைச் சோழன் காலத்தில் தண்டகாரண்யம் நான்குபிரிவினதாக விருந்தது. அதில், ஒரு பாகமான காளத்திமலையின் தென்பாகமும், பெண்ணையாற்றின் வடபாகமும், பசுமலை என்னும் பருவதத்திற்கு மேற்பாகமும் இவ்வாதொண்டைச் சோழமானுடைய சுவாதீனத்திலேயே இருந்தது. இவ் வெல்லைகளின் உட்பட்ட நிலங்கள் மிகுதியும் மருத நிலமாகவே யிருந்தபடியால், இவனுக்குமருதநில மன்னனென்கிற நாமதேயமும் வழங்குவதாயின. இவன் மிக்க திறமைசாலி. இவனைப் போற்றாத புலவர் கிடையாது. இவ்வளவு பெருமையுடன் வாழ்ந்து வரும்போது, இச்சோழவரசனுடைய செல்வத்தின்மேல் பொறாமைகொண்ட வடபுலமன்னனாகிய விசுவாவசு என்பவன், இவன்மீது படையெடுத்து வந்தான். பின்னர், இருவருக்கும் பெரும்போர் நடக்கத் தொடங்கியது.

இருவரும் பலவான்களாகையால், அப்போர் ஒரு வருடகாலம் ஓயாமல் நடந்தன. ஆனால், ஒருவருக் கொருவர் சிறிதும் இளைக்கவில்லை. சண்டையும் ஓயவில்லை. இதற்குள், இத் தொண்டைமண்டலம் பூராகவும் க்ஷீணதசைக்கு வந்தன. குடிகள் எல்லாம் பாழ்பட்டன. கிராமங்களில் காண்பதற்கும் மனித சஞ்சாரமில்லாமல் ஒழிந்தன. வளப்பமும் ஓய்ந்தன. பஞ்சம் பரந்தது. பாலை மிகுந்தது. பாசறையில் இருந்த ஆதொண்டைச் சோழனும் பகைவரோடு எதிர்த்துச் சண்டை செய்ய முடியாமல் புறங்கொடுத்து ஓடிவிட்டான்.

அதன்பின், விசுவாவசு வரசன் இத் தொண்டைமண்டல முழுவதும் தன் கீழ்ப்படுத்திக் கொண்டான். அன்றுமுதல் ஏழுவருடகாலம் வரையில் அவ்வடபுல மன்னனாலேயே ஆளப் பட்டு வந்தது. அக்காலத்திலேதான் பலதெலுங்க தேயத்து வாலிகள் இத் தொண்டைமண்டலத்தில் வந்து குடிபுக்கனர். இவ் விசுவாவசு மன்னனே தன் குடிகளுக்கு ஆங்காங்குப் பல கலாசாலைகள் வைத்துப் பாதுகாத்து வந்தான். இவனுடைய ஆளுகையில் கல்வி யுணர்ச்சியில்லாத மனிதர்கள் அகப்படுவது மிகவும் துர்ப்பலமாக விருந்தது.

பின்பு, ஆதொண்டைச்சோழன் தண்டகாரண்யத்துள் பிரவேசித்துத் தன்னை ஒருவரும் அறியாமல் மாறுவேஷத் தோடு,நதிக்கரையிலும் மரமடர்ந்த தோப்புகளிலும் இராப்பகல் பாராது திரிந்து வருந்தினான். அப்போது அவனது கண்ணிற்கு எதிரில் ஒரு அழகிய கன்மண்டபமும் கோபுரமுந் தெரிந்தது; தெரிந்தவுடன் அவன் அருகாமையிற் சென்று பார்த்தான். பார்த்து மனம் ஆனந்தத்தை அடைந்தான். அடைந்தவன் அக்கோவிலின் உட்புரத்துச் சென்று கண்டான். அப்போது



வேதத்தாலே ஓதப்பட்ட வேதபுரீசுரரைக் கண்ணாரக் கண்டு கைதொழுதான். கண்ணில் ஆனந்த நீர் பெருக்கினான்; தன் நிலைமையை நினைந்து கலங்கினான்; அத் தேஜோமயமான தேஜஸைக் கண்டு அப்பால் வர முடியாதவனாய்த் தன்னை மறந்து, பைத்தியம் பிடித்தவன்போல அங்குமிங்கும் ஓடுவான்; திரும்புவான்; உண்மைக்கு உரியனே என்பான்; உயிரினுக்காதரவே என்பான்; என்போன்ற ஏழையை ஆதரிக்க வல்லார் உன்னை யன்றி யாவருளர் என்று தேம்பித் தேம்பி அழுவான், விழுவான், எழுவான், புரளுவான், கைகூப்பித் தொழுவான். இங்ஙனமாக தன் நாட்களைக் கழித்து வரும் போது, ஒருநாள் 'கன்றுக்கிரங்கிய தாய்போல' அத்தலத் துறையும் இளமுலை நாயகியம்மையார், அவ்வாதொண்டைச் சோழனுக்குப் பேரருள் செய்து மறைந்தார். அதுமுதல் அவ் வாதொண்டைச்சோழன் காலை மாலை இரண்டு காலமும் விபூதி உருத்திராக்கத சின்னத்தை அணிந்து பஞ்சாக்கரத்தை இடை விடாமல் உச்சரித்து, வில்வத்தைக்கொண்டு பூசித்துத் தினந் தவறாமல் கொன்றை மாலையைச் சாத்தியும் வநதான்.

இங்ஙனம் ஆண்டு இரண்டு கழிந்த வளவில், ஒரு நாள் வைகறை யாமத்து ஓர் அந்தண வுருவுடன் அருமறை முதல் வன், இவன் இத்துணை நாளாகச் செய்த பூஜைக்கு மெச்சி, தன்னுருவை அவன் கண்டானந்த மடையும்படித் தானேயாய் எதிர் தோன்றினான்.

அப்பொன்னார் மேனியைக் கண்ட ஆதொண்டைச் சோழன்,இழந்த மணியைக்கண்டநாகம்போலும்,வறியன்பெற்ற நிதியைப்போலும், அப்பரமன் தேஜோமயமான வுருவத்தைக் கண்ணாற்பருகி அகங்குழைந்து, இன்றேயான்இழந்த அரசாட் சியையும், பிறந்த இப்பிறப்பின் பயனையும் அடைந்தேன். இனி

நான் அடைய வேண்டுவ தொன்றுமில்லை என்று, வாயாரத் துதிக்கத் தொடங்கி, கருணாகர மூர்த்தி! கால காலா! காதலர் நேயா! மூலப்பொருளே! மூவர்க்குள் முதலே! பார்வதீ ஸமேதா! அண்டினவருக் கருள்புரியும் ஆண்டவனே! அடியேன் அடைந்த துயர் நீயறியாததோ! என் குலத்தார்க்கெல்லாம் ஏற்றத்தைக் கொடுத்து வந்த எழில்பெருஞ் சொக்கே! நான் உன்னருளால் பெற்றிருந்த அரச செல்வமெல்லாம் அந்நிய வரசன் கைக்கொண்டாள யான் உன்மாட்டுச் செய்த அபராத மென்னோ வென்றான்.

அதுகேட்டு, வேதங்களும் அறியாத விமலன், “அடா! ஆதொண்டைச் சோழா! நீ இப்பிறப்பில் யாதொரு பாவமும் பண்ணிபிராவிடினும், பூர்வ ஜன்மத்தில் செய்திருந்த கன்மத்தை அநுபவியாமல் இருக்க முடியுமோ? அது ஒருவரையும் விடாது. முத்தான்மாக்களாயினும் அநுபவித்தே ஆகல்வேண்டும். அக் கன்மத்தைக் கடப்பது மிகவும் அருமை; அது கடந்தவரே முத்தியுலகத்து எந்நாளும் அழிவில்லாமல் என்னுடன் இருக்கக் கூடியவர்; மற்றவர்கள் எல்லாம் உலகில் இருந்து அல்லலில் உழல்பவரேயாவர்; அதுபற்றியன்றோ ‘ஊழிற் பெருவலியாவுள, மற்றொன்று சூழினுந்தான் முந்துறும்’ என்றும், அறநூலோர் கூறினர். இனி உனக்கு ஒரு விதமான குறைவும் நேரிடாது. எல்லாம் ‘நன்மையாகவே முடியும்’. நீ சிறிதும் அஞ்சற்க, சிறிதுதூரம் செல்வாயாயின், அங்கு ஒரு நதி தென்படும். அதற்கு வேதவதி என்று பெயர்; அந்நதியில் தான் முன்னம் ஒரு பெண்மணி தவம்செய்து, ஒருவரும் பெறாத முத்திப் பேறெய்தினாள். நீயும் அதனிடை சென்று ஸ்நாநஞ்செய்து, தென்கரையைச் சார்ந்து பார்; அங்கே சிலஜாதியார் உறைகின்றனர்; அவர்கள் மிகவும்



V2 11 CL N27

வீரர்கள்; அவர்கள் சகாயம் கஷ்டப்படாமலே உனக்கு உண்டாகும்; அதனால், நீ முன்பு தோற்ற நாடுகள் எல்லாம் வெகு சுலபமாக அடைவாய்” என்று அருள் புரிந்து மறைந்தான்.

அப்பால், ஆதொண்டைச் சோழன் அரன் உணர்த்திய நெறியைப் பின்பற்றிவந்து, கடைசியாக வேதவதி நதிக்கரையைக் குறுகினான். பின்பு, அந்த நதியில் ஸ்நானம் ஆடித் தென்கரையில் வந்து சற்று இளைப்பாறிக்கொண் டிருந்தனன். அப்போது, அங்கு உய்யாழ்வார் தன் படையுடன் வந்து சேர்ந்தார். அரசன், உய்யாழ்வாரை நோக்கி, நீ யார்? என்று கேட்டான். அதற்கு உய்யாழ்வார், ‘நான் நெல்லிப் பாளையம் என்னும் கிராமத்தில் வாழ்பவன். இத்தொண்டை மண்டலத்தை முன்னம் அரசாண்டவர்களின் தொண்டன். எம்மரசன் ஊழ்வினையாலே தனது ஊரை விட்டு எங்கேயோ சென்றனன். அவனைத் தேடிப் படைதிரட்டி இப்பொழுது அரசாளும் விசுவாவசுவைத் தோற்கடித்து முன்போலச் சோழவரசாட்சியை நிலைபெறும்படிச் செய்யவேண்டு மென்றே இரவென்றும் பகலென்றும் பாராது அலைந்து திரிகின்றேன் என்றான். அரசன் அது கேட்டு, “மெய்தான், ஊழ்வினையைக் கடக்க யாவரால் முடியும்?” என்றான். உய்யாழ்வாரும் ‘நீர் உரைத்தது செவ்விய வார்த்தையே. ஆயினும், நான் சோழரிடம் வைத்திருக்கும் பக்தியினாலே அவ்வாறு கூறினேன்; என்னைப் போன்றவர்கள் அநேகர் இந்நதிக் கருகாமையில் உள்ள சேரி[illegible] வசித்து வருகின்றனர். அவர்களுள் நான் ஒருவன். [illegible] பலவிடந் தேடித் திரிந்தும், எங்களரசன் [illegible]வில்லை. நாங்கள் என்ன செய்வோம். சுவரி[illegible] சித்திரம் எழுத முடியுமா? அரசன் இல்லாமல் நாங்கள் என்ன செய்ய முடியும்; அரசன் இருப்பிடந் தெரிந்தா[illegible] அவரை இப்போதே

77918

அழைத்து வந்து விசுவாவசுவை வடபுலம் நோக்கிச் செல்லும் வண்ணம் செய்து விடுவோம். இதிற் சிறிதும் சந்தேகமே கிடையாது என்றான்.

அதுகேட்ட ஆதொண்டைச் சோழன், அளவில்லாத வானந்த மடைந்து, உய்யாழ்வாரைப் பார்த்து, 'ஐயா! நானே நாடிழந்த வரசன். என் பெயரையே ஆதொண்டைச் சோழன் என்று சொல்வார்கள் என்றான். உடனே உய்யாழ்வார் கண்களில் தண்ணீர் அருவிபோற் பெருகியோட அவரது பாத கமலத்தில் வீழ்ந்து, "என்னே கஷ்டம்! நீர் வெப்பம் மிக்க இக் கோடைகாலத்தில் எவ்வாறு இந்நதிக்கரைக்கு அகஸ்மாத்தாய் அலைந்து வந்தீர்கள். இங்கு பரவியுள்ள நொய் மணலில் தங்கள் பாதம் எவ்வாறு பொருந்தும். இதோ நமக்குச் சுமார் பதினைந்துமைல் தூரத்திற்கப்பால் ஒருமலையுண்டு; அதன் அடிவாரத்தில் ஆனைமலைஎன்று ஒரு சமஸ்தானம் இருக்கிறது. அதிலுள்ளவர்கள் எல்லாம் தங்கள் அடித்துணை பற்றியவர்களே. அவர்களின் உதவியைக்கொண்டே அப்பாதக விசுவாவசுவைத் தோல்வி அடையும்படிச் செய்யவேண்டும் என்றார். உடனே இருவருமாக ஆனைமலைச் சமஸ்தானத்தை அடைந்தனர்.

மாலைப்பொழுதில் ஆனைமலையை அடைந்தவளவில் இருவரும் அங்குள்ள பரமசிவனை வணங்கினர். அங்கே பரமசிவன் முன்னம் தனக்கு அருளிய அருண் மொழிகளை இனிமையுற உய்யாழ்வாருக்கு மொழிந்தான் அரசன். மறுநாள் அவ்வூரரசனுடன் இளைப்பாறி யிருந்து, அப்பால் தென்றிசை நோக்கிப்படையுடன் எழுந்தான். அப்போது ஆதொண்டைச் சோழன் தன்னைச் சுற்றிலும் வருகின்ற படையைக் கண்டு ஆனந்தத்தோடும் மிக்க வீரா வேசத்தோடும் வழி நடந்தான். அச்



சேனையின் வரவினால் பூமி அதிர்ச்சியுண்டாயினது. ஆகாயமெல்லாம் தூளி பரந்து கதிரவன் ஒளியையும் மறைத்தது. கொடிகள் நக்ஷத்திர மண்டலத்தைத் தழுவிப் பரந்தன. குதிரைப் படைகள் குதித்துக் குதித்து நடித்துச் சென்றன. யானைப் படைகள் வாலைத் தூக்கிப் பிளிறிட்டுக்கொண்டு குன்றுகள் செல்வதுபோலச் சென்றன. வீரர்கள் மார்பைத் தட்டி வீரவாதஞ் செய்துகொண்டு, ஒருவரோடொருவர் உற்சாகத்துடன் யான் முன்பு யான் முன்பு என வழியை முந்தினர். வாள்கள் வானத்தில் ஒளிக்கும் மின்னொளியன்னத் தோன்றின. மேக கர்ச்சனைபோல போர் முரசு முழங்கின. இங்ஙனம் மிக்க உற்சாகமாய்ப் படைகள் முன்னும் பின்னுஞ் செல்ல ஆதொண்டைச் சோழன் காஞ்சிபுரத்தை அணுகி, முற்றுகை போட்டான்.

## விசுவாவசு.

இந்தச் செய்தியைத் தனது சாரணர்களால் கேட்டு, சிங்கம்போற் சீறிஎழுந்து என்னவாச்சரியம்! ஒரு முறை என்னுடன் போர்புரிந்து புறங்கொடுத்த ஆதொண்டைச் சோழனை மறுபடியும் என்னைஎதிர்க்க வந்திருக்கிறான். இதில் ஏதோ சூழ்ச்சியிருக்கவேண்டும். ஆயினும், இனிநாம் சும்மாவிருக்கக்கூடாதென, தனது சேனைத்தலைவரைக் கூவி, சீக்கிரத்தில் நமது படைவீரர்களைத் தயாராக விருக்கும்படிக் கட்டளை இட்டுத் தானேபழைய வரசர்கள் போல் "வருபடைதாங்கிப்பெயர் புறத்தார்த்தும் பொருபடைதரூஉங் கொற்றமு முழுப்படையூன்று சான்மருங்கினின்றதன் பயனே" என்று, தற்காலத்திய வரசர்கள்போ லல்லாமல் தானே படைவகுத்துத் தமது வீரர்களுக்கு உற்சாக வரும்படிச் செய்துகொண்டும், தன்னுடைய பெருமையையும் வீரத்தையும் வெளிப்படுத்திக்கொண்டும், அஞ்சா நெஞ்

சுடையவனையும், வாளை உழுபடையாகவும், வருபடையே உழுநிலமாகவும், செற்றத்தைவித்தி, வெற்றிப் புகழை விளக்கிப் பழையவீரர்களின் புகழைச் சொல்லத் தொடங்கி, 'படைவீரர்காள்! முற்காலத்தில் ஓய்வின்றிப் போர் விளைந்துகொண்டேயிருக்கும்; ஒவ்வொரு நாளும் அரசர்களும் வீரர்களும் புதிது புதிதாகப் போரின் சூழ்ச்சிகளைப் படைத்துக்கொண்டே வந்தனர்; அவர்கள் விழுப்புண்படாத நாளெல்லாம் வீணெனக் கருதிவந்தனர்; இவ்வாறு தறுகண்மையையும் தளராவுள்ளத்தையும் தரித்தவீரரும், அவர்தலைவரும் போரெனிற் பெருமகிழ்ச்சி கொள்வர். போர்க்கெடுத்த பறையறை கேட்டால் அவர்கள் உள்ளம் பூரித்து உவப்பர் என்று தன் படைஞர் மகிழும்படி எடுத்துச் சொல்லி, தானே போர்க்களங் குறுகினான்'. அப்பால், இருதிறத்துச் சேனையும் ஒன்றோடொன்று எதிர்த்து நின்றன. பின்னர், இரு சேனைக்கும் கை கலந்து கோரயுத்தம் நடந்தன. அதில், சில வீரர்கள் தலையறப்புண்டனர். பல யானைகள் மேகம் ஆகாயத்திலிருந்து விழுவதுபோல் பூமியில் விழுந்தன. சிலர் வெட்டுண்டு மடிந்தனர். பலர் குத்துண்டு கிடந்தனர். உயுத்தகளமெங்கும் கவந்தங்கள் ஆடின. பேய்களும் நாய்களும் கழுகுகளுந் திரிந்தன. சிற்சில வீரர்கள் இந்தக் கொடுமையைக் காண பயமடைந்து, உயிர்தப்பிப் பிழைப்பதற்காக அத்திகிரியின் முழைகளைத் தேடி ஓடி ஒளித்தனர். மலையின் அருவிபோல் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடின. ஆதொண்டைச்சோழன் தன் கைக் கிலக்கான வீரர்களை எல்லாம் வெட்டிவீழ்த்தி விசுவாவசுவின்மேற் பாய்ந்தான். அப்போது விசுவாவசுவரசன் புறங்காட்டிச் சென்றான்; அதைக் கண்ட ஆதொண்டைச் சோழன் புன்னகை புரிந்து, இதுவன்றோ வீரர்களின் தன்மை எனப் பரிகாசம் பண்ணினான்.



அதுகேட்டு விசுவாவசு மன்னன், கோபத்தால் கொதித்தெழுந்து, கையில் வாள்கொண்டு ஆதொண்டைச் சோழன் மேற் புலியெனப் பாய்ந்தான். அதன் பிறகு, இருவரும் மும்முரமாக வாட்போர் செய்யத் தொடங்கினர். அதில் ஒருவரோடொருவர் சற்றும் பின்வாங்காமல் வெகுநேரம் வரையில் போர் புரிந்தனர். அப்போது ஆதொண்டைச் சோழன் சிறிது களைத்துப் பரமசிவனை மனதில் எண்ணி முன்னினும் பதின்மடங்கு பலத்துடன் விசுவாவசுவைத் தாக்கித் தன் கரத்தால் அவன் தலை பூமியிற் சிந்தும்படி வெட்டினான். அப்போது, அவ் விசுவாவசு மன்னன் உடலினின்றும் ஒரு பேரொளிக் கிளம்பியது. அதுகண்ட சோழன் இஃதென்ன ஆச்சரியமாகவிருக்கின்றதே என மதிமயக்கமடைந்தான். அதற்குள், அச்சோதியானது ஓர் கந்தருவனாக மாறித் தேஜோ ரூபத்தோடு வானத்தில் நின்றது.

### விசுவாவசு பழம் பிறப்பு உணர்த்தல்.

விசுவாவசு, உயுத்தகளத்தில் மதோன்மத்தனாய் நிற்கும் ஆதொண்டைச் சோழனை நோக்கி, "சோழர் மரபுதித்தவரச! 'நான் ஒரு தேவபுருடன்; யாழ் வாசிப்பதில் மிகவும் பித்தம் பிடித்தவன். ஒருபகல் நான் என்னையும் அறியாமல் யாழ் வாசித்துக்கொண்டு செல்லுகையில், தேவேந்திரன் அமைந்து அரசு புரியும் சிங்காதனத்திற்குச் சமீபமாகச் சென்றேன்; அப்பொழுது தேவர் தலைவன் தன் அரியாசனத்தை விட்டு அப்பாற் சென்றிருந்தான்; என் மனம் அறியாமையால் அவ்வாசனத்தின்மீது உட்கார எண்ணியது; உடனே நான் பின்னர் வருந்தீங்கை எண்ணாமல் ஆத்திரமாகவும் வேடிக்கையாகவும் அதன்மீது அமர்ந்தேன்; அங்கு என்னைச் சூழ்ந்திருக்கும் தேவர்களைப் பார்த்து நான் சில பரிகாஸமான வார்த்தைகளைச்

சொல்லினேன்; அதுகேட்ட வாசவன் என்மீது கோபங் கொண்டு வந்து, என்னை மண்ணுலகிற் சென்று கோதாவரி தீரத்தில் மன்னனுவாய் என்று சபித்தனன்.

### சாப நிவர்த்தி.

உடனே, நான் அவனைப் பணிந்து, இந்தச் சாப நிவர்த்தி எப்பொழுது என்று கேட்டேன். அதற்கவன், 'சுருதிபுரத்திலிருந்து ஒரு சிவபக்தன் உன்னுடன் போர் புரிவான். அவன் கை வாளால் உனது சிரம் அறுபட்டு விழும். அப்பொழுதே பழைய பிறப்பை அடைவாய் என்று சாப நிவர்த்தியும் அனுக்கிரகித்தான். அவ்வாறே இன்று உனது அருள் வாய்க்கப் பெற்றேன், எனது பழைய வடிவமும் பெற்றேன்'. நீர் என்னை உயுத்தத்தில் ஜயங் கொண்டபடியால், இன்று முதல் உமக்கு ஜெயங்கொண்ட தொண்டைச்சோழன் என்னும் பெயர் விளங்கடவது என்று ஆசிகூறி மறைந்தான். அன்று தொடங்கி இந்த ஜயங்கொண்ட தொண்டைச் சோழன், சுருதிபுரியில் எழுந்தருளியிருக்கும் பரமசிவ மூர்த்திக்குக் கோபுரமும் மதிலும் சிறக்கக் கட்டிவைப்பித்துப் பணிகளும் உற்சவங்களும் நடத்தி வந்தான்.

---

## குறும்பரும் ஆதொண்டைச் சோழனும்.

ஆதொண்டைச் சோழன் அரசாண்டு வரும்போது, தொண்டை மண்டலத்தில் ஒரு பகுதியான செங்கற்பட்டு ஜில்லாவின் பல பகுதிகளிலும் குறும்பர்கள் மிக்கச் செல்வாக்குடன் வசித்து வந்தார்கள். அக்காலத்தில், அவர்களால் கட்டப் பட்டிருந்த கோட்டைகள் அறுபத்திரண்டென்பர். அவைகளில் இருபத்தி நான்கு கோட்டைகளே சிறப்புடன் விளங்கின வென்பர். அவ்விருபத்து நான்கினில் தலைமை பெற்று விளங்கி வந்தது புகலக் கோட்டை யொன்றே என்பர். ஆதொண்டைச் சோழன் இப்புழற் கோட்டத்தில்தான் அக்குறும்பரை எதிர்த்துப் போர்புரிந்தா னென்பர். இந்தக் குறும்ப சாதியாரே முன்னம் மதிகுலத்துதித்த பஞ்ச பாண்டவருக்கும் கௌரவருக்கும் நடந்த போரில், பாண்டவருடன் துணையாகச் சேர்ந்து, பின்னர் சிதறிப் போயினர் என்ப. அவர்கள் பிறந்து வளர்ந்த விடம் தோத நாடென்பர். இவர்களெல்லாம் ஜைன சமயமே மேலானது எனக் கொண்டு ஒழுகி வந்தவர். இவர்கள் எப்போதும் காடுகளிலேயே ஆடுகளை மேய்த்துக்கொண் டிருப்பவர்கள். இவர்களுடைய சாதியில் முதற் கூட்டத் தலைவரென்றும் உபக்கூட்டத் தலைவரென்றும் இரண்டு பிரிவுகள் இருந்தனவாம். அவர்களுக்குள் ஏதாயினும் சச்சரவு நேர்ந்தால், அதை அவ்விரு தலைவர்களே தீர்த்து வைக்க வேண்டுமே ஒழிய, மற்றவர்களால் அதைத் தீர்த்து வைக்க முடியாது. இக்காலத்தும் சிற்சில கிராமங்களில் முன்னோர் முறையையே அவர்கள்கையாண்டு வருகின்றார்கள். இக்குறும்பர்களே இடையர்கள் என்று சொல்லப் படுபவர். இவர்களைப்பற்றி ஒரு வேடிக்கையாக "இடைப் புத்தி பிடரியிலே" எனும் பழமொழியும் வழங்கிவருகின்றது ஆயின், உற்று நோக்கும் இடத்து இவர்களது ஆளுகைகள் எல்லாம் அதற்கு எதிரிடையாகவே இருக்கின்றது. இவர்களுக்கு ஆடுகள் மிகுதியும் உண்டு. அவைகளை மேய்ப்பதற்காகத் தினந்தோறும் வைகறை யாமத்து எழுந்து ஊரூராகக் காடு மேடெல்லாம் சுற்றிவருவார். மற்றும், இக்குறும்பர்களைப்பற்றி ஒரு கதையும் வழங்கி வருகிறது. இவர்களின் கூட்டத்துள் ஒருவன் ஒருநாள் ஒரு ஆட்டுக்குட்டியைத் தனது தோளின் மீது வைத்துக்கொண்டு, தோளின் மீதிருக்கும் அந்தக் குட்

டியையே ஊரெல்லாந் தேடித் திரிந்தான்; கடைசியாக ஒரு கிணற்றின் அடிவாரத்திற்கு வந்து சேர்ந்தான்; அதன் பிறகு அக்கிணற்றை எட்டிப் பார்த்தான்; அதனுள், தான் தேடி வரும் ஆட்டுக்குட்டியின் நிழலைக் கண்டான்; உடனே மிகவும் பேராவலுடன் அந்தக் கிணற்றினுள் குதிக்க முயன்றான். அவனது அறியாமைக் குணத்தை அருகாமையில் நின்றுகொண்டிருந்த ஒருவன் தெரிந்து, அடா! மூடா! "இடபுத்தி பிடரியிலே" என்று உலகம் கூறுகின்ற பழமொழியை உண்மையாக்கி விட்டனையே என்று அவனைத் தடுத்து, அவன் தோளின் மீதிருக்கும் ஆட்டுக் குட்டியைச் சுட்டிக் காட்டி மனம் மகிழும்படிச் செய்தான் என்பர். அன்று தொடங்கி இப்பழமொழி வழங்கி வந்தது என்பர் ஒருசாரார்.

## குறும்பர்களின் மதாசாரம்.

தமது கூட்டத்தில் எவராயினும் இறந்தால் மற்றவர்கள் எல்லாம் பெரியவன் சிறியவன் என்னும் வித்தியாஸம் இல்லாமல், அன்றே க்ஷவரஞ் செய்து கொள்ளுவார்கள். அப்படி க்ஷவரஞ்செய்து கொள்ளாவிட்டால், அவர்களைத் தமது கூட்டத்தாருடன் காரியா காரியங்களுக்கு அழைக்க மாட்டார்கள். அவர்களை வைத்துக்கொண்டு சமபந்தியாகப் போஜனஞ்செய்ய மாட்டார்கள். அவர்களைத் தன்னினத்தார் வசிக்குமிடத்தும் வசிக்க விடமாட்டார்கள். அவர்களை மிக்க குரூரமாக நடத்திக் கொன்று போடுவார்களாம். இவ்விதமாகவே முன்னம் நறும்பூர் என்கிற கிராமத்தில் ஒரு கருமம் நடந்தது. அந்தக் கருமத்தில் நான்கு குறும்பர்கள் கூட்டத்தாரோடு க்ஷவரஞ் செய்து கொள்ளுவதை மறுத்தார்கள். அதுகண்ட மற்றையவர்கள் எல்லாம் ஒன்றாகத் திரண்டு, அந் நால்வரை எதிர்த்துச்



சிறிதும் இனமென்று எண்ணாமல் கொன்று போட்டார்கள். அன்று முதல் அவ்வூருக்குக் குறும்பரைக் கொன்றவூர் எனப் பெயர் வழங்கி வருகின்றது. இத்தன்மையான ஒழுக்கத்தையே வெகுநாட் பரியந்தம் கைக்கொண்டு வந்தனர்கள். பின்பு, சில வாண்டுகள் கழித்துச் சோழவரசர்களின் பயத்தால் இக்கொலைத் தொழிலை ஒழித்து விட்டார்கள் என்றும் ஏற்படுகின்றது. இவர்கள் அக்காலத்தில், பேரழல், சாலப் பாக்கம், நெறும்பூர், அணைக்கட்டு, பட்டிப்புலம், ஆமூர், எலியூர், ரயிசிகுளம், களத்தூர், செம்பூர், தமுணூர், ஈக்காடு முதலிய விடங்களில் அரசுபுரிந்து வந்தனர் என்றும் புலப்படுகின்றது. ஆனால், இவ்வூர்களில் சிலவற்றிற்கு மாறுபெயர்கள் இப்போது வழங்கி வருகின்றன.

---

## ஆதொண்டைச் சோழன் கதையின் வேறுபாடு.

முன்னம் தென்திசை இடத்துக் கன்னியா குமரியும், வடதிசை யிடத்து விந்திய பர்வதமும், கீழ்த்திசை யிடத்தும் மேற்றிசை யிடத்தும் கடல்களை எல்லையாகக்கொண்டு இருந்தது தண்டகாரணியம் என்று சொல்லப்பட்ட அரணியம். அதைச் சிறிதுகாலம் தண்டகன் என்னும் அரசர் பெருமகன் ஆண்டு வந்தான். ஆகையால்தான் அதற்குத் தண்டக நாடு என்று காரணப் பெயர் வந்ததென்பர். இதற்குள்பட்டு விளங்கிய நந்தமிழ் நாடானது "குண கடல் குமரி குடகம் வேங்கட, மெனு நான்கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்" எனத் தென்றிசைக்கண் கன்னியா குமரியும், வடதிசைக்கண் வேங்கடமும், கீழ்த்திசைக் கண்ணும் மேற்றிசைக்கண்ணும் கடலும், எல்லையாகக் கொண்டதென்பர். இத் தமிழ் நாட்டைச் சேர சோழ பாண்டியராகிய மூவரும் முறையே அக்கினி குலத்தவ ரென்றும், சூரிய குலத்

தவ ரென்றும், சந்திர குலத்தவ ரென்றும் பெயர் வைத்துக் கொண்டு அரசாட்சி புரிந்துவந்தனர். இம்மூவேந்தர்களாலேயே ஆயிரத்தெட்டு சிவாலயங்களும், நூற்றெட்டு விஷ்ணுவாலயங்களுங் கட்டப்பட்டனவாம். இவர்கள் மூவரும், நல்லொழுக்கம், ஆசாரம், தேவதா பக்தி, நீதி வழுவாது நடத்தல், முதலியவற்றில் சிறந்துள்ளவர்களாக இருந்தவர்கள். அதனால் தான் சிவபெருமான் அவர்கள் அன்பினையும் நீதியினையும் பலவிடங்களில் வெளிப்படுத்தி யிருக்கின்றனர். மற்றும், ஐம்பத்தாறு தேசத்து அரசர்களுள்ளும் இத்தமிழ் நாட்டிலிருந்த அரசர்களைப்போல இத்துணைச் சிவ புண்ணியமும், புகழும், நற்கதியும் பெற்றவர்கள் மிகுதியாகப் புராணங்களில் காணப்படவில்லை. இவர்களால் ஆளப்பட்டுவந்த நாடுகளுக்குச் சோழமண்டல மெனவும், சேர மண்டலமெனவும், பாண்டி மண்டல மெனவும் பெயர்வந்தது. இதில், சோழமண்டலமானது ஆதொண்டைச்சோழன் பொருட்டு தென்சோழம், வடசோழம் என இரண்டு பாகமாகப் பிரிக்கப் பட்டது, அவற்றுள், தென்சோழ மண்டலம், வடசோழ மண்டலமெனப் பெயர்பெற்றுத் தமிழ் நாடானது நான்கு மண்டலமாக விளங்கிற்று. அவற்றுள், தென் சோழமானது,

" கடல் கிழக்குத் தெற்குக் கரை பொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசைய
வேணாட்டுப் பெண்ணை யிருபத்து நாற் காதஞ்
சோணாட்டுக் கெல்லை யெனச் சொல் "

எனவும், தொண்டை மண்டலமாகிய வட சோழத்திற்கு,

" மேற்குப் பவளமலை வேங்கட நேர் வடக்கா
மார்க்கு முவரி யணி கிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருபதின் காத
நற் றொண்டை நாடெனவே நாட்டு"



என, எல்லை வகுத்துக் காஞ்சீபுரத்தை ஆதொண்டைச் சோழன் தலைநகரமாக வைத்துக்கொண்டு ஆண்டு வந்தான். இவனுடைய தொண்டை மண்டலத்தில் இருந்த சிவாலயங்கள் முப்பத்தியாறு. இவனே காடு வெட்டி காஞ்சீபுரத்தை ஆண்டு வந்த சோழ சிகாமணி. இவன் சிவபிரானிடம் மிக்க அன்புள்ளவன். இவன் ஒருகாலத்தில் மதுரையில் எழுந்தருளியிருக்கும் பரமசிவனிடத்து மிக்க அன்புவைத்து, அவரது திருவடியைப் பணிய வேண்டுமென்று ஆசை வைத்திருந்தான். மதுரைக்குச் சென்றால் பாண்டிய மன்னன் தன்னைச் சிறைப்படுத்துவான் என்று எண்ணி, மனம் வெம்பிக் கிடந்தான். அவன் அவ்வாறு வருந்துவதைக் கண்ட மீனாட்சி சுந்தரேசுவரர், அச்சோழனை இராக்காலத்தில் மதுரைக்குக் கொணர்ந்து, பாண்டிய மன்னனால் மீன முத்திரை வைக்கப் பட்டிருந்த தமது கோவிற் கதவை யுடைத்து, உமாதேவியுடன் தரிசனங் கொடுத்தனுப்பிப் பின், அக் கதவங்களுக்குத் தமது இடப முத்திரையை வைத்தருளினர். இவ்விதமான திருவருளைப் பெற்ற சோழ மன்னன் வேளாளர்களைத் தன்னாட்டிற் கொண்டுவந்து குடிபுகச் செய்தான். பூர்வத்தில் இச் சோழன் அவர்களை மிகவும் மேன்மையுடன் பாராட்டிச் சகல விதமான மரியாதைகளையுங் கொடுத்து வந்தான். இவன் காலத்தில் வேளாளர்களே காணியாட்சிக்காரர்களாக விருந்தார்கள். காணியாட்சிக்காரர்கள் என்றால் நிலச் சுவாதீனக்காரர்கள் என்று பொருள்படுவதால், அக்காலத்தில் நிலங்களுக் கெல்லாம் இவர்களே முழு சுதந்தரத்தையும் பெற்றிருந்தார்கள் என்று ஏற்படுகின்றது. இவர்களுக்கு இந்தப் பெயரானது மாறி மிராசுதாரர்கள் என்கிற பெயர் வந்தது மகம்மதீய அரசாங்கம் இந்நாட்டைக் கைப்பற்றிய பின்னரே எனத் தெரி

கிறது. அப்பால், ஒருகாலத்தில், இக்காஞ்சி நாட்டில் பல வளங்களும் நிறைந்திருந்தது. அதை மதனபூபதி என்னும் அரசன் அரசர்க்குரிய உலகோம்பல், படை பயிலல், மனமடங்கல் என்னும் முத்தொழிலினும் சிறிதும் கவனஞ் செலுத்தாதவனாய்த் தீயோர் சேர்க்கையைப் பற்றிக் காமம் கட்குடி முதலிய துர்நடத்தைகள் அதிகரித்துத் தன்னாட்டுக் குடிகளை மிகவும் துன்புறுத்தி வந்தான். அப்பால், கற்புடை மாதரைக் கற்பழிக்க முயன்றான். அவனுக் கிணங்காதாரைப் பலவந்தஞ் செய்து, இம்சை செய்யத் தொடங்கினன். அக்காலத்தில் கற்பிற் சிறந்தாள் ஒரு வேதவல்லி என்னும் பெண் அவனை வெறுத்து மனம் புழுங்கி நீயும் உனது குடும்பமும், உனது நாடும் இருந்தவிடந்தெரியாமல் அழிந்து ஒழியக் கடவதெனக் கடுஞ்சாபமிட்டுத் தன்னுடலை விட்டுப் பிரிந்தனள். இதைக்கண்ட அவ்வூர்க் குடிகளெல்லாம் என்னே இத்தீயன் செய்கை, இனிநாம் இவனுடைய நாட்டில் இருந்து வாழ்வதைக் காட்டினுங் காட்டிற் காய் கிழங்கு தின்று வசிப்பதே மேலானதென்று கருதி,

"கொடுங்கோல் மன்னன் வாழு நாட்டிற்
கடும்புலி வாழுங் காடு நன்றே"

என்று அந்நாட்டை விட்டு, வேற்றரசர் நாட்டிற் போய்க் குடியேறினார்கள். சில நாளைக்கெல்லாம் அவ்வரசனும் அவனது குடும்பமும் ஒருங்கே யழிந்தன. அவனது நாடும் மண்மேடிட்டுப் புல் பூண்டுகளுமின்றிப் பாலைவனமாயின. சில வாண்டுகள் கழிந்த வளவிலே அந்நாடு முழுவதும் காடு மண்டிப் புலி, கரடி, மான், பன்றி, சிறுத்தை முதலிய கொடிய விலங்குகள் உலாவித் திரிதற் கிடமாயின. அப்புறம் சில வருடங்கள் மனித சஞ்சாரமே இல்லாத பெருங் காடாக



விருந்தது. பின்னர் சில நாளைக்குப் பிறகு, குறும்பர்கள் அக்காட்டில் ஆடு மேய்க்க வந்து சேர்ந்தார்கள். அவர்களின் பெரு முயற்சியினால் காடாயிருந்த இடமெல்லாம் நாடானது. ஆகிலும், அவர்களுக்குள் சரியான தலைவர் ஏற்படாமல் தத்தளித்துக்கொண்டிருந்தனர். அதற்குள், பல விடத்திலும் தீங்குகள் மேலிட்டு, கொலை, களவு, கொள்ளை முதலியவைகள் சொல்ல முடியாமல் நடந்துகொண்டிருந்தன. பின்னர் களத்தூர்க் கோட்டத்து வேளாளர் ஒருவர் வந்து, அங்கு நடந்துவரும் தீங்கைப் போக்கப் பற்பல விதமான பெருமுயற்சிகளைச் செய்து வந்தனர். அவரால், சிறிது காலத்திற்குள் அந்நாடு குழப்பம் நீங்கி நன்னிலை யடைந்து குடிகளும் மிக்கச் செழிப்படைந்தனர்.

அன்று முதல் அவ்வேளாளப் பிரபுவே அந் நாட்டுக் குடிகளுக்குத் தலைமை வகித்து, அவர்களால் எல்லா மரியாதையும் பெற்று வந்தனர்.

அதுகண்டு பொறாமை கொண்ட, காஞ்சீபுரத்தில் இருந்த கம்மாளர்கள் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து, இவருக்கு நாம் அடங்கி நடப்பதா? இவர் அயலூரில் இருந்து நம்மையெல்லாம் அடிமையாக்கி யாளுகிறார். ஆயினும், நாம் இவருடன் எதிர்த்தால் வெற்றியடைய மாட்டோம். இவருக்கு அரசன் சகாயம் அதிகமாகவுண்டு. இந்நாட்டுக் குடிகளும் இவர் மீது மிக்க அன்பும் பக்தியும் வைத்துள்ளார்கள். ஆகையால், இந்நாட்டுக் குடிகளில் சிலரைக் கலகப்படுத்திக் கட்சியேற்படுத்திக்கொண்டு, நாம் பின்னிருந்து, இவ்வேளாளப் பிரபுவைத் திண்டாடவிடுவதுதான் நல்ல யோசனை என்று, அம்மண்டலமாக்களிற் சிலரைக் கூட்டி, நீங்கள் இம்மண்டலத்தில் சகல விதமான உரிமையுமுடையவர்கள். உங்கள் பெருமையை நாங்

கள் அறிவோம். அவைகள் உங்கள் பெருமை எல்லாம் அறியாமையால் தினைதினை குறைத்துக்கொண்டுவருகின்றனர். இவைகளுக்கெல்லாம் காரணம் அந்த வேளாளப் பிரபுதான். அந்தப் பிரபுவின் அதிகாரத்தைப் பிடுங்கி விட்டீர்களானால், உங்கள் கௌரவத்திற்கு ஒருவிதமான குறைவும் நேரிடாது என்றனர். அதற்குச் சிலர் உடன்பட்டனர். பலர் உடன்படவில்லை.

பின்னர், மகாஜனங்களுக்குள் இரண்டு கட்சிகள் உண்டாயின. இருவருக்கும் பகைமை அதிகரித்தது. கண்ட விடமெல்லாம் ஒருவரை யொருவர் துன்புறுத்தத் தொடங்கினர். குடிகள் இதே சண்டையாகச் சிலகாலங் கழித்தனர். அதன் பின்பு, அவர்களுக்குள் கட்சிப் பிரதி கட்சியில், மறுபடியும் அவ்வேளாண் பிரபுவுக்கே அதிகாரத்தைக் கொடுத்தனர்.

அப்போது கம்மாளர், அவ்வேளாளர் மீது தீராப் பகைமையுடையவர்களாய், ‘உழு தொழிற்கு உரிய கொழு கலப்பை கார் முதலிய கருவிகளை நாம் செய்து கொடுப்பதினால் அல்லவா இவர்கள் நம்மை அடக்கியாள வந்திருக்கிறார்கள்; இவர்கள் அதிகாரத்தைச் சிறிது பார்ப்போம்’ என்று அவ்வினத்தவர் எல்லாரும் ஓரே கட்டுப்பாடாகத் தங்கள் குலத் தொழிலைச் செய்யாமல் இறுமாப்படைந்து சும்மா இருந்தனர்.

கிராம வாசிகள் எல்லோரும் உழவுத் தொழில் செய்ய முடியாதவர்களாய் மிகவும் கஷ்டமடைந்தார்கள். இங்ஙனமே சில மாதங்கள் சென்றன. குடிகள் உணவில்லாமல் கதறத் தலைப்பட்டனர். பிறகு இந்தச் செய்தியை அவ்வூரார் தங்களுக்குத் தலைவராக விருக்கும் அவ்வேளாண் பிரபுவினிடஞ் சென்று முறையிட்டார்கள்.

அதுகேட்ட அவ்வேளாளப் பிரபு, அக் கம்மாளர் மீது மிகவுங் கோபமடைந்து அவர்களை எல்லாம் பிடித்துச் சிறை



யில் அடைத்து வைத்தனர். பின்னர், அக்கம்மாளர்களின் மனைவிமார்கள் மிகவும் துன்பமடைந்து, தங்கள் கணவர்கள் செய்து வந்த வேலைகளைத் தாங்களே செய்யத் துணிந்து, உழவு தொழிற்கு வேண்டுவனவாகிய கருவிகளை எல்லாம் செய்து கொடுத்தார்கள். ஆனால், அவ்வனிதையரின் புருடரை வெகு நாள் வரையில் சிறையிலிருந்து விடுவிக்கவில்லை. அப்பால், சிறையுளிருந்தவர்கள் எல்லாம் அவ்வேளாளரிடஞ் சென்று, இனி நாங்கள் வழக்கப்படி எங்கள் தொழிலைச் சிறிதும் குடிகள் குறைகூறா வண்ணம் நடத்தி வருகிறோம்; எங்கள் குற்றத்தைப் பொறுத்துக் காவலின்றும் விடுவித்து விடுங்கள் என்று வணங்கிக் கேட்டுக்கொண்டனர்; அதன் பின்பு, அவர்களை எல்லாம் விடுத்தார். அன்று தொடங்கி அவர்கள் தங்கள் குலத்தொழிலைச் சிறிதும் குறைவில்லாமல் செய்து வந்தார்கள். இவ்வாறே இம்மண்டலத்தின் சிற்சில விடங்களில் மிகவும் சிறப்புடனும் அமைதியுடனும் தொழில்கள் குறையாமல் நடந்துவந்தன. நாடும் வளம்பட்டு வந்தது.

இந்தத் தொண்டை மண்டலத்துக் குடிகளும் ஒருவிதமான குறைவுமில்லாமல் மிக்க சுகமாகவே வாழ்ந்து வந்தனர். அதைக்கண்டு அந்நிய நாட்டினரும் அற்புதமடைந்து, எம்மண்டலத்தும் இம்மண்டலமே வசிப்பதற்குச் சுகமாக விருக்கிறதென்று கொஞ்சகாலத்தில் தாமாகவே வந்து ஆங்காங்கே குடி புகுந்தனர்.

இங்ஙனம் சிறப்படைந்திருந்த தொண்டை மண்டலத்தைக் கைப்பற்ற வேண்டுமெனக் குறும்பர்கள் படையெடுத்து வந்தனர். ஆனால், தேயமகாஜனங்களின் சகாயம் அவர்களுக்கு இல்லாமையால், அவர்கள் எண்ணிய வெண்ணம் நிறைவேறவில்லை. உயுத்தமும் நடக்கவில்லை.

அப்பால், மூன்று வருடங்கள் வரையில் ஒருவிதமான கலகங்களும் இல்லாமல் சனங்கள் எல்லாம் மிகவும் அமைதி

யாகவே யிருந்தனர். பின்னர், அநேக குறும்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு பெருந்திரளான படைகளைச் சேர்த்துக் கொண்டு, இத்தொண்டை மண்டலத்துள் புகுந்து எதிர்த்தார்கள். இம்மண்டலத்திலுள்ள சனங்களும் குடியரசுத் தலைவரும் சேர்ந்து கூடியவரையில் அவர்களுடன் எதிர்த்துப் போர் செய்தார்கள். எதிரிகளின் படை பலத்திருந்தமையாலும், இவர்களுக்குச் சரியான பக்கத்துணை இல்லாமையாலும், முடிவில் இவர்கள் தோல்வியடைந்து அந்நாட்டை விட்டு அந்நிய தேசங்களில் சென்று குடியேறினார்கள். அந்நாள் முதல் குறும்பர்கள் இத்தொண்டை மண்டலத்துப் பல பகுதிகளைத் தங்கள் சுவாதீனமாக்கிக் கொண்டு ஆங்காங்குக் கோட்டை கட்டிக்கொண்டு வந்தார்கள்.

## வேளாளர் குடிபுகுந்தது.

குலோத்துங்கன், தன்னுடைய நாட்டிலுள்ள குடிகள் கொடிய வன விலங்குகளால் வருத்தமடைவதையும், பயிர்கள் பாழாவதையும், தனது சாரணர்களால் கேள்விப்பட்டு, வேடுவர், குறவர், மறவர் முதலியோர் பின்னே தொடர்ந்துவரத் தன் படையுடன் தண்டகாரண்யத்துள் புகுந்தான். அங்கு, புலி, கரடி, காட்டுப் பன்றி முதலியவைகளை அழித்து வருகையில் நாழிகை பதினைந்து ஆகிவிட்டது. அரசன் தேகம் களைப்படைந்து வாடியது. நாவரண்டது. பின்பு அவன் தன்னுடன் வந்த பரிவாரங்களை யெல்லாம் அருகாமையிலுள்ள ஒரு சோலையில் இருக்கச் செய்து, தான் மாத்திரம் ஒரு குதிரையின்மீது ஏறிக் கொஞ்சதூரஞ் சென்றான். அப்போது அவன் எதிரில் ஒரு இருடி ஆச்சிரமந் தெரிந்தது. உடனே அவன் அவ்வாச்சிரமத்தின் பக்கல் சென்று பார்க்கையில், ஆங்கோர் மகான் தவத்தில் இருக்கக் கண்டான். பின்னர், அவருக்குப் பணிவிடை செய்து வரும் அவரது புத்திரி நாககன்னிகை



யென்பவள் மிகவும் ரூபவதியாயிருக்கக் கண்டு, அவள் மீது மோகங் கொண்டான். அந்தக் கற்பிற் சிறந்த கன்னிகை அவ்வரசன் முகக்குறிப் புணர்ந்து, நாணத்தாற் றலைகுனிந்து, அச்சத்தாற் அகங்குழைந்து, பயிர்ப்பினால் பின்னிடைந்து, மடமையால் மனம் வேறுபட்டு, "நான் என் தந்தை யனுமதியின்றி உம்மை மணம் நேரேன்," என்று முறுமுறுத்தாள்.

அதற்கு அவன், "உன்னருமைத் தந்தையார் அரும் பெருந் தவத்திலாழ்ந் திருக்கிறார்; அவரை நான் இப்போது ஒருவிதமான தொந்தரையும் புரியலாகாது; யானோ இந் நாட்டை யாளுமரசன்; என்னைக் கடிமணஞ் செய்து கொள்ளும் பக்ஷத்தில் உனக்கு ஒருவிதமான குறைவுமிராது; உன் மனம் நாடுவதை எல்லாம் அநுபவிக்கலாம்; இவ்வளவு பேரழகுடன் இவ்வடர்ந்த கானகத்தில் எதற்காக காலங் கழிக்க வேண்டும்; வேண்டாம்; என்னுடன் வந்தால், நலமடைவாய்" என்றான். அதுகேட்ட அவ்வனிதா ரத்தினம்! அரச! "நீர் என்ன தருமமுணராதவர்கள் போல் தெரிவிக்கின்றீரே! பெண்கள் கலியாணம் ஆகும் வரையில் தந்தையின் சம்ரக்ஷணையில் அன்றோ இருத்தல் வேண்டும்; கலியாணமான பிறகல்லவா கணவன் சொற்படி நடத்தல் வேண்டும்; அப்படியல்லாமல், நான் எனது மனம்போல நடந்தால் பின்னர் என் தந்தையாரின் கோபத்திற் கிலக்காய்த் துன்பமாக வல்லவா முடியு" மென்றாள்.

அதுகேட்டவரசன் புன்னகை புரிந்து, "செம்மனச் செல்வி, உன் வார்த்தைக்கு மெச்சினேன். ஆயின், நீ முன்னோர் கையாடி வந்த முறையைச் சிறிதும் அறியாதவள்; அகத்திணை இலக்கணத்தைக் கனவிலுங் கேளாத இளமைப் பருவத்தையுடையவள். நம் முன்னோர்கள் எல்லாம் உலகத்தில் சிறந்த ஒழுக்கமாகக் கொண்டுவந்தது காந்தருவ மணமொன்றே யாகும்; அதுதான் அவர்களாற் கூறப்பட்ட அட்டவகை

யான மணங்களுள் சிறந்தது ; அனேக அரசர்களாற் செய்யப்பட்டு வந்தது. அம்முறையைக் கைப்பற்றி நடப்பதே உத்தமமானது; மற்றைய மணங்களில் ஒவ்வொரு விதமான குற்றங்களும் குறைகளுமுண்டு; இம்மணமோ பிறரால் பழிக்கப்படுவதன்று" என்றான். அதற்கவள், 'தருமமுண்டேல் கருமமுமுடியு'மென்றாள். உடனே அவன் ஆங்குள்ள ஆதொண்டைப் பூக்களைக்கொய்து மாலையாகத் தொடுத்து அவள் கழுத்திலிட்டுத் தன் விரலிலுள்ள மோதிரத்தை அந்தக் கன்னிகையின் விரலிலிட்டுக் குலாவினான். அப்போது அவள், "அரசே! எனக்குப் பிள்ளை பிறந்தால் என்ன செய்வீர்?" என்று கேட்டாள்.

அதற்கவன் "பெண்மணி! நான் எனதரசாட்சியை அப்பிள்ளைக்கு அளிப்பேன்" எனச் சத்தியஞ் செய்து கொடுத்தான். பின்பு இருவரும் சில தினங்கள் சுகமாக இருந்தார்கள். கதிரவனும் கனைகடலி லாழ்ந்தான். கறையிருள் படர்ந்தது. கானகத்திலிருந்த கொடிய விலங்குகளும் பறவைகளும் தத்தமது உறைவிடங்களிற் சேர்ந்தன. அரசனும் தன்னூரை நினைந்து மீளவும் வருகிறேனென்று சொல்லி விட்டு, தன் சேனையுடன் தனது இருப்பிடம் போய்ச் சேர்ந்தான். அப்பால், அவ்வரசன் அதை மறந்து ராஜகாரியத்தின் மேலேயே கண்ணாக இருந்து விட்டான். இவ்வரசர் பெருமகனையே சிலர் தமது ஆராய்ச்சியின் வன்மையால், மணிகண்ட சோழன் என்றும், சிலர் குலோத்துங்க சோழனென்றுங் கூறுகின்றனர். ஆயின் முன்னர் கூறிய கதைக்கும் இக்கதைக்கும் பலவகையான வேறுபாடுகள் தோன்றினும் இங்குக் கூறிய வரசன் இக்காலத்து ஆராய்ச்சி யுடையார் கொள்கைப்படிக் கம்பர் காலத்திருந்த குலோத்துங்க வரசனென்றே புலப்படுகின்றது.

அப்பால் சில நாட்கள் கழிந்தன. முன்னர் கூறிய, அந்த நாககன்னியானவள் உடனே கருப்பவதியாகி ஓர் ஆண்மகவைப் பெற்றாள். அவளது தந்தையாகிய தபோமுனிவர் நிஷ்



டைநீங்கி, நடந்த வர்த்தமானங்களைக்கேட்டுக் களிப்படைந்து, அந்தக் குழந்தைக்கு ஆதொண்டன் என நாமகரணஞ்செய்து வளர்த்து, வேண்டுமான வித்தைகளை எல்லாம் கற்பித்தார். அவனுக்கு வயதும் இருபதிற்கு மேலாகிவிட்டது.

இஃதிங்ஙனமிருக்க, குலோத்துங்கசோழன் வெகுநாள் புத்திரப்பேறின்றி, பின்பு தன் பட்டமஸ்திரீயின் வயிற்றில் ஓர் ஆண் மகவுதித்தது. அக்குழந்தையை அவன் நாளொரு மேனியும் பகலொரு வண்ணமுமாகக் கண்ணினும் மேம்பாடாக வளர்த்து வந்தான். இங்ஙனம் சில வாண்டுகள் கழிந்த வளவில் அரசன் தன்னுடைய வயோதிகத்தை யுணர்ந்து, அந்நாக கன்னியையும் தான்செய்த சபதத்தையும் மறந்தவனாய்த் தன் பட்டமஸ்திரீயின் உதரத்துப்பிறந்த பிள்ளைக்குப் பட்டாபிடேகஞ் செய்யவேண்டுமென்று எண்ணி, தன்னாடுகளெல்லாம் வள்ளுவரைக்கொண்டு பறையறைவித்தான். இதைக் கேள்வியுற்ற நாககன்னி தன் தகப்பனாரிடஞ் சென்று, அரசன் முன் தனக்கு வாக்குத்தத்தஞ் செய்ததையும் இப்போது அதற்கு எதிரிடையாக அவன் பறையறைவித்துள்ளதையும் தெரிவித்துக்கொண்டாள்.

அதுகேட்ட தந்தையாகிய அத்தபோதனர் தன்னுடைய பௌத்திரனை அழைத்து, அவனுக்குப் பழைய வரலாற்றை எல்லாம் எடுத்துச்சொல்லி, 'அப்பா! நீ அவ்வரசனிடஞ் சென்று, உன் தாயினிடம் அவன் வாக்குத் தத்தம் செய்ததைத் தெரியப்படுத்தி, உனக்கு இளவரிசு பட்டத்தைக் கட்டவேண்டுமென்று திடமாகக்கேள் ; அதற்கு அவன் உடன்படாவிட்டால் யுத்தத்திற்கு வாவென்று அழைத்து, பின்பு அவனுடன் யுத்தம்செய்து வென்று, அந்நாட்டைப் பெறும்படியாக முயற்சி செய்வாயாக' என உபதேசஞ் செய்து அனுப்பினார்.

ஆதொண்டனும், தன் பாட்டனார் இட்ட ஆணையைச்

சிரமேற்றாங்கிச் சோழனிருக்கும் காவிரிப்பூம் பட்டணத்திற்குள் பிரவேசித்து, "நாக கன்னியினிட முண்டான உமது குமாரன் வந்திருக்கின்றான்; அவன் தனக்கே பட்டம் கிடைக்க வேண்டுமெனக் கேட்கின்றான்" என்று பலவரும் திடுக்கிடும்படியாக ஒரு தூதனை அனுப்பினான்.

இருபது வருடங்களுக்கு முன்னர் நடந்த விஷயங்கள் அவ்வரசனுக்குச் சிறிதும் ஞாபகம் இல்லாதிருந்தபடியால், அவ்வரசன் தன்னிடம் வந்த தூதன் சொல்வதைக் கேட்டுப் பெருநகை புரிந்து, 'என்னடா! பித்தா! நீ அறிவிழந்தனை போலும்! எவனோ பைத்தியங்கொண்டு பிதற்றும் வார்த்தையை ஒரு பெரிதாக மதித்து, என்னிடத்தில் சிறிதும் அச்சமின்றிச் சொல்ல வந்துவிட்டனையே? நன்று நன்று, என் முன்னர் நிற்காதே? உயிர் பிழைத்துப் போய்ச் சேருக' என்று கோபத்துடன் சொல்லி அனுப்பினான். இதைத் தூதன் மீண்டும் வந்து, 'அரச குமர! நீ சொல்லியனுப்பிய வார்த்தையானது என் உயிருக்கு இறுதியையே கொடுக்கும் போலாயிற்று; என்னோ என் குலத்தோர் முன்னம் பண்ணிய புண்ணிய மிகுதியாற் றிரும்பிவந்தேன். இனி நான் உமது விஷயத்தில் செல்லமுடியாது. ஆயின், அரசன் கோபத்துடன் கூறிய மறுமொழி இதுவே என மொழிந்தான்.

அவ்வார்த்தை கேட்ட ஆதொண்டைச் சோழன், சிறிது நேரம் வரையில் ஒன்றுந் தோன்றாது நெடுமரம்போலசைவற்று, பின்னர், கண்சிவக்க, கைதுடிக்க, புருவம் நெளிக்க, கோபக் கொடிபறக்கக் கொதித் தெழுந்து, 'அடா! காவர்கார! இன்றோடு இந்நாடும் உம் அரசும் இருக்கின்றதைக் காண்பேன். நீ அரசனிடம் அந்தரங்கமான பக்தியுள்ளவனை, இக்கணமே சென்று நான் போர் புரிவதற்கு வரும்படியாகத் தெரிவித்ததாகச் சொல்' என்றான். மீளவும் அந்தக் காவற்காரன் தேகம் நடுநடுங்க நாக்குழற, காற்றடுமாறக், கண்ணீர்



பெருகியோட அரசன் அமர்ந்திருக்கும் அரியணையின் முன்னர் போய் நின்று, ஆதொண்டன் தெரிவித்ததைச் சொல்லினான்.

அதுகேட்ட சோழன் கோடைகாலத்து மேககர்ச்சினைக்குத் தலைகவிழ்க்கும் நாகமென நடுங்கித் திடுக்கிட்டான். மந்திரிகளைப் பார்த்தான். பெருமூச்செறிந்தான்; அமைச்சர்களும் சிறிது ஆலோசிக்கத் தொடங்கினார்கள். முன்பு அரசன் வேட்டையின்மேல் சென்றபோது உடன் சென்றிருந்த மந்திரியானவன், அந்தப் பிள்ளையை நேரில் வரும்படியாக உத்தரவளித்தான். அவ்வாஞ்ஞையை அரசனும் ஒப்புக் கொண்டான். உடனே தூதன் ஓடோடியும் வெளியிற்போய் அங்கே நின்றுகொண்டிருந்த அவ்வரச குமாரனை அழைத்து வந்து அரசன் முன்னர் நிறுத்தினான். அப்போது ஆதொண்டன் ஆதொண்டை மாலைபுரள அரசன் அடிபணிந்து எழுந்து நின்றான். உடனே மந்திரி மனம் எத்தனையோ எண்ணலாயினது. ஆயினும், மந்திரி தன் எண்ணத்தைப் பிறர் அறியவொண்ணாதபடி உள்ளத் தடக்கிக் கொண்டு ஆதொண்டனை நோக்கி. "நீர் எந்தக் காரணத்தால் அரச குமாரன் என்று சொல்லுகிறீர்;" என விசாரித்தான்.

அதற்கு ஆதொண்டன் தன் தந்தையாகிய இவ்வரசன் தண்டகவனத்தில் தன் பரிஜனங்கள் புடைசூழ வேட்டைக்கு வந்ததையும், நாகக் கன்னிகையாகிய தன்னுடைய தாய்க்கு ஆதொண்டை அலங்கலை அலங்காரமாக வணிந்து, அங்கை மோதிரம் அகமுவந்து கொடுத்து, அன்னாளை ஆன்றோர்முறைப்படிக் காந்தருவ மணஞ் செய்து கொண்டதையும், குமரனுதிப்பின் அக்குமாரனுக்கே தம் அரும்பெருஞ் செல்வ நாட்டிற்கு அதிபதி யாக்குவதாக வாக்குத் தத்தம் வகுத்த வரலாற்றையும், படிப்படியாக ஒன்றும் விடாமல் அரசன் உணர்வெழுமாறு சொல்லி அங்கத்தினர் மகிழ அந்தக் கணையாழியையுங் காண்பித்தான்.

அப்போது அவைக்கண் வீற்றிருந்தவர்கள் அனைவரும் அவ்வரச குமாரன் திருவுருவைக் கண்டு திகைத்தனர். என்ன அற்புதம்! என்ன தேஜசு! இச்சிறுவனிடத்தில் அமைந்து கிடைக்கும் திருவுருவமே நம்மரசனுக்குச் சம்பந்தப்பட்டவனென்பதைத் தெரிவித்து விடுகின்றனவே; இச்சிறுவன் காம்பீரியத்தையும் வீரச்சுபாவத்தையுங் கண்டால், இவன் சொல்வதெல்லாம் உண்மையேயல்லாமல் ஒருகாலும் பிசகாதென்று அனைவரும் ஒரே மனதாய் ஒப்புக் கொண்டார்கள்.

இவை அனைத்தையுங் கேட்டவுடனே அரசனுக்கு முன்பு நடந்தன யாவும் ஞாபகத்திற்கு வந்தது. அரசன் உடனே அச்சிறுவனை அணைத்துக் கொண்டு அருகில் இருக்கச் செய்தான். பின்னர் அரசன் மனம் இன்னதுதான் செய்வதென நிலை கொள்ளாமல் தாமரையின் மீது தண்ணீரெனத் தத்தளித்தது; அவன் முகம் திடீரென மேகத்தால் மறைக்கப்பட்ட மதிபோலாயிற்று. ஆயினும் அவன் தான் அடைந்த மனவேறுபாட்டை வெளிக்குப் புலப்படுத்தாமல், இச்சிறுவன் பிறந்தது தெரியாமல் பட்டமஸ்திரீயின் குமாரனுக்குப் பட்டங் கட்டுவதாய் அறிக்கை செய்து விட்டோமே; அதை எவ்வாறு மாற்றுவது; மாற்றினால் உலக வசைக்கு நாம் ஆளாவோமே; இந்தச் சிறுவனுக்குப் பட்டங் கொடா விட்டால் சத்தியத்திற்கு விரோதமாகிறது; இத்துன்பத்திற்குப் பரிகாரம் என்ன செய்வதென, 'இருதலைக்கொள்ளி எறும்புபோல' அரசன் தரும சங்கடத்தில் அகப்பட்டு மீளும் வகை தெரியாது அல்லலுற்றிருந்தான்.

அவனது மன வருத்தத்தைக் குறிப்பால் அறிந்த அமைச்சர்கள், 'அரசே! நீரென்ன கல்வி அறியாக் கசடர்கள்போல மனநிலை குன்றிக் கலங்குகின்றீர், வேண்டாம். இவ்விடயத்தில் நீர் கலங்குவது அழகல்ல. உம்முடைய நாட்டை இரண்டு



பிரிவாகச் செய்து இரண்டு குமாரர்களுக்கும் பக்ஷபாதமில்லாமல் கொடுத்து விடுவதே மேலான தருமம் என்றனர். அதுகேட்ட வரசன் மனத் திருப்தி யடைந்து, உடனே பெண்ணையாற்றின் தென்பாகத்தில் உள்ள நாட்டைத் தென்சோழமென்றும், வடபுறத்தைச் சார்ந்துள்ள நாட்டை வடசோழமென்றும், இரண்டு பகுதியாக்கித் தென்சோழ நாட்டைப் பட்டமஸ்திரீயின் குமாரனுக்கும், வடசோழ நாட்டை அந்நாக கன்னியின் குமாரனுக்கும் பட்டங்கட்டி மகிழ்ந்தான். பிறகு சில வாண்டுகள் செல்ல அரசன் அரனடிக்கு ஆளாயினன்.

அதன் பிறகு ஆதொண்டன் தன் தகப்பனால் கொடுக்கப்பட்ட நாட்டையும் நாமகரணத்தையும் பெருமையாக ஏற்றுக் கொண்டு, நால்வகைப் படையுடன் வேளாளர் சூழத் தொண்டை மண்டலம் வந்து சேர்ந்தான். அந்நாள் முதலாக அவ்வட சோழத்திற்குத் தொண்டை மண்டலமெனப் பெயர் வழங்கலாயிற்று.

ஆதொண்டன் அந்நாட்டினுட் புகுந்து நாற்புறமுஞ் சுற்றி வருகையில், எங்குப் பார்த்தாலும் அடர்ந்து ஓங்கிய முட்செடிகளாற் பரவியிருந்தது. அப்புகைந்த கானகத்துள் மனித சஞ்சாரமே காணுவது மிக்க துர்ப்பலமாக விருந்தது. ஆனால், சிற்சில பகுதிகளில் மாத்திரம் நாகரீகம் இல்லாத முரட்டுச் சுபாவமுடைய குறும்பர்கள் சுயேச்சையாய் வசித்து வந்தனர். இவர்களுக்குக் காருண்ய மென்பதே தெரியாது; மிருகங்களுக்கும் இவர்களுக்கும் சிறிதும் வித்தியாசமே கிடையாது. இவர்கள் காடுறை வாழ்க்கையே பெரிதாக மதித்து, நாராயணவனம், வள்ளிமலை, பதவேடு, மகேந்திரவாடி, ஆம்பூர் பேட்டை முதலான ஊர்களில் கோட்டை கட்டிக்கொண்டு வசித்து வந்தார்கள். அவைகளையே பிற்காலத்துக் கோட்டமென்று பெயரிட்டு வழங்கலாயின. அக்கோட்டைகள் இக்காலத்தும் சிற்சில இடங்களில் இப்பொழுதுங் காணப்படுகின்

றன. அக்காலத்தில் குறும்பர்களில் மிகவும் திறமையும் வீரமும் பெற்றுத் தலைவனாக விளங்கியவன் கோமாண்டு என்பர். அக் கோமாண்டென்பவனே இத் தொண்டை மண்டலத்தை இருபத்திநான்கு கோட்டங்களாகப் பிரித்தான் இவன் காலத்திலேதான் குறும்பர்கள் அரசாட்சி மிகச் செழிப்படைந்து இருந்தது; தன்னினத்தார் மேற்போக்கடைய பலவிதமான முயற்சிகளைச் செய்துகொண்டு வந்தான். இக் கோமந்தன் வருடப் பிரதி வருடமும் தன் இனத்தாரை யெல்லாம் ஒன்றுகக் கூட்டி மந்தைவிழா என்கிற ஒரு திருவிழாவைத் தவறாமல் நடத்தி வந்தான். இத்திருவிழா நடத்துவதற்காக மந்தையார் திறை என்கிற சுங்கமும் வசூலித்து வந்தான். இத்திருவிழாவையே இக்காலத்திலும் சில கிராமாந்தரங்களில் இருக்கும் இடையர்கள் விடாது தாங்கள் மேய்த்து வரும் ஆட்டு மந்தைக்குப் பல வலங்காரங்களுஞ் செய்து பொங்கலிட்டுத் தண்ணீர் இறைக்கின்றார்கள்.

இக் குறும்ப மன்னர்களுக்கும் சோழ மன்னர்களுக்கும் எப்பொழுதும் பகைமை யுண்டு. அதனால் சோழர்கள் இவர்கள் மேல் அநேக தடவை படையெடுத்து இவர்களை நாசஞ் செய்தார்கள். ஆயினும் இக் குறும்ப வரசர்கள் தங்களரசை முழுமையும் இழந்து விடவில்லை. பின்னர் சில வாண்டுகள் போர் என்னும் பெயரே இல்லாமல் அமைதியாக விருந்தது. அப்பால் குறும்பர்க ளெல்லாரும் ஒரு கூட்டமாகச் சேர்ந்து, முன்னினும் இரண்டு மடங்கு ஒற்றுமையுடன் ஒருவருக்கும் பயப்படாமல் விளங்கி வந்தனர் அப்பொழுதுதான் புழற்கோட்டையானது ஒருவரும் அணுக வொட்டாமல் அவர்களால் அரண் செய்யப்பட்டு அவர்கள் அரசு ஓங்கி வந்தது.

பின்னர், ஆதொண்டைச் சோழன் புழற்கோட்டத்தில் இருக்கும் குறும்ப வரசரை அழிக்க வெண்ணி அவர்களோடு எதிர்த்துப் போர் செய்தான்.



அந்தப் போரில் சோழன் தோல்வியடைந்து மனம் நொந்து புறங்காட்டி யோடிச் சோழிங்க புரத்திற் போய்த் தங்கியிருந்தான். இந்தச் சோழிங்க புரத்தையே இப்போது சோளங்கி புரமென்றும், சோழி இலிங்கிபுரம் என்றும் வழங்கி வருகின்றனர். அச் சோழிங்கிபுரத்தில் சோழன் வெகுநாள் வரையில் வசித்து வந்ததாகத் தெரிகின்றது; இவன் காலத்தில் தான் அங்கு ஒரு சிவாலயங்கட்டி, அதற்குச் செய்யவேண்டிய சிறப்புக்கள் செய்து வைத்ததாக அங்குள்ள கோவிலின் கல்வெட்டால் தெரிகின்றது ஆகையால், இந்தச் சோழன் சைவமதத்தில் மிக்க பற்றுடையவன் என்று தெரிகின்றது. அதன் பின்பு, இவன் சிவபெருமானைக் குறித்து வெகுநாட்கள் இடைவிடாமல் தவம்புரியத் தொடங்கினன். இரண்டு வருடங்கள் சென்ற பின்னர், ஓர் நாள் விடியற்காலத்தில் சிவபெருமான் அவனது சொப்பனத்தில் தோன்றி யனுக்கிரகஞ் செய்தார்.

அன்று தொடங்கி ஆதொண்டன் மனம் உறுதியடைந்தது; தேகமும் முன்னிருந்த ஒளி வேறுபட்டு புதிய பிரகாசம் வீசியது. உடனே அவன் பரமசிவன் திருவருளை முன்னிட்டுப் படை திரட்டிக்கொண்டு மீளவும் அக்குறும்பர்கள் வசித்துவரும் புழலக்கோட்டையை முற்றுகை போட்டான். பின்பு, இருதிறத்துப் படையும் ஒன்றோடொன்று உயுத்தகளத்தில் எதிர்த்துப் போர் செய்யத் தொடங்கின. சிறிது நேரம் வரையில் இருதிறத்துச் சேனையும் பின் வாங்காமல் போர் புரிந்தன. கடைசியில், ஆதொண்டன் சேனையே வெற்றி பெற்றது. அப்புறம், ஆதொண்டன் அக்கோட்டையின் வாசற்படி யண்டையில் சென்று அங்கே வெண்கலத்தால் இடப்பட்டிருக்குங் கதவினைக் கழற்றிக் கொண்டு வந்து விட்டான். அன்று முதல் தொண்டை மண்டலத்தில் வசித்து வந்த குறும்பர்களின் கொட்டம் அடங்கியது. அவர்கள் நாடெங்கும் குடியேறி யிருந்தபடியால், அவர்களைக் காணுந்

தோறும் அரசன் படைகள் நிற்க வொட்டாமல் அடித்துத் துரத்தினார்கள். அதன்மேல், அக்குறும்பர்கள் மைசூர், நீலகிரி, சேர்வராயன் மலைமுதலான இடங்களில் போய்க் குடியேறினார்கள். மேலைத் தொண்டை நாட்டில் உள்ளவர்கள் இன்னமும் சிலர் இருக்கின்றார்கள்.

அதன் பின்பு, ஆதொண்டைச்சோழன் தன்னுடன் வந்த வேளாளர்களையும், முன்னர் இந்நாட்டிலிருந்து குறும்பர்களின் துன்பம் பொறுக்க மாட்டாமல் அயல் நாடுகளில் சென்று குடியேறி யிருந்த வேளாளர்களையும் அழைப்பித்துத் தன்னாடு வளம் பெறும்படிச் செய்தான். காடாக விருந்த சிலபாகங்களையுஞ் சீர்திருத்தி நாடாக்கினான். இதைக் கம்பரும்,

"மேடு வெட்டி வளப்படுத்தி மெய்வரம்பு நிலைநிறுத்திக்
கோடு வெட்டிக் காராளர் குவலயத்தைக் காத்திலரேற்
பாடு வெட்டிக் குறும்படக்கப் படைவேந்தரவர் விளைத்த
நாடு வெட்டிப் பகையறுத்துக் கலிகளைய மாட்டாரே"

என்று கூறியதையுங் காண்க.

இது நிற்க, அக்காலத்தில் வசித்துவந்த வேளாளர்கள், கொண்டை கட்டிகள் என்றும், சோழிய வேளாளர் என்றும், துளுவ வேளாள ரென்றும் மூன்று பிரிவினை யுடையவர்களாக விருந்தனர். இவர்களுக்கு இப்பெயர் வந்ததின் காரண மென்ன வெனில், இத்தொண்டை மண்டலத்தில் வசித்துக் குறும்பர்களுடன் அளவளாவி, அவர்களின் ஒழுக்கத்தையே பின்பற்றித் தலைமயிரைப் பின்னர் கொண்டை போல முடித்து வந்தார்கள்; ஆகையால், கொண்டை கட்டிய வேளாள ரெனவும், அரசனுடன் சோழ நாட்டிலிருந்து இத்தொண்டை நாட்டிற் குடிபுகுந்த வேளாளருக்குச் சோழிய வேளாள ரென்றும், கன்னட தேயத்தில் உள்ள துளுவ நாட்டில் இருந்து வந்த வேளாளர்களுக்குத் துளுவ வேளாள



ரென்றும் காரணப் பெயர் கொடுத்து அழைக்கப்பட்டு வந்தனர். இவ்விதமாகப் பல வேளாண் குடிகள் இத்தொண்டை மண்டலத்தில் ஆதி குடியினராக விருந்தார்கள். இம்மூவர்களுள் துளுவநாட்டு வேளாளரே இம்மண்டல முழுவதும் பரவி ஆங்காங்கு பெருமையுடன் இருந்தனர். மற்றை இருவரும் தனித்தனியேசிறுபான்மையராகஇருக்கின்றார்கள். இவர்களுக்காகவே ஆதொண்டன் இம்மண்டலத்தை இருபத்து நான்கு கோட்டமாகவும், எழுபத்தொன்பது நாடாகவும் பிரித்து, ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு வேளாளரைத் தலைவனாக்கித் தான் அவர்களுக் கெல்லாம் சக்கிரவர்த்தியாக விளங்கினான். இக்காரணத்தினாலேயே மற்றை மண்டலத்தைக் காட்டினும் இம்மண்டலத்தரசனுக்கு இப்பெயர் வந்ததென்க. இத்தொண்டைமானே வெகுகாலம் வரையில் நீதி தவறாமல் இம்மண்டலத்தை அரசாட்சி புரிந்து, அநேக கோவில்கள் கட்டித் திருவிழா செய்துவந்தான் என்பர்.

---

# கடினபதவுரை.

அ.

அறம் - தருமம்.
அகிலம் - பூமி.
அமைதி - பொறுமை.
அமுது - உண்பவர்களுக்குச் சாவை அகற்றுவது.
அகம் - மனது.
அந்தகன் - எமன்.
அயிந்திராணி - இந்திரன் மனைவி
அடிப்படுத்து - தன் கீழ்ப்படுத்தி.
அரணியம் - காடு.
அழுக்காறு - பொறாமை. இதை அழுக்கு + அறு என்றும் பிரித்துப் பொருள் கொள்ளலாம்.
அல்லல் - துன்பம்.
அவைக்களம் - சபை.
அபிநயம் - பாவனை. பரத சாத்திரத்தில் கைகால்களைக்காட்டி நடிக்குங் குறி.
அளி - கிருபை.
அரைக்கணம் - ஒரு நிமிஷம்.
அடிகள் - பாதங்கள்.
அல்லவை - தருமமல்லாதவை.
அறம் - அறக்கடவுள்.
அறநெறி - தருமவழி.
அடைக்கலம் - சரணம் புகுதல்.
அருள் - கிருபை.
அபிப்பிராயம் - கொள்கை.
அச்சுறுத்தல் - பய முறுத்தல்.
அபிவிருத்தி - மிகுதி.
அங்கவிலக்கணம் - சாமுத்திரிகா விலக்கணத்தில் கூறிய தேக லக்ஷணம்.
அநீதம் - அக்கிரமம்.
அரியாதனம் - சிங்காதனம்.
அரிமான் - சிங்கம்.
அங்கி - நெருப்பு.

ஆ.

ஆற்றல் - பராக்கிரமம்.
ஆதரித்து - காப்பாற்றி.
ஆற்ற - சகிக்க.
ஆசு கவி - ஒருவன் ஒரு புலவனைப் பார்த்து, விஷயத்தைக் கொடுத்துப் பாடெனச் சொல்ல, உடனே எல்லா விலக்கணங்களும் அமையக் கொடுத்தவபிப்பிராயம் பொருந்தப் பாடல்.
ஆஞ்ஞை - கட்டளை.
ஆடரங்கம் - நாடகமேடை.
ஆச்சிரமம் - முனிவர் வசிக்குமிடம்.
ஆடல் ஆசிரியன் - பரத நாட்டியங் கற்பிக்குங் குரு.
ஆயத்தம் - சித்தம்.
ஆசனம் - இருக்கை.
ஆறலைக்கள்வர் - வழிபறிப்போர்.
ஆழ்ந்திருத்தல் - ஊன்றி நிற்றல்.
ஆசி - ஆசீர்வாதம்.

இ.

இடைகழி - முற்றம்.
இராஜதானி - தலைநகரம்.
இறுமாப்பு - கர்வம்.
இருநில மடந்தை - பூமிதேவி.
இசையாசிரியன் - பாடல் சொல்லிக் கொடுப்போன்.
இலக்கு - குறி.
இருசுடர் - சூரிய சந்திரா.
இன்னா - துன்பம்.
இதழ்கள் - ஓலைச் சீட்டுகள்.



இல்லக் கிழத்தியர் - மனைவிமார்.
இழைத்த - செய்த.
இகழ்தல் - அவமதித்தல்.

உ.

உன்மத்தன் - தானென்னும் அகங்கார முடையோன்.
உபயம் - இரண்டு, ஜதை.
உழை - பக்கம்
உறுத்தல் - கோபித்தல்.
உறுகண் - துன்பம்.
உலா - ஒருவகைப் பிரபந்தம்.

எ.

எடுத்துக்காட்டு - உதாரணம்.
எண்பேராயம் - அரசருக்குரிய எட்டுத்துணைவர், அவர் மந்திரியர், கருமாதிகாரர், சுற்றம், கடைக்காப்பாளர், படைத்தலைவர், இவுளிமறவர், யானை வீரர்.
எதிர் ஊன்றல் - எதிர்த்துப் போர் செய்தல்.
எயிறு - பல்.
எஞ்சிய - மிகுந்த.

ஐ.

ஐம்படைப் பருவம் - சக்கரம், சங்கம், கதை, வில், வாள் இவைகளை அலங்காரமாகக் குழந்தைகளுக்கு அரையில் கட்டுவது வழக்கம்.
ஐம்பெருங்குழு - சாரணர், சேனாபதியர், தூதர், புரோஹிதர், மந்திமார்.

ஓ.

ஓம்பி - காப்பாற்றி.

ஔ.

ஔவியம் - அழுக்கற்ற.

கடைமணி - ஆராய்ச்சிமணி.
கன்னபரம்பரை - குலமுறை.
கவிவன்மை - கவிபாடும் சாமர்த்தியம்.
கடு - விஷம்.
கடைத்தலம் - வாயிற்புறம்.
கருவி - ஆயுதம்.
கருவுயிர்த்தாள் - பெற்றாள்.
களித்தி - சந்தோஷமடை.
கணிதவிவர்த்தகர் - சோதிடர்.
கணையாழி - மோதிரம்.
கருமவினைஞர் - பணியாளர்.
கணிகைமாது - வேசை.
கறையிருள் - நிறைந்தவிருள்.

கா

காம்பீரியம் - பெருமை.
காதலன் - புத்திரன்.
காந்தருவம் - எண்வகை மணத்துள் ஒன்று.

கு.

குமரன் - சுப்பிரமணியன்.
குழல் - புள்ளாங் குழல்.
குவலயம் - பூமி.
குழப்பம் - கலக்கம்.

கூ.

கூலம்மருகு - கடைத் தெருவு.
கூற்றம் - எமன்.

கோ.

கோட்டம் - கோயில்.
கோடு - கொம்பு.

ச.

சம்பிரமம் - சிறப்பு.

சா.

சாரணர் - ஒற்றர்.
சாதனம் - சௌகரியம்.
சான்றோர் - மேலானவர்.

க.

கசடர் - மூடர்.
கல்விமான் - புலவன்.
கடிமணம் - கலியாணம்.
கப்பம் - பகுதி.
கதிரவன் - சூரியன்.
கனையெரி - புகைந்து எரியும் நெருப்பு.
சாஸனம் - கல்லில் ஒருவரது சரிதத்தைப் பொறித்தல்.
சாஷ்டாங்கமாக - எட்டு அங்கங்களும் பூமியில் படும்படியாக.

சி.

சிலை - கல்.
சிற்றின்பம் - இன்பத்திலிச்சை.
சின்மொழி - சில பேச்சு.

சீ.

சீலம் - ஒழுக்கம்.
சீற்றம் - கோபம்.

சு.

சுடர் - ஒளி.

சூ.

சூழ்ச்சி - தந்திரம்.

செ.

செம்மல் - ஆண்பாற் சிறப்புப் பெயர்
செறிந்தது - நிறைந்தது.
செவ்விய - சிறந்த.

சை.

சைவம் - பரமசிவனை அடிதொழும் மதம்

சொ.

சொல்லேர் உழவர் - வித்துவான்கள்.

சோ.

சோகம் - துயரம்.

ஞா.

ஞாலம் - பூமி.

த.

தண்டத் தலைவன் - சேனாதிபதி.
தண்மதி - குளிர்ந்த சந்திரன்.
தலையிலாயாக்கை - முண்டம்,
தண்டகாரண்யம் - தண்டகன் என்னும் அரசனால் ஆளப்பட்ட விடம்.
தருமத் தலைவர் - முனிவர்.
தரிந்திரக்காரர் - மந்திரிகள்.
தலைத்தார் சேனை - படையின் முன்னர் நிற்கும் வீரர்களின் கூட்டம்.
தந்திரவழி - மறைவழி.

தி.

திரள் - கூட்டம்.
திலகம் - பொட்டு.
திகழ்தர - பிரகாசிக்க.
திகிரி - சக்கரம்.

தெ.

தெலுங்கவீமன் - தெலுங்க நாட்டை அரசாண்டுவந்த வரசன்.

தே.

தேஜஸு - பிரகாசம்.

ந.

நடுவண் - மத்தி.
நமன் - எமன்.

நா.

நானாதேயம் - பல நாடுகள்.
நாடகக் கணிகை - ஆடல் மாது.
நானிலம் - பூமி.
நாட்டம் - நோக்கம்.
நாணுப்படல் - வெட்கப்படல்.
நாமகரணம் - பெயரிடல்.
நால்வகைப் படை - ரதகஜதுரகபதாதி.



நி.

நிகர் - ஒப்பு.
நிராகரித்து - வேண்டாமெனத் தள்ளி.
நிஷ்டை - யோகம்.
நியமித்தான் - ஏற்படுத்தினான்.

நீ.

நீடூழி - நெடுங்காலம்.

நூ.

நூறியடித்து - முறியவடித்து.

நெ.

நெடுமரம் - நின்ற மரம்.

நே.

நேரேன் - செய்து கொள்ளேன்.

நை.

நைமித்தியம் - பூசைகள்.

ப.

பரம்பரை - குலமுறை.
பட்டினம் - கடற் கரையிலுள்ள நகரம்.
பட்டமஹிஷி - முதன் மனைவி.
பதி - ஊர்.
பரத நாட்டியம் - பாதசாத்திரத்தின் வழியே நடித்தல்.
பரிதபித்து - வருத்தப்பட்டு.
பரிவாரம் - சேனை.
பயிர்ப்பு - ஸ்ரீகளின் நாற்குணங்களில் ஒன்றாகிய அருவருப்பு.
பரிகாரம் - சமனம்.
பழுது-பொய்.

பா.

பாடு - பெருமை.
பாசறை-அரசர்கள் உயுத்தகாலத்தில் தங்கு மிடம்.
பாவை-பொம்மையைப் போன்ற பெண்.

பாதாம்புஜம் - பாதங்களாகிய தாமரை.
பாமாலை - பாட்டு.

பி.

பிரபலம் - சிறப்பு.
பிரகதீசுவரன் கோவில்-தொண்டை நாட்டுத் திருப்பதிகளில் ஒன்று.
பிரளயம் - யுகத்தின் முடிவு.
பிற்பகல் - மூர்த்தத்தின் பின் காலம்.
பிரதி பலித்தல் - எதிரே தோன்றும் தோற்றம்.
பித்தன் - பைத்தியக்காரன்.

பு.

புரோஹிதன்-பழமை யானதை அறிந்து கூறுவதில் வல்லவன்.
புலனுதல் - விளங்குதல்.
புன்சிரிப்பு - மந்தகாசம்.

பூ.

பூமகள் - பூமிதேவி.
பூவின் மாது - இலக்குமி.

பே.

பேறு - பாக்கியம்.
பேரம்பலம் - தில்லைத் தலம்.
பேராவல் - மிகுந்தவாசை.

பொ.

பொறித்தது - எழுதியது.
பொலிவு - பிரகாசம் or அழகு.
பொருமி - அழுது.
பொலிந்து - அமைந்து.
பொன்வசி - பொன்னாற் செய்த தொட்டில்.
பொன்பூத்து - அழகு நிறைந்து.

ம.

மண்டலம் - நாடு.

மருதம் - நால்வகை நிலங்களுள் ஒன்று. வயலும் வயல் சார்ந்த விடமும்.
மரித்தல் - இறத்தல்.
மறம் - பாவம்.
மல்லாபுரம் - மகாபலிபுரம்.
மலிந்த - நிறைந்த.
மருட்டி - திகைக்கச் செய்து.
மரபு - வம்சம்.
மருவிய - சேர்ந்த.
மடமை - பேதைமை.

மா.

மாநிலம் - பூமி.
மாசு - குற்றம்.
மாறுகொள்ளல்-விரோதங் கொள்ளல்.

மி.

மிடைந்து - அணிந்து.

மு.

முற்றுகை - பகைவரின் கோட்டையைச் சூழ்ந்து கொள்ளல்.
முதுமை - கிழப்பருவம்.
முற்பகல் - ஒரு முகூர்த்தத்தினது முன் பங்கு.
முகூர்த்தம் - ஒன்றரை மணி.
முத்தி - மோக்ஷ நேரம்.

மூ.

மூதாதை - முன்னோர்.

மே.

மேடு - உயர்ந்த பூமி.

வ.

வஞ்சினம் - வீரவார்த்தை.
வருணம் - பிரிவு, சாதி.
வனசரன - வேடன்.
வனசரம் - விலங்கு.
வஞ்சி - வெற்றி பெற்றவர்கள் சூடும் மாலை.

வா.

வாசவன் - இந்திரன்.
வாட்டம் - சரீர விளைப்பு.
வாலபருவம் - வாலிபப் பருவம்.

வி

விசுவாஸம் - அன்பு.
விண்மீன் - நக்ஷத்திரம்.
விலங்கல் - மலை.
வில்லேருழவர் - வில்லையே ஏருகவுடைய வீரர்.

---

# விளக்கம்.

கரிகாற் சோழன்—இவன் காவிரிப்பூம் பட்டினத்திலே, இளஞ்சேட் சென்னியன் என்னும் சோழராஜாவுக்குப் புத்திரனாக அவதரித்து, உத்தரதேசத்திலே படைகொண்டு அநேக நாடுகளைத் தன் கீழ்ப்படுத்திப் பகையரசை யடக்கி மனுநெறி தவறாமற் செங்கோல் செலுத்தியவனும், கடியலூர் உருத்திரங் கண்ணனா ரென்றும் புலவர் பட்டினப்பாலை யென்னும் பிரபந்தத்திலே தன் பராக்கிரமம், செங்கோல், கொடை முதலிய நற்குணங்களை யெடுத்துப் பாடப்பெற்றவனும், அப்புலவர்களுக்கு அப்பிரபந்தத்திற்காகப் பதினாறு லக்ஷம் பொன் பரிசிறைத்தந்தவனும், ஆகிய இப்பெருந்தகையே சாலிவாகன சகாப்தத்தில் விளங்கியவன். இவன் சாரமாமுனிவரிட்ட சாபத்தால் உறையூர் மண் மாரியால் அழிய, அதில் அரசுசெய்திருந்த பராந்தக சோழனும் மனைவியும் அம்மண் மாரிக்குத் தப்பியோடிக் காவிரி நதியைக் கடந்து செல்லும்போது பராந்தகன் குதிரையினின்றுந் தவறிக் காவிரியில் வீழ்ந்திறக்க, அவன் மனைவி அக்கரைப்பட்டு ஒரு வனத்தை யடைந்தாள். பராந்தகன் இறக்கும்போது கருப்பத்திலிருந்த இக்கரிகாற் சோழனே சில நாளில் பிரம்மாநதி முனிவர் ஆச்சிரமத்தில் பிறந்தான்.

அவன் இம்முனிவரால் எல்லாக் கல்வியும் சிறிதுஞ் சந்தேகமில்லாமல் தெரிந்து கொண்டிருக்கும் நாளில், அரசிழந்த சோழ நாட்டிற்கு ஓரரசனை நாடுமாறு விடப்பட்ட யானையா

னது சென்று அச்சிறுவனைத் தூக்க வெத்தனித்தும் போதிய வலியில்லாது திகைத்து நின்றது. அப்போது பிரம்மாநதி முனிவர் அப்புத்திரன் காலில் ஒரு கரிக்கட்டியால் வரை செய்து விட்டார். அவ்வளவில் அப்புத்திரனை யானை தூக்கிச் சென்று முடி சூடுவித்தது. இதுவே பெயர்க் காரணம். அன்றியும், இப்பெயருடையார் இருவர் சோழர் இருந்ததாகத் தெரிகிறது.

கோச்செங்கணான்—இவன் சுபதேவன் என்னும் சோழவரசனுக்கும், கற்பிற் சிறந்த கமலவதி யென்னும் மாது சிரோமணிக்கும் பிறந்தவன். கமலவதி இவனைப் பிரசவிக்கும் சமயத்தில் அங்கே சென்று கூடியிருந்த சோதிடர்கள் இப்பிள்ளை ஒரு நாழிகை கழித்துப் பிறக்குமாகில், முப்புவனங்களையும் அரசாளும் என்று சொல்லக் கேட்டு அப்பிள்ளையை அச்சமயம் பிறக்க வொட்டாமல் அடக்கி யிருந்து, ஒரு நாழிகை கழித்தபின் பெற்றாள். உரிய காலத்தில் பிறவாமல் உதரத்தில் கிடந்தமையால் அப்பிள்ளையினது கண்கள் சிவந்திருந்தன. கமலவதி அப்பிள்ளையை நோக்கி, "என் கோச்செங்கண்ணனே" என்று சொல்லிக்கொண்டு உடனே இறந்துவிட்டாள். அது காரணமாகவே கோச்செங்கட் சோழனெனப் பெயர் கொண்டான். இவன் பூர்வ ஜன்மத்திலே ஜம்புகேசுவரத்திலிருக்கும் சிவலிங்கப் பெருமானுக்கு மேற்கட்டியிட்ட சிலந்தியெனப் பெரிய புராண நூலார் கூறுகின்றனர். இவன் சோழ நாட்டிலே அநேக சிவாலயத் திருப்பணிகளும், சிதம்பரத்திலே தில்லைவாழந்தணர்களுக்குத் திருமாளிகைகளும், அமைப்பித்த சிவபக்தன். இவனையே கோச்செங்கட் சோழநாயனார் எனப்படுவது. இவன் பாரத யுத்தம் முடியும் வரை



யில் பஞ்சபாண்டவருக்குத் துணையாயிருந்த தென்னாட்டு அரசர்களுக்குள்ளே ஒருவனாகிய சோழனுக்குப் பின்னே சமீப காலத்திலே முடிசூடி அரசு புரிந்தவனென்பது கலிங்கத்துப் பரணியால் நிச்சயிக்கப்படும். அதுவுமல்லாமல் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரது தேவாரத்திலே இவனை எடுத்துக் கூறப்படுதலாலும் இவர் காலம் நாலாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன்னுள்ளதாதல் வேண்டும். களவழி நாற்பதிலே பொய்கையார் என்னும் புலவரால் பாடப்பட்டவரும் இவரே யாவர்.

ஆதித்தன்—இவன் முன்னம் சேரநாட்டிலிருந்த ஓரரசன். இவன் சோழர் மரபைச் சார்ந்தவன். இவன் சிதம்பரத் தலத்துக் கனகசபையின் முகட்டைக் கோங்கிற் செம்பொன்னினால் வேய்ந்தவன். சிவபக்தி முதிர்ந்தவன்.

விக்கிரமாதித்தன்—இவன் சோழராஜ்யம் மிகவும் புகழ் பெறுமாறு முப்பது வருடகாலம் அரசு புரிந்தவன். இவன் காலத்தில்தான் வங்கியசேகரன் என்னும் பாண்டியன் மதுரையையாண்டுவந்தான். இப்பாண்டியன் சோமசுந்தரக் கடவுளிடம் சங்கப்பலகை பெற்றதும் இவன் காலத்திலேதான்.

ஒட்டக்கூத்தர்—இவர் ஆயிரத்திருபது வருஷங்களுக்கு முன்னே குலோத்துங்க சோழன் அவைக்களத்திலே விளங்கிய ஒரு தமிழ்ப் புலவர். இவர் பாடிய ராமாயணத்தில் உத்தர காண்டம் மாத்திரமே சர்வாங்கீகாரமாகிக் கம்பராமாயணத்தோடு சேர்க்கப்பட்டது. இவர் சாதியில் கைக்கோளர். இவர் மூவருலா பாடியவர். ஈட்டி எழுபது என்னும் நூலையும் இயற்றியவர். குலோத்துங்கனுக்கு ஆசாரியராயு மிருந்தவர்.

கம்பர்—இவர் சோழ மண்டலத்திலே திருவழுந்தூரிலே பிறந்து சடையப்ப முதலியாரால் ஆதரிக்கப்பட்டு விளங்கிய தமிழ்க் கவிச்சக்கரவர்த்தி. இவர் சடையப்ப முதலியார் வேண்டுகோளின்படி ராமாயணத்தைத் தமிழ்ப்படுத்திச் சோழன் சபையில் அரங்கேற்றினவர். இவருடைய கவிகள் வெண்சொல்லும் புதைப்பொருளும் உடையனவாய் எத்துணை வல்லாரையும் முதன் மயக்கிப் பொருள் வெளிப்பட்டவிடத்துப் பேரானந்தமுறச் செய்யு மியல்பின. இவர் காலம் இற்றைக்கு ஆயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன்னையது. கம்பர் காலத்தைச் சிலர் தக்க நியாயமின்றிப் பலவாறு கூறி, நானூறு, ஐந்நூறு என்று இடர்படுவர். ஒட்டக்கூத்தரும், புகழேந்தியும் இவர் காலத்தவ ரென்பது இக்கதையினாலும் தொண்டைமண்டல சதகத்தாலும் விளங்குகிறது. புகழேந்தி வச்சிராங்கத பாண்டியனுடைய சமஸ்தான வித்துவான். உறையூரிலிருந்த குலோத்துங்கனுக்குப் பெண் கொடுத்தவன் இப்பாண்டியனே. இவன் துலுக்கரால் வெல்லப்பட்ட பராக்கிரம பாண்டியனுக்கு முன்னர் அரசு புரிந்தவன். பராக்கிரம பாண்டியன் நாற்பத்தைந்து வருஷம் அரசு புரிந்தவன். துலுக்கர் வென்றது இற்றைக்கு எண்ணூற்று எழுபது வருஷங்களுக்கு முன்னர் என்பது யாவருக்கும் உடன்பாடாம். ஆகவே, எண்ணூற்றெழுபதும் நாற்பத்தைந்தும் அதற்கு முன் ஓரறுபது மாகச் சென்ற வருடங்களைத் தொகை செய்யுமிடத்து, 'எண்ணிய சாத்த மெண்ணூற்றேழின் மேல்........கவி யரங்கேற்றினனே" என அரங்கேற்றுங் காலங் கூறுஞ் செய்யுள் இழுக்காக மாட்டாது அக்காலத்தில் அவ்வரங்கில் உடன் இருந்து கேட்ட வைணவாசிரியர் ஸ்ரீமந்நாதமுனிவர்கள். அவருக்குப் பின் ஆசாரிய பரம்பரையாக வந்தோர் இப்பொழுது இருப்ப



வரை உள்ளிட்டு நாற்பத்து மூவராவர். ஒருவர்க்கு இருபத்தைந்து வருஷமாக வைத்துக் கணக்கிட்டாலும் ஆயிரத்து எழுபத்தைந்து வருஷங்களாகும் கம்பரது காலம். ஸ்ரீமான், கோபிநாத ராயர் அவர்கள் வெளியிட்டுள்ள சோழவம்ச சரித்திரத்தில் கூறிய கணக்குப் பிரகாரம் பார்த்தால், இக்கம்பர் காலம் இக்குலோத்துங்க வரசனது காலமென்றே தோன்றுகின்றது. ஆகையால், இக்கம்பர் இவ்வரசனது காலத்தவர் எனச் சொல்லத் தட்டில்லை. இக்கால வாராய்ச்சிக்காரர் சில காரணங்களால் ஏற்றியும் இறக்கியும் கூறுவர்.

அம்பிகாபதி—இவன் கம்பர் மகன்; கல்வியில் மிக வல்லவன்; இவன் சோழவரசனாற் கொல்லப்பட்டவன்; இவன் சோழன் மகளிடம் மிகவும் காதல் பூண்டு உயிர் துறந்தவன். இவனையே சிலர் தண்டியலங்காரம் செய்த தண்டியாசிரியர் என்று கூறுவர். இப்பொழுதும் இவனைப் பற்றி அம்பிகாபதிக் கோவை என்னும் ஒன்று விளங்குகிறது.

உயாபதி—இவள் குலோத்துங்கன் வேலைக்காரி. இவளே நாகிரத்தினத்திடம் தூதாகச் சென்று வந்தவள்.

நாகிரத்தினம்—இவள் புகாரில் இருந்த ஒரு கணிகை மாது; இவளையே குலோத்துங்க மன்னன் அபிமானித்தது; இவளது வயிற்றில் தோன்றியவனே ஆதொண்டைச் சோழன்; இவளே அவ் வாதொண்டன் குழந்தையா யிருக்கையில் ஆதொண்டங் கொடியைச் சுற்றிக் காவிரிக் கரையில் விட்டவள். இவளது சரிதம் வேறுபட்டும் வழங்குவது காண்க.

பெருநற்கிள்ளி—இவனுக்குச் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பர்; இவன் சேரமான் மாந்தரஞ்

சேரலிரும் பொறையனைப் போரிடை வென்றவன். சேரமான் மாவெண் கோவுக்கும் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதிக்கும் நட்பினன். இச்சோழர்களுள் பல கிள்ளிகளுண்டு. சோழன் நலங்கிள்ளி சேட்சென்னி, சோழன் கிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி, சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி, சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி என்பன காண்க. மற்றும், கோவலன் காலத்திலும் ஒரு பெருநற்கிள்ளி என்னும் அரையன் உறையூரை அரசாண்டு வந்ததாகவுந் தெரிகிறது.

யவனர்—பாரத வருஷத்திற்கு மேற்கேயுள்ள தேசத்தில் வசிப்போர் யவனரெனப்படுவோர். இவர்களுள் ஒரு சாரார் யயாதி புத்திரனாகிய துர்வசு வமிசத்திலே பிறந்து வேதானுஷ்டானங்களைத் துறந்து பதிதரான க்ஷத்திரியர். அவர்கள் பாரத வருடத்தைவிட்டு அதன் மேற்கேயுள்ள தேசங்களிலே சென்று யவனரோடு கலந்து யவனராயினார்கள். யவனம்—பாரத வருடத்திற்கு மேற்கேயுள்ள தேசம். 'கிரேக்க தேசம்' அத்தேயத்தார் யவனரெனப்படுவார். முன்பு யவனரும் யவனப் பெண்களும் ஆரியவரசர்களுக்கு ஏவலாளராக விருந்தார்களென்பது சில வடமொழி நாடகங்களில் காணப்படுவதன்றியும், தமிழில், சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு முதலியவைகளிலும் யவனர்கள் தமிழரசர்களுக்குக் காவற்காரர்களாக விருந்தார்களென்பதுந் தெரிகின்றன.

குறும்பர்—இவர்கள் வெகு நாட்களுக்கு முன்பு தண்டகாரணியம் முழுவதும் பரவி யிருந்தார்களென்றும், இவர்களே முன்னர் பல கோட்டைகள் கட்டிக்கொண்டு வசித்தார்க



ளென்றும், இவர்கள் இடையர் என்றும் செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்ட்டு மான்யூலாற் றெரிய வருகிறது.

வேளாளர்—உழுவித்து உண்போரும் உழுது உண்போருமென இருவகையினர். அவருள், உழுவித்து உண்போர் மண்டலமாக்களும் தண்டத் தலைவருமாய் சோழ நாட்டிலிருந்த பிடவூரையும், அழுந்தூரையும், நாவூரையும், ஆலஞ்சேரியையும், பெருஞ்சிக்கலையும், வல்லத்தையும், கிழாரையும் தங்களுக்குப் பிறப்பிடமாகக் கொண்டு வேளெனவும், அரசு எனவும் உரிமை எய்தினோரும், பாண்டிய மன்னரிடமிருந்து மரியாதைப் பட்டமாகிய காவிதி ஏனாதி என்கிற பெருமைப் பட்டங்களை அடைந்தவர்களாயும், குறுமுடி குடிப் பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்களுக்கு மகட்கொடைக்குரிய வேளாளராம். இவர்கள் ஆதியில் கங்கைக் கரையில் இருந்தவர் ஆதலினாலும், பின்னர் அங்கிருந்து வந்து தென்னாட்டிற் குடி கொண்டவர்கள் ஆதலினாலும், கங்கா புத்திரனென்றும், கங்கை மைந்தரென்றும், கங்கா குலத்தவரென்றுங் கூறப்படுவர். மேகத்தைச் சிறை செய்த பாண்டியனை இரந்து பிணை நின்று சிறைமீட்டவர் வேளாளராதலின், அவர்களுக்குக் கார்காத்தார் என்னும் பெருமையுளதாயிற்று. இவ் வேளாளர் பெருமையைக் கம்பர் ஏரெழுபதாலும் படிக்காசுப் புலவர் தொண்டை மண்டலத்துச் சதகத்தாலும் மேற்கண்டவாறு கூறியிருக்க, இந்தக் கதையில், அவ்வேளாளரை ஆதொண்டைச் சோழன் அருமையான துணையாக வைத்துக் கொண்டு, அவர்களுள், கொண்டை கட்டி வேளாளர், துளுவ வேளாளர், நீறுபூசி வேளாளர் என்று பிரித்து வைத்திருந்ததாகத் தெரிகிறது. இவ்வேளாண் மாக்களின் பெருமையைச் சம்பந்த மூர்த்திகளும் தமது தேவாரத்தில் புகழ்ந்துள்ளார்.

மறவர்—இவர்கள் ஒரு சாதியார். இச்சாதியார்களை முன்னம் மிகுதியாகப் பாண்டிய மன்னர்களின் கீழும், சோழ மன்னர்களின் கீழும் அடிமைத் தொழில் புரிந்து, அவ்வரசர்களின் படைவீரராக விருந்து பலவகையான பரிசுகளும் பெற்று வீரர்களாகவிருந்தவர்கள். இவ்வம்சத்தினர்கள் இப்போதும் மதுரை திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் மிகுதியும் வசித்து வருகின்றார்கள்.

வேடுவர்—இவர்கள் வனங்களில் வேட்டையாடுபவர்கள். இச்சாதியார் முன்னம் கொங்குநாட்டில் வனங்களில் குடிசைகள் கட்டிக்கொண்டு வசித்தவர்கள். இப்போது இச்சாதியார் வேட்டைக்காரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களை மிகுதியும் வேலூர் கோயம்புத்தூர் ஜில்லாக்களில் காணலாம். இவர்களைப்பற்றிக் கோயம்புத்தூர் ஜில்லா மான்யூல் வெகு வித்தாரமாகக் கூறும்.

துளுவ வேளாளர்—துளுவ தேசத்திலிருந்து தொண்டை நாட்டில் வந்து குடியேறியவர்கள்.

சோழிய வேளாளர்—சோழதேசத்திலிருந்து தொண்டை நாட்டில் வந்து குடியேறினவர்கள்.

கொண்டைகட்டி வேளாளர்—இவர்கள் வெளிதேசத்திலிருந்து இத்தொண்டை மண்டலத்திற்கு வந்து குடிபுகுந்தவர்களல்ல. ஆனால், இவ்வேளாளர் முன்னம் இத்தொண்டை மண்டலத்தில் வசித்து வந்த முன் குடிமிரைச் சேர்த்துக் கட்டும் குறும்பருடன் பழகி அவர்களைப் போலவே தாமும் தலைமயிரைக் கட்டி வந்தார்களாகையால், இவர்களைத் தொண்டை



மண்டல வேளாளரென்று பெயர் வைத்துக் கூப்பிடாமல், கொண்டை கட்டிய வேளாளர் என்று காரணப் பெயரிட்டு வழங்கினர். அந்நாள் முதலாக அவர்களுக்குக் கொண்டை கட்டி வேளாளரெனப் பெயர் வந்தது. இவர்கள் பெரும்பாலும் காஞ்சீபுரம் ஆறுகாடு முதலிய விடங்களில் இருக்கிறார்கள்.

கருணாகரத் தொண்டைமான்—இவன் சோழர்களிடத்தில் வெகுகாலம் வரையில் மந்திரியாக விருந்தானென்றும், சேனாதிபதியாக விருந்தானென்றும், கலிங்கத்து பரணியாற் றெரிகின்றது. இச்சரிதத்தில் சம்பந்தப்பட்டவன் எனத் தெரிகிறது.

---

# குறிப்புகள்.

---

காஞ்சீபுரம்—இது முத்தித்தலங்கள் ஏழில் ஒன்று. இது பல சைவ வைணவ அடியார்களால் பாடப்பெற்றும், பல்லவ அரசர்களாலும், சோழவரசர்களாலும் ஆளப்பட்டும், அவர்களுக்கு இராஜதானியாகவு மிருந்தது. இதில், பல விஷ்ணுவாலயங்களும் சைவவாலயங்களும் இன்றைக்கும் ஓங்கி விளங்குகின்றன.

திருக்கழுக்குன்றம்—இது ஒரு பெரிய பாடல் பெற்ற சிவத்தலம். இத்தலத்தினது பெருமையை உணராதவர் ஒருவருமில்லை; இதில் எழுந்தருளியிருக்கும் வேதபுரீசுவரனின் பெருமையை இச்சரிதம் விளக்குகின்றது.

நெல்விடயாளையம்—இக்கிராமம் இப்பொழுதும் ஒருச் ரது ஆளுகையிலேயே ஜமீனாக இருந்து வருகிறது.

மல்லைபுரம்—இதைத் திருக்கடன் மல்லை என்று சொல்லு கிறார்கள். இது பாடல் பெற்றதொரு விஷ்ணுத்தலம் இதில், பல்லவ அரசர் அரசாட்சி புரிந்தவரென்றும், பலவரசர்களுக்கு இராஜதானியாக விருந்ததென்றும் சரிதவாராய்ச்சிக்காரர் கூறுகின்றனர். இதில், ஒரு சிவஸ்தலமு மிருக்கிறது.

ஒரகடம்—இக்கிராமத்தில் ஒரு குன்றுண்டு; அதின் மேல் சோழனுற் கட்டப்பட்ட ஒரு சிவன் கோயிலிருக்கிறது. ஊருக்குச் சமீபத்தில் ஒரு விஷ்ணுகோயிலு மிருக்கிறது. அக்கோவிலின், கற்சுவர்களில் சில பழைய சரிதங்கள் வரை யப்பட்டிருக்கிறது; இக்கிராமமே முன்னம் காந்தவராயனுக்கு நவபத்து அடிப்பதற்கு இடமாக விருந்தது.

திருவிடைச்சுரம்—இக்கிராமத்தை இப்பொழுதும் திருச் சுரம் என்றே கூறுகின்றனர். இவ்வூரே காந்தவராயனுக் இராஜதானியாக விருந்தது. இங்கு ஒரு சிவாலயமிரு கிறது. அதில் எழுந்தருளியிருக்கும் சுவாமியின் பெயர் ஞா புரீசுவரன். ஒரு இடிந்த பழைய கோட்டையுங் காணப்ப கிறது.

பிணையூர்—இக்கிராமம் முன்னம் சரிதத்தில் கூறியவாறே இன்னமும் வழங்குகிறது. இவ்வூரில் முன்னம் பல தாலிக வசித்ததாயும், அவர்களைப் பின்னர் காந்தவராயன் தம இப்பெயருடைய ஊரின் ஏரிக்கரையில் மாட்டைப் பிணைப்ப போல் பிணைத்துக் கொன்றுபோட்டா னென்றும், அதனு



பரன், அவ்வூருக்கு இது காரணப் பெயராய் வழங்கி இருக் [illegible]ா மெனவும் தெரிகிறது.

நறும்பூர்—இவ்வூர் இப்பொழுதும் மாறுபெயரில்லா மலே வழங்கப்படுகிறது. இக்கிராமம் ஒரு வேளாளர் ஆளு கையிலேயே இருந்து வருகிறது. இக்கிராமத்திலே முன்னம் குறும்பர்கள் தமது குலாசாரத்திற்கு மாறி நடந்தவர்களைத் தலை துணித்ததாகத் தெரிகிறது.

கோமாளம்—இவ்வூரின் விவரம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால் கோவளமே இப்பெயர் கொண்டதாகத் தெரிகிறது. முன்பு துறைமுகமாக விருந்த தென்பர். இதில் ஒரு கோட் டையும் அலைவாயிற் காணப்படுகின்றது.

77918
U211CL
N27

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.